Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன் (Sinhala script)

மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 153 குரோதி வருடம், தை மாதம் 09 ஆம் திகதி புதன்கிழமை
(22.01.2025) ஹிஜ்ரி 1446, ரஜப் - 21, 0115 886187 - விலை ரூ.40 பக்கங்கள் 12

## நிதி குற்றப்பிரிவு மீண்டும் அடுத்த வாரம்



நிதி குற்றப்பிரிவு அடுத்த வாரம் மீண்டும் நிறுவப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால கூறினார். அதன்படி, குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் உள்ள 29,000 கோப்புகளில் இருந்து நிதிக் குற்றக் கோப்புகளை அந்தப் பிரிவுக்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார்.



## கமென்ட் கந்தர்...



மரங்கொத்தி கடைசியா வாழைமரத்தில கொத்திய கதையாப்போச்சுது அந்த எம்.பியின் கதை...

# பயணத்தடை பெயரில் சதி!

## சிறிதரன் எம்.பி. சபையில் முறைப்பாடு சுமந்திரனையும் விசாரிக்கக் கோரிக்கை





### சிறிதரனின் முறைப்பாடு குறித்து விசாரணை

அரச தரப்பில் அறிவிப்பு

### சிறிதரனுக்கு அநீதி இழைப்பு

ஹக்கீம் சபையில் சுட்டிக்காட்டு



» 02 பக்கம்

## நாமல் எம்.பியால் சபையில் சர்ச்சை

கிளீன் ஸ்ரீலங்கா திட்டம் தொடர்பாக எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்‌ஷ ஆளுங்கட்சி எம்.பிக்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்டதால் சபையில் இருதரப்பினருக்குமிடையே கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தின் போதே நாமல் ராஜபக்‌ஷ எம்.பி. அரசாங்கத்துடன் தர்க்கத்தில் ஈடுபட்டார். இதன்போது அவர் கூறுகையில், » 02 பக்கம்

## இன்னும் 06 மாதங்களில் பாதுகாப்பு தேடுவீர்கள்



### ஆளுங்கட்சியை எச்சரித்தார் சாமர எம்.பி.

''எதிர்க்கட்சியிலுள்ள எங்களுக்கு பாதுகாப்பு அவசியமில்லை. அரசாங்கத்திலுள்ளவர்களுக்கே பாதுகாப்பு தேவைப்படுகின்றது. இன்னும் ஆறு மாதங்களில் அவர்கள் பாதுகாப்பைத் தேடும் நிலைமை... » 02 பக்கம்

## ජාතික ජන බලවේගය தேசிய மக்கள் சக்தி JATHIKA JANA BALAWEGAYA (NPP)

## கூட்டுறவுத் தேர்தலில் என்.பி.பி. தோல்வி

மாதம்பாகம கூட்டுறவு சமாச பிரதிநிதிகளை தெரிவு செய்து கொள்வதற்காக நடத்தப்பட்ட தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளித்த குழு தோல்வியடைந்துள்ளது.

இதன்போது, எதிர்க்கட்சிக்கு ஆதரவாக செயற்பட்ட குழு 14 பிரதேசங்களில் 09 பிரதேசங்களை வெற்றிக்கொண்டுள்ளது.

தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளித்த குழுவினர் ஐந்து பிரதேசங்களில் மாத்திரமே வெற்றிகொண்டுள்ளனர்.

» 02 பக்கம்



» 03பக்கம்

## மஹிந்த ராஜபக்‌ஷ அவராகவே வீட்டிலிருந்து வெளியேறலாம்

### அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த கருத்து



நா.தினுஷா

"முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‌ஷ, அவருக்கு வழங்கப்பட்டுள்ள அரச இல்லத்திலிருந்து வெளியேற நாங்கள் கூறும்வரை காத்திருக்க வேண்டியதில்லை. அவராகவே அந்த வீட்டிலிருந்து வெளியேற முடியும்" - என்று அமைச்சரவைப் பேச்சாளர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். » 02 பக்கம்

## நீலாவணையிலும் மதுபானசாலை!

### மூடக்கோருகிறார் கோடீஸ்வரன் எம்.பி.



''நீலாவணையில் புதிதாக திறக்கப்படும் மதுபானசாலையை மூடுவதற்கு கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தின் கீழ் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற...

» 02 பக்கம்



## மீண்டும் அரியணையை கைப்பற்றிய ட்ரம்ப்

### அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக பதவியேற்பு

» 10 பக்கம்

## புதிய ஆட்சியில் பார் பெர்மிட் இல்லை

### அமைச்சர் பிமல் அறிவிப்பு

''மதுபானசாலைகளுக்கு சட்டரீதியில் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களை பலவந்தமான முறையில் இடைநிறுத்தினால் சட்டச் சிக்கல்களை ஏற்படுத்தும். ஏனெனில், அது சட்டரீதியான ஆவணமாகும்'' -என சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்னாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கிளீன் ஸ்ரீ லங்கா செயற்றிட்டம் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை முதல் நாள் விவாதத்தில் உரையாற்றிய தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட எம்.பி. கவீந்திரன் கோடீஸ்வரன் முன்வைத்த கடந்த அரசாங்கம் வழங்கிய மதுபானசாலை அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்வதாகக் கூறியே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. ஆனால், இதுவரை அதற்கான நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுக்கு...

» 02 பக்கம்




## அர்ச்சுனா எம்.பியை கைது செய்ய உத்தரவு




### அநுராதபுரம் நீதிமன்றம் பிறப்பிப்பு

» 02 பக்கம்

## அர்ச்சுனா...

மோட்டார் வாகன சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் ராமநாதன் அர்ச்சுனாவுக்கு எதிராக தீவிர விசாரணைகளை முன்னெடுக்க பொலிஸ் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இந்நிலையில், அவரை கைதுசெய்து சட்டத்தை அமுல்படுத்துமாறு அநுராதபுரம் நீதவான் நீதிமன்றம் நேற்று (21) உத்தரவிட்டுள்ளது.

அநுராதபுரம் - ரம்பேவ, ஏ – 20 பிரதான வீதியில் மோட்டார் வாகன சட்டத்தை மீறி பாதுகாப்பற்ற முறையில் வாகனம் செலுத்தியதாக கூறப்படும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் வாகனத்தை நிறுத்திய சந்தர்ப்பத்தில், உத்தியோகபூர்வ சாரதி அனுமதிப்பத்திரத்தை பொலிஸ் அதிகாரிகளுக்கு பெற்றுக்கொடுக்காமல் அதிகாரிகளை தவறான வார்த்தை பிரயோகித்து அவர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அர்ச்சுனா எம்.பிக்கு எதிராக நீதிமன்றத்துக்கு அறிவிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அநுராதபுரம் பொலிஸ் போக்குவரத்து பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

நேற்று முன்தினம் (20) இரவு அநுராதபுரம், ரம்பேவ திசையை நோக்கி அவரின் காரை செலுத்தியுள்ளதுடன், தடைகளின் மத்தியில் வீதியில் பயணித்துக்கொண்டிருந்த வாகனங்களை முந்திக்கொண்டு அபாயமான முறையில் அவர் வாகனத்தை செலுத்தியுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்தில் அர்ச்சுனா எம்.பி. பொலிஸ் அதிகாரிகளுடன் நடந்துகொண்ட விதம் தொடர்பான காணொளி சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. அதில்,

அர்ச்சுனா எம்.பி.:- நான் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்று சிங்கள மொழியில் கூறினாலும் உங்களுக்கு புரியவில்லையா? நான் தமிழர் என்பதால் என்னை நிறுத்தி விசாரணை செய்கிறீர்கள்.

பொலிஸ் அதிகாரி:- நாங்கள் அவ்வாறு எண்ணி இதனை செய்யவில்லை சேர். சிங்களம், தமிழ் என்ற வேறுபாடு எங்களிடம் இல்லை.

அர்ச்சுனா எம்.பி.:- சிங்களமொழி பேசும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக இருந்திருந்தால் அவ்வாறு செய்திருப்பீர்களா?

பொலிஸ் அதிகாரி:- எங்களுக்கு அப்படியொரு அவசியம் இல்லை.

அர்ச்சுனா எம்.பி.:- பாராளுமன்ற பாஸை உங்களுக்கு காண்பித்ததன் பின்னரும் என்னிடம் எனது தேசிய அடையாள அட்டையை கேட்கிறீர்கள்.

பொலிஸ் அதிகாரி:- அடையாள அட்டை அவசியமாகும்.

அர்ச்சனா எம்.பி.:- அடையாள அட்டையை கொடுக்காமல் இருப்பது எனது தவறா? பாராளுமன்றத்திலிருந்து இன்னும் எனக்கு தேசிய அடையாள அட்டை வழங்கப்படவில்லை. உங்களின் பெயரை கூறுங்கள்?

பொலிஸ் அதிகாரி:- உங்களின் சாரதி அனுமதிப் பத்திரத்தை ஒப்படையுங்கள். அதன் பின்னர் இதுதொடர்பில் தீர்வுக்கு வரக்கூடியதாக இருக்கும்.

அர்ச்சனா எம்.பி.:- நாட்டை வீணடித்துள்ளார்கள். அநுரகுமார திசாநாயக்க ஆட்சிப் பொறுப்பை ஏற்றதன் பின்னர் எங்களின் வாகனத்தை நாங்களே செலுத்திச் செல்லுகிறோம். அவ்வாறிருக்கையில், நடுவீதியில் நிறுத்தி சாரதி அனுமதிப்பத்திரத்தை கேட்டால் நாங்கள் எவ்வாறு பாராளுமன்றத்துக்கு செல்வது. பாராளுமன்றம் செல்லும்போது வாகனத்தை நிறுத்த முடியாது என்பது உங்களுக்கு தெரியாதா? உங்களின் கடமையை விட எனது கடமை பெரிதாகும். சிங்களம் புரிகிறதா?

பொலிஸ் அதிகாரி:- அதற்காக வீதி போக்குவரத்து சட்டங்களை மீறி வீதியில் பயணிக்க முடியாது சேர்.

அர்ச்சனா எம்.பி.:- அவ்வாறிருந்தால் நான் செய்த தவறு என்ன?

பொலிஸ் அதிகாரி:- நீங்கள் வி.ஐ.பி. மின்விளக்கை ஒளிரவிட்டுக்கொண்டு ஏனைய வாகனங்களுக்கு நெரிசலை ஏற்படுத்தும் வகையில் பயணிக்கிறீர்கள். அதன் காரணமாகவே நிறுத்தினோம்.

அர்ச்சுனா எம்.பி.:- பொய் கூற வேண்டாம்.

பொலிஸ் அதிகாரி:- பொய் கூறவில்லை. சட்டத்தை மீறி பயணித்ததாலேயே நாங்கள் நிறுத்தினோம்.

அர்ச்சுனா எம்.பி.:- உங்களின் பெயர்களை உறுதிப்படுத்துங்கள். தற்போது நான் உங்களுக்கு எதை காண்பிக்க வேண்டும். எனக்கு எதிராக எவ்வாறான வழக்கு வேண்டும் என்றாலும் தாக்கல் செய்யுங்கள். பாராளுமன்றம் சென்றுகொண்டிருக்கும்போது வீதியில் நிறுத்தி நீங்கள் எனக்கு இடையூறு இழைத்து விட்டீர்கள்.

பொலிஸ் அதிகாரி:- தற்போது பாராளுமன்றத்துக்கா சென்றுகொண்டிருக்கிறீர்கள்? எங்களுக்கு அது தெரியாது.

அர்ச்சனா எம்.பி.:- இல்லாவிட்டால் உங்களின் வீட்டுக்கா சென்றுகொண்டிருக்கிறேன். உங்களைபோன்று ஓரிருவர் தான் இவ்வாறு செய்கிறீர்கள். பாராளுமன்ற பாஸை காண்பித்தும் எனக்கு இடையூறு விளைவிக்கிறீர்கள்.

பொலிஸ் அதிகாரி:- இந்த பாஸ் ஒரு நகலாகும்.

அர்ச்சனா எம்.பி.:- உங்களுக்கு எந்தவொரு கல்வி தகைமையும் இல்லை. முட்டாள்கள்.

பொலிஸ் அதிகாரி:- பேசுவதற்கு கற்றுக்கொள்ளுங்கள். அரச உத்தியோகத்தர் ஒருவரை இவ்வாறு தரக்குறைவாக பேசுவது தவறாகும். பாராளுமன்ற உறுப்பினராக இருந்துகொண்டு எவ்வாறு வீதிச் சட்டங்களை மீறிச் செல்கிறீர்கள். வி.ஐ.பி. மின்விளக்குடன், ஒழுங்குவிதிகளை மீறிச் செல்கிறீர்கள்.

அர்ச்சனா எம்.பி.:- நான் இதனை செய்யாவிட்டால் நீங்கள் செய்வீர்கள்.

பொலிஸ் அதிகாரி:- அனுமதியுடன் இதனை செய்திருந்தால் நாங்கள் கேட்டிருக்க மாட்டோம். நாங்கள் எங்களின் கடமையையே செய்கிறோம்.

அர்ச்சனா எம்.பி.:- உங்களுக்காக சபையில் சண்டையிடுகிறோம்.

பொலிஸ் அதிகாரி:- வீதி போக்குவரத்துச் சட்டங்கள் சகலருக்கும் பொதுவானதாகும். நீங்கள் உள்ளிட்ட சகலருக்கும் ஒரே சட்டத்தையே பின்பற்றுகிறோம்.

அர்ச்சனா எம்.பி.:- ஜனாதிபதி செல்லும்போதும் நிறுத்துவீர்களா?

பொலிஸ் அதிகாரி:- அதற்கான அவசியம் என்ன இருக்கிறது. நீங்கள் உங்களின் அடையாள அட்டையையும் சாரதி அனுமதிப்பத்திரத்தையும் வழங்கினால் போதுமானதாக இருக்கும்.

இவ்வாறு அர்ச்சுனா எம்.பி. பொலிஸாருடன் வாக்குவாதம் செய்துள்ளார்.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## நீலாவணையிலும்...

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு வலியுறுத்திக் கூறினார்.

அதன்போது அவர் மேலும் கூறுகையில்,

கிளீன் ஸ்ரீலங்கா ஊடாக இந்த நாட்டை சிறப்பாக நடத்த முன்னெடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் எங்களாலான அனைத்து ஒத்துழைப்புக்களையும் வழங்குவதற்கு தயாராகவே இருக்கின்றோம். இன்று கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு முன்னால் நீலாவணை மக்கள் ஒன்றுகூடி கிட்டத்தட்ட 500 பேருக்கும் மேற்பட்டோர் மதுபானசாலையை ஒழிப்பதற்காக கிளீன் ஸ்ரீ லங்கா திட்டத்தின் முன்னேற்பாடாக நீலாவணையில் அமைக்கப்பட்ட மதுபானசாலைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்.

அங்கே மதுபானசாலை அமைக்கப்படுமாக இருந்தால் மாணவர்களும் மற்றும் கூலித்தொழிலாளர்கள் உள்ளிட்ட தொழிலாளர் வர்க்கத்தினரும் பாதிப்படையும் நிலை உள்ளது. மூன்று மாதத்துக்கு முன்னர் குறித்த மதுபானசாலை திறக்கப்பட்ட நிலையில் மக்களின் எதிர்ப்பு காரணமாக மூடப்பட்டது. ஆனால் தற்போது அதனை திறப்பதற்காக குறிப்பிட்ட நிறுவனமொன்று முன்னேற்பாடுகளை செய்கின்றது. அதற்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்.

மக்கள் கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்துக்கமைய போராடுகின்றனர். மக்களுக்குரிய ஒத்துழைப்பை அரசாங்கம் வழங்க வேண்டும்.

மதுபானசாலைகளுக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்வோம் என்று கூறிவந்த அரசாங்கம் பாராளுமன்றத் தேர்தலும் நடைபெற்ற பின்னர் இன்று மதுபானசாலையை அமைக்கும் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது. இதனை தடுத்து நிறுத்த வேண்டும். இதனால் மக்கள் பாதிப்படையும் நிலைமை உள்ளது. நிச்சயமாக அரசாங்கம் மதுபானசாலையை அந்த பிரதேசத்தில் இருந்து அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேவேளை பழைய ஆட்சிக்காலத்தில் செய்யப்பட்ட தவறுகளை நிவர்த்தி செய்யவே மக்கள் ஆணையை வழங்கியுள்ளனர். இதனால் அரசாங்கம் மக்களுக்கு பாதிப்பான வகையில் அமைக்கப்பட்டுள்ள மதுபானசாலைகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். எமது மக்கள் உங்களுக்கு பெருமளவுக்கு வாக்களித்துள்ளனர். அவர்களை ஏமாற்றக்கூடாது.

அத்துடன் ஆலையடிவேம்பு பல்நோக்கு கூட்டுறவு சங்கத்துக்கு சொந்தமான இரண்டு கட்டிடங்களை 2020ஆம் ஆண்டில் இலங்கை தரைப்படையினர் வலுக்கட்டாயமாக இயக்குனர் சபை மற்றும் பொதுச் சபையின் அனுமதியின்றி அபகரித்துள்ளனர். ஏற்றுக்கொள்ள முடியாத வகையில் இந்த காணியை அபகரித்துள்ளமை கவலைக்குரியது. அந்த காணி மக்களின் சொத்தே. 1960ஆம் ஆண்டு முதல் பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தின் ஊடாக பராமரிக்கப்பட்டு வந்த இடமே. அத்துடன் நெல் கொள்வனவு மற்றும் நெல் சுத்திகரிப்பு உபகரணங்களையும் பொருத்தியிருந்தனர். இந்நிலையிலேயே அதனை படையினர் அபகரித்துள்ளனர். மக்களின் சொத்தை கொடுக்க நடவடிக்கை எடுக்கவும் அங்கு தொழில் செய்தவர்கள் தொடர்பிலும் கவனம் செலுத்துமாறும் கேட்டுக்கொள்கின்றோம் என்றார்.

## புதிய ஆட்சியில்...

பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க மேலும் பேசுகையில்,

தேசிய மக்கள் சக்தி தலைமையிலான எமது அரசாங்கம் புதிதாக மதுபானசாலை அனுமதிப் பத்திரங்கள் எவற்றையும் வழங்கவில்லை வழங்கப்பட்ட மதுபானசாலை அனுமதிப்பத்திரங்களில் பெரும்பாலானவை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் வழங்கப்பட்டவையாகும். அத்துடன் அவ்வாறு வழங்கப்பட்ட மதுபானசாலை அனுமதிப் பத்திரங்கள் குறித்து பாராளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு ஹன்சாட்டில் பதியப்பட்டுள்ளது.

மதுபானசாலை அனுமதிப்பத்திரங்கள் சட்டரீதியில் வழங்கப்பட்டுள்ளதனால் அது சட்டரீதியான ஆவணமாகும். அரசியல் ரீதியில் விருப்பமில்லாவிடினும் அதனை இரத்துச் செய்வது சட்ட ரீதியிலான சிக்கல்களை ஏற்படுத்தும். அரசாங்கத்துக்கு பலவந்தமான முறையில் அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்ய முடியாது. இவ்வாறான பழைய குப்பைகளை கிளீன் செய்யவே முயற்சிக்கிறோம் என்றார்.

## இன்னும்...

உருவாகும் என்று புதிய ஜனநாயக முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதன்போது அவர் மேலும் கூறுகையில்,

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வுக்காக 70 இலட்சம் ரூபா செலவாகியுள்ளது என்று நான் கூறிய கருத்தில் மாற்றமில்லை. அதே நிலைப்பாட்டிலேயே இருக்கின்றேன். நான் இந்த விடயத்தை கூறிய மறுநாளே சிரேஷ்ட கணக்காய்வாளர், கணக்காளர் ஆகியோரை ஜனாதிபதி செயலாளர் அழைத்து அந்த செலவுகளை 09 இலட்சமாக மாற்றியுள்ளனர். இதனை நான் எந்த இடத்திலும் கூறுவேன். அத்துடன் கிறிஸ்மஸ் தினத்தில் காலி முகத்திடலில் மின்விளக்கு, ட்ரோன் கண்காட்சி ஆகியன நடத்தப்பட்டுள்ளன. இதற்காக ஹனீப் யூசுப் என்ற உங்களின் ஆளுநர் பணம் செலவழித்துள்ளார். ஆளுநருக்கு இந்தளவு செலவு செய்ய என்ன தேவையுள்ளது?

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் நல்ல திட்டம்தான். ஜனவரி முதலாம் திகதி அந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இந்தக் காலப்பகுதியில் 10 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களும் 07 மனித கொலைகளும் நடந்துள்ளன. அண்மைக் காலத்தில் அதிகளவான துப்பாக்கிச்சூடுகள் ஜனவரி முதலாம் திகதி முதல் 15ஆம் திகதி வரையிலான காலப்பகுதியிலேயே நடந்துள்ளன. கிளீன் ஸ்ரீலங்கா என்றால் மக்களுக்கு சுதந்திரமாக வாழக்கூடிய சூழல் உருவாக வேண்டும். அப்போதே நாடும் மக்களும் தூய்மையாவர். முதலில் பாதாள குழுக்களையும் போதைப்பொருட்களையும் ஒழிக்க வேண்டும். குப்பைகள் எடுப்பதை பின்னர் செய்யலாம். பிலிப்பைன்ஸ் எவ்வாறு இருக்கின்றது என்பதனை பாருங்கள். 02 வருடங்களுக்கு முன்னர் இருந்த பிலிப்பைன்ஸ் இப்போது இல்லை. அது போன்று இலங்கையை தூய்மையாக மாற்றுங்கள்.

தற்போதைய ஜனாதிபதியே நாட்டில் இதுவரை நியமிக்கப்பட்ட ஜனாதிபதிகளில் இளமையானவர். ஆனால் இந்த ஜனாதிபதி களுத்துறையில் ஆற்றிய உரையை பாருங்கள். முடிந்தால் மஹிந்த ராஜபக்ஷவின் வீட்டை எடுத்துக்காட்டுங்கள். 47 இலட்சத்துக்கு வாடகைக்கு வழங்கி காட்டுங்கள். அதனை கொண்டை கட்டிய சீனர்களுக்குதான் கொடுக்கலாம். மஹிந்த ராஜபக்ஷ அந்த வீட்டில் இருந்து வெளியில் போனாலும் அவருக்கு வீட்டை வழங்க பலரும் உள்ளனர். சந்திரிகாவின் குடும்பத்தினரே இந்த நாட்டுக்கு காணிகளை பகிர்ந்து கொடுத்துள்ளனர். அவர்கள் வீட்டை விட்டு போனார்கள் என்றால் அவர்களின் பெயர்கள் இல்லாமல் போகாது.

இதேவேளை மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பையும் நீக்கிக்காட்டுங்கள். அவருக்கு பாதுகாப்பு வழங்க தெற்கிலிருந்து வேண்டியளவு மக்கள் வருவார்கள். மைத்ரிபால சிறிசேன, சந்திரிகா எவராக இருந்தாலும் அவர்கள் இந்த நாட்டின் முன்னாள் தலைவர்களே. ஜனாதிபதி தும்முலை விமலே போன்றே நடந்துகொள்கின்றார். அவ்வாறு நடந்துகொள்ள வேண்டாம்.

இதேவேளை எங்களுக்கு பாதுகாப்பு வழங்கப் போவதில்லை என்றும் கூறியுள்ளனர். எங்களுக்கு பாதுகாப்பு தேவையில்லை. வேண்டுமென்றால் அரசாங்கத்தில் உள்ளவர்களுக்கு கொடுங்கள். இன்னும் ஆறு மாதங்களில் உங்களுக்கே பாதுகாப்பை தேட வேண்டி வரும்.

அத்துடன் மஹிந்த ராஜபக்ஷவுடன் சண்டையிட்டு பலனில்லை. அவரின் மகன் இருக்கின்றார் அவருடன் மோதுங்கள். சந்திரிகாவுடன் சண்டையிட்டும் பலனில்லை. அவர்கள் வயது போனவர்கள். எதிர்கால தலைவர்கள் பலர் உள்ளனர். அவர்களுடன் மோதுங்கள் என்றார்.

## கூட்டுறவு...

இதேவேளை, கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் அமோக வெற்றியீட்டிய தேசிய மக்கள் சக்தி, அண்மையில் ஹோமாகம கூட்டுறவுத் தேர்தலில் படுதோல்வியைச் சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதன்படி, ஹோமாகமவிலுள்ள 59 கூட்டுறவு சமாசங்களில், தேசிய மக்கள் சக்தியால் 17 சமாசங்களை மட்டுமே வெல்ல முடிந்துள்ளது.

## நாமல்...

கிளீன் ஸ்ரீ லங்கா திட்டம் தொடர்பில் பிரதமர் பதில்களை வழங்கினார். ஆனால் இந்த திட்டத்தின் நோக்கம் மற்றும் இதனை செயற்படுத்தும் முறை தொடர்பில் உங்கள் கட்சியிலுள்ள 159 பேருக்கும் மற்றும் அதனை செயற்படுத்தும் நிறுவனங்களுக்கும் அதன் அதிகாரிகளுக்கும் போதுமான தெளிவு இருக்குமா என்பது கேள்வியாக உள்ளது. பலரும் இந்த திட்டம் தொடர்பில் பல்வேறு கருத்துகளை கூறுகின்றனர். அதனை செயற்படுத்தும் முறை தொடர்பில் சம்பந்தப்பட்ட நிறுவன பிரதானிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனவா? என்ற கேள்விகளும் எழுகின்றன.

அத்துடன் கிளீன் ஸ்ரீ லங்கா திட்டத்தையே மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் கோட்டாபய ராஜபக்ஷ வேறு முறையில் முன்னெடுத்தார். இராணுவத்தினரை பயன்படுத்தி கால்வாய்கள் சுத்தம் செய்யப்படுவதாகவும், கொழும்பு நகரை அழகுப்படுத்துவதாகவும் நீங்களே அன்று குற்றச்சாட்டுகளை முன்வைத்தீர்கள். அவ்வாறு குற்றச்சாட்டுகளை முன்வைத்த நீங்களே இன்று கிளீன் ஸ்ரீலங்கா என்ற பெயரில் அதே வேலையை அவ்வாறே செய்கின்றீர்கள். அரசாங்கம் மாறும் போது அது இடைநிறுத்தப்படுகின்றது. இதற்கு நிலையான தீர்வு வேண்டும்.

இதேவேளை ஆட்டோ மற்றும் பஸ்களில் மேலதிக பாகங்களை அகற்றுகின்றீர்கள். பின்னர் சட்டத்தை காட்டி பணத்தை செலுத்தினால் பிரச்சினை முடிந்தது என்கிறீர்கள். அவ்வாறு பணத்தை கொடுத்தால் விபத்துக்கள் நடக்காதா? இதனால் குறைந்தது கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தை செயற்படுத்தினால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவியுங்கள் என்றார்.

இதன்போது எழுந்த சபை முதல்வரான அமைச்சர் பிமல் ரத்நாயக்க கூறுகையில்,

போக்குவரத்து அமைச்சர் நானே. பணம் கொடுத்தால் பிரச்சினை தீரும் என்று யார் கூறியது என்பதனை கூறுங்கள்? என்றார்.

இவ்வேளையில் மீண்டும் கூறிய நாமல் ராஜபக்ஷ, இதனை ஸ்ரீலங்கா பொலிஸாரே கூறினர். இதனை நான் கூறியதற்காக பொலிஸாருடன் பிரச்சினை ஏற்படுத்த வேண்டாம். உங்களின் ஜனாதிபதி இராணுவத்தினர் கொலை செய்வதாக கூறுகின்றார். அவை தொடர்பில் பாதுகாப்பு சபையில் கதைக்கலாம். அவற்றை அரசியல் மேடைகளில் பேச வேண்டாம்.

இவ்வேளையில் எழுந்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால கூறுகையில்,

பொலிஸார் அவ்வாறு எதனையும் கூறவில்லை. தாஜுதீனை கொலை செய்தது யாரென நாட்டுக்கு தெரியும். தாஜுதீன் மற்றும் லசந்த விக்கிரமதுங்கவை கொலை செய்த கொலையாளி இங்கே கொலைகள் தொடர்பில் கதைக்கின்றார். நாமலுக்கு கொலைகள் தொடர்பில் கதைக்க எந்த அருகதைகளும் கிடையாது என்றார்.

இதன்போது மீண்டும் உரையாற்றிய நாமல் ராஜபக்ஷ,

நான் ஜனாதிபதி கூறியதையே கூறினேன். நீங்கள் இப்போது பொலிஸாருக்கு பொறுப்பான அமைச்சராகவும் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் ஊழல் மோசடி குழுவின் தலைவராகவும் இருந்தவர். அப்போது இவரே விசாரணை நடத்தினார். இந்த பிரச்சினைகள் தொடர்பில் அவதானத்தை செலுத்துங்கள். நான் எதிர்க்கட்சி எம்.பி. மக்களுக்காக கேள்வியெழுப்பும் அதிகாரம் உள்ளது. முதலில் நீங்கள் தூய்மையாகுங்கள். பின்னர் நாட்டை தூய்மைப்படுத்துங்கள். இது தொடர்பில் தெளிவுபடுத்துங்கள். உங்களின் அரசியல் நோக்கங்களை நிறைவேற்ற கிளீன் ஸ்ரீலங்கா என்று எதிர்க்கட்சியை அச்சுறுத்தி பிரச்சினைகளை தீர்க்கலாம் என்று நினைக்க வேண்டாம். நாங்களும் அப்படி நினைத்தோம். ஆனால் அதனை செய்ய முடியாது என்பதனை நாங்கள் புரிந்துகொண்டோம். அந்த தவறை ஏற்றுக்கொள்கின்றோம் என்றார்.

## சிறிதரனுக்கு...

''ஒருவருக்கு பயணத்தடை விதிப்பதென்றால் அவருக்கு எதிரான வழக்கு இருக்க வேண்டும். அவ்வாறு எதுவுமில்லாது சிறிதரன் எம்.பி. தடுத்துவைக்கப்பட்டு அவருக்கு பாரியதொரு அநீதி இழைக்கப்பட்டுள்ளது'' என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் எம்.பியுமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இலங்கை தமிழரசுக்கட்சியின் யாழ். மாவட்ட எம்.பியான சிறிதரன் தான் விமான நிலையத்தில் பயணத்தடை உள்ளதாகத் தெரிவித்து விமான நிலைய அதிகாரிகளினால் தடுக்கப்பட்டமை தொடர்பில் சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைத்த நிலையில் கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்த ரவூப் ஹக்கீம் எம்.பி. மேலும் கூறுகையில்,

தமிழக முதலமைச்சரின் அழைப்புக்கமைய அயலகத் தமிழர் நிகழ்வில் நானும் கலந்து கொண்டேன். விமான நிலையத்தில் பிரபுக்கள் முனையத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது நானும் அவ்விடத்தில் இருந்தேன்.

குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் அதிகாரிகள் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனை தடுத்து வைத்து அவருக்கு எதிராக பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டனர். பயணத்தடை விதிக்கப்பட்டிருந்தால் அதற்கான வழக்கினை குறிப்பிட வேண்டும். ஆனால் அதிகாரிகள் அவ்வாறு எதனையும் குறிப்பிடவில்லை.

பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்துச் செய்வதாக அரசாங்கம் குறிப்பிட்டது. ஆனால் இதுவரை அச்சட்டம் நீக்கப்படவில்லை. இந்த சட்டத்தின் பிரகாரம் செயற்படுவது தவறானது. விமான நிலையத்தில் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதன் பின்னர் சமரசத்துக்கு வந்தோம்.

பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் உரிமை மற்றும் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது. அவருக்கு பாரியதொரு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. ஆகவே முறையான விசாரணைகளை மேற்கொண்டு நியாயத்தை வழங்குங்கள் என்றார்.

## சிறிதரனின்...

''சிறிதரன் எம்.பி. கட்டுநாயக்க விமான நிலையத்தில் தடுக்கப்பட்ட சம்பவத்துக்கும் அரசுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. எனவே, இந்த சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்துமாறு உரிய தரப்பினருக்கு அறிவுறுத்தியுள்ளோம். சிறிதரன் எம்.பிக்கு ஏற்பட்ட இந்தச் சம்பவம் தொடர்பில் கவலையடைகின்றோம்'' என சபை முதல்வரும் சிவில் விமான சேவைகள் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட எம்.பியான சிறிதரன் விமான நிலையத்தில் பயணத்தடை உள்ளதாகத் தெரிவித்து விமான நிலைய அதிகாரிகளினால் தடுக்கப்பட்டமை தொடர்பில் சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைத்த நிலையில் இதற்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்த சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க மேலும் கூறுகையில்,

சிறிதரன் எம்.பி. முன்வைத்த சிறப்புரிமை மீறல் பிரச்சினை குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு விமான நிலையத் தலைவருக்கு அறிவுறுத்தியுள்ளேன். அத்துடன் பாதுகாப்பு பிரதி அமைச்சருக்கும் இவ்விடயம் தொடர்பில் ஆராயுமாறு அறிவுறுத்தியுள்ளேன்.

சிறிதரன் எம்.பி. முன்வைத்த விடயங்கள் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்துடன் தொடர்புபட்டது. ஆகவே இவ்விடயம் பாராளுமன்ற சிறப்புரிமை மீறல் குழுவில் விசாரணைக்குட்படுத்தப்படுமானால் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தை அழைக்க முடியும். சிறிதரன் எம்.பிக்கு விமான நிலையத்தில் ஏற்பட்ட சம்பவம் தொடர்பில் கவலையடைகின்றோம்.

இந்த சம்பவத்தில் பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவதாக குறிப்பிடுவது அடிப்படையற்றது. இவர் நாட்டுக்கு திரும்பி வருகையில் எவ்வித சிக்கலும் ஏற்படவில்லை. ஆகவே இவ்விடயத்தில் அரசாங்கத்தின் தலையீடோ தொடர்போ எதுவுமே கிடையாது என்றார்.

## பெயர் மாற்றம்

நுவரெலியா மாவட்டம் நோர்வூட் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள புரவுன்லோ கிராம உத்தியோகத்தர் பிரிவு இலக்கம் 320.N கிலன்டில் தோட்டத்தில் வசிக்கும் அடையாள அட்டை இலக்கம் 746631731V வானமகாதேவி சண்முகம் ஆகிய நான். பிறப்பு சான்றிதழ் இலக்கம் 2024 பெயர் வானமகாதேவி என்ற எனது பெயரை இன்று முதல் வானமகாதேவி சண்முகம் என திருத்தம் செய்து உள்ளேன் என்பதை இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு மற்றும் இலங்கை வாழ் மக்களுக்கும் இத்தால் அறியத்தருகிறேன்.

**ஒப்பம்:வானமகாதேவி சண்முகம்**

## பயணத்தடை...

***(சபை செய்தியாளர்)***

''இந்தியாவுக்கு நான் பயணம் மேற்கொண்டபோது கட்டுநாயக்க விமான நிலையத்தில் பயணத்தடை உள்ளதாகத் தெரிவித்து விமான நிலைய அதிகாரிகளினால் தடுக்கப்பட்டமை தொடர்பில் எனக்கு நீதி வழங்கப்பட வேண்டும். அத்துடன் அவ்வாறு தடுக்கப்பட்டமைக்கான காரணமென சில விடயங்களைக் கூறியுள்ள முன்னாள் எம்.பி. சுமந்திரனிடமும் விசாரணை நடத்தப்பட வேண்டும்'' என பாராளுமன்றத்தில் வலியுறுத்திய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட எம்.பியான சிவஞானம் சிறிதரன் இந்நடவடிக்கைகளின் பின்னணியில் பெரும் சதி இருப்பதாகவும் குற்றம்சாட்டினார்.

பாராளுமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை பிரதி சபாநாயகர் றிஸ்வி ஷாலி தலைமையில் கூடிய நிலையில் சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வத்தே இவ்வாறு வலியுறுத்திய சிறிதரன் எம்.பி. மேலும் பேசுகையில்,

தமிழ் நாடு அரசின் ஒழுங்கமைப்பில் கடந்த 11, 12 ஆம் திகதிகளில் சென்னை நந்தம்பாக்கத்தில் நடைபெற்ற அயலகத் தமிழர் தின நிகழ்வில் சிறப்பு விருந்தினராக பங்கேற்கும் பொருட்டு கடந்த 10ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக நான் இந்தியாவுக்கு பயணமாகியிருந்தேன். அன்றைய தினம் மாலை 6.35 மணிக்கு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் யூ.எல். 123 விமானம் புறப்படத் தயாராயிருந்த நிலையில் எனது கடவுச்சீட்டில் குறைபாடு உள்ளதாகவும் பயங்கரவாத குற்றத்தடுப்பு மற்றும் விசாரணைப்பிரிவினரின் விசாரணைகளுக்கு என்னை உட்படுத்த வேண்டுமெனவும் தெரிவித்த விமான நிலைய அதிகாரிகள் எனக்கு பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இதன்போது என்னுடன் இணைந்து பயணம் செய்வதற்காக விமான நிலையம் வருகை தந்திருந்த ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் எம்.பியுமான ரவூப் ஹக்கீம் மேற்கொண்ட முயற்சிகளின் பலனாக நீண்ட நேர விசாரணைகளின் பின்னர் விமானம் புறப்படத் தயாரான இறுதி நேரத்தில் என்னை இந்திய பயணத்துக்கு அனுமதித்தனர்.

13ஆம் திகதி நான் இந்தியாவிலிருந்து நாடு திரும்பியபோது குறித்த பயணத்தடை தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வினவியபோது அவ்வாறான பயணத்தடை எதுவும் என் மீது விதிக்கப்படவில்லை எனத் தெரிவித்திருந்தனர். நீதிமன்றக் கட்டளைகள் எதுவுமின்றி சபாநாயகரின் ஆலோசனை எதுவுமின்றி எனக்கு பயணத்தடை உள்ளதென குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளினால் தெரிவிக்கப்பட்டமை திட்டமிட்ட வகையிலான சிறப்புரிமை மீறல் என்றே நான் கருதுகின்றேன். மக்களினால் தெரிவு செய்யப்பட்ட ஒரு பாராளுமன்ற உறுப்பினராக எனக்கிருக்கும் அடிப்படை சிறப்புரிமையை மீறும் வகையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னணி குறித்து இந்த சபையில் நான் கேள்வி எழுப்புகின்றேன்.

அத்தோடு இன்னொரு முக்கிய விடயத்தையும் சபாநாயகரின் கவனத்துக்கு கொண்டு வருகின்றேன். இரு நாட்களுக்கு முன்னர் (19 ஆம் திகதி)யாழ்ப்பாணத்தில் தனியார் ஊடகமொன்றுக்கு பேட்டியளித்த முன்னாள் எம்.பி. சுமந்திரன், சிறிதரன் தடை செய்யப்பட்ட கனடாவிலிருந்து வருகின்ற அமைப்போடு பேச முனைந்ததாகவும் அதற்காகத்தான் அவர் சென்னை செல்ல இருந்ததாகவும் அந்த காரணத்தின் அடிப்படையில்தான் அவரை தடுக்க விமான நிலையத்தில் முயற்சி செய்திருக்கலாம். ஊக்கத்தின் அடிப்படையில் சிறிதரனை அவர்கள் மறித்திருக்கலாம். ஊடகங்களில் வெளிவந்த செய்திகளை வைத்துதான் நான் இதனைக் கூறுகின்றேன் என்று அதில் கூறியிருந்தார்.

எனவே இதுதொடர்பில் நீங்கள் சுமந்திரனிடம் விசாரித்தால் எந்த எந்த ஊடகங்களில் இந்த செய்தி வந்துள்ளது என்பதனை அறிந்து அந்த ஊடகங்களின் பிரதானிகளை விசாரிப்பதன் மூலம் உண்மையைக் கண்டறிய முடியும். இது எனக்கு எதிராக செய்யப்பட்ட மிகப்பெரும் சதியாகவே நான் கருதுகின்றேன். விமான நிலையத்தில் தடுக்கப்பட்டமை தொடர்பில் சிறிதரன் தனக்கு தெரிவிக்கவில்லை என்றும் சுமந்திரன் அதில் கூறியுள்ளார். நான் அவரை சென்னையில் சந்தித்தபோது சுமந்திரனும் இது தொடர்பில் என்னிடம் எதுவும் கேட்கவும் இல்லை.

இதனை விட வடக்கு மாகாண சபையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஒரு உறுப்பினராக இருந்த அயூப் அஸ்மின் என்னை விமான நிலையத்தில் தடுத்த அன்றைய தினமான 10ஆம் திகதி தன்னுடைய பேஸ்புக்கில் கடந்த நாட்களில் எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் விமான நிலையத்தில் எவ்வித இடையூறுகளும் எவராலும் ஏற்படுத்தப்படவில்லை. அவ்வாறு பரப்பப்படுகின்ற செய்திகளில் உண்மைகள் எதுவும் இல்லை. -விமான நிலைய உயரதிகாரியே பயணத் தடை என்ற செய்தியை வெளியிட்டுள்ளார்.

நான் இந்தியாவிலுள்ள பிரபல அரசியல் தலைவர் செந்தமிழன் சீமானுடன் இருக்கும் படத்தையும் தன்னுடைய பேஸ்புக்கில் போட்டு எனக்கு எதிராக இந்தச் செய்தியை அவர் பரப்பியுள்ளார். அஸ்மினும் சுமந்திரனும் நெருங்கிய நண்பர்கள். சுமந்திரன் சொன்ன செய்திக்கும் அஸ்மின் போட்டுள்ள பதிவுக்கும் ஏதோ ஒரு சங்கதி இருப்பதுபோல் எனக்குத் தெரிகின்றது. என்னை அந்த நிகழ்வுக்கு போக விடாது தடுப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆகவே இதற்குப் பின்னால் சதி உள்ளது. எனவே இவ்விடயத்தில் மிகக்கூடிய கவனம் எடுத்து விசாரிக்கப்பட வேண்டும். இதேவேளை என்னுடைய தனிப்பட்ட பாதுகாப்பு அதிகாரி ஜி.ஜி.பி.ரத்னகுமார. இவர் என்னுடன் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக மெய்ப்பாதுகாவலராக இருந்தார். திடீரென சென்ற வாரம் அவர் மாற்றப்பட்டுள்ளார். இது தொடர்பாக நான் கடந்த 08ஆம் திகதி பொலிஸ் மா அதிபரிடம் நேரடியாக கடிதம் வழங்கியிருந்தேன். அதன் பிரதியை சபா பீடத்துக்கு சமர்ப்பிக்கின்றேன். இதுவரை அந்த அதிகாரியை மீண்டும் எனக்கு நியமிக்கவில்லை. அஸ்மினின் பேஸ்புக் பதிவையும் நான் சபாபீடத்தில் சமர்ப்பிக்கின்றேன். சுமந்திரன் வழங்கிய பேட்டியை கொண்ட பென்டிரைவையும் சபா பீடத்தில் சமர்ப்பிக்கின்றேன்.

இது என் மீது புனையப்பட்டுள்ள மிகப்பெரிய மோசடி. நான் எந்தவொரு காலத்திலும் இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ள கனடாவிலுள்ள அமைப்புடன் பேசுவதற்கு தயாராகவில்லை. அப்படி யாரும் என்னைக் கேட்டதுமில்லை. அவ்வாறான முயற்சி எதுவும் மேற்கொள்ளப்படவும் இல்லை. அரசின் பேச்சாளர் போல் அல்லது புலனாய்வுத்துறையின் பேச்சாளர் போல் ஊகத்தின் அடிப்படையில் ஊடகங்களில் வந்தது என சுமந்திரன் குறிப்பிட்டுள்ளது மிகப்பாரதூரமானது.

எனக்கு நீதி வேண்டும். சர்வதேச பாராளுமன்றத்திடமும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமும் சர்வதேச மன்னிப்புச் சபையிடமும் இக்கோரிக்கையை முன்வைக்கின்றேன். பாராளுமன்றத்திடமிருந்து எனக்கு நீதி கிடைக்குமென நம்புகின்றேன். எனவே நீதியான நேர்மையான விசாரணைக்கு எனது விடயத்தை உட்படுத்த வேண்டும். எனக்கு இதற்கான வழியை சொல்ல வேண்டும் என்றார்.

இதற்கு பதிலளித்த பிரதி சபாநாயகர் றிஸ்வி ஷாலி, இவ்விடயத்தை சபாநாயகரின் கவனத்துக்கு கொண்டு சென்று சிறப்புரிமைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தி உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமென உறுதியளித்தார்.

## மஹிந்த ராஜபக்ஷ...

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (21) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

ஜனாதிபதிகளின் உரிமைச் சட்டம் நிறைவேற்றிய காலப்பகுதியில் மஹிந்த ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் இருக்காவிட்டாலும் அதன் பின்னர் நீண்ட நாட்கள் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்துள்ளார். இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தபோதும் ஜனாதிபதியாகவும் இருந்துள்ளார்.

ஆகவே இந்தச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் புரிந்துக்கொள்ள முடியுமென நம்புகிறோம். எனவே, நாங்கள் கூறும்வரை காத்திருக்க வேண்டியதில்லை. அவராகவே அந்த வீட்டிலிருந்து வெளியேற முடியும்.

சட்டத்தின் பிரகாரம் பொருத்தமான வீடொன்றை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும், வீட்டின் உறுதிப்படுத்தப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் 46 இலட்சம் ரூபா பெறுமதியான வீட்டையே பெற்றுக்கொடுக்க வேண்டுமென்று சட்டத்தில் எங்கும் குறிப்பிடவில்லை. குடும்பத்தை இதில் உள்ளடக்க முடியாது. அரசாங்கத்தால் வழங்கக் கூடிய வீட்டையே வழங்க முடியும். அவருக்கு மூன்று பிள்ளைகள் இருப்பதால் பெற்றோரை அவர்கள் கவனித்துக்கொள்வார்கள் என்று கருதுகிறோம்.

இந்தச் சட்டமே ஏனைய சகல முன்னாள் ஜனாதிபதிகள், அவர்களின் உறவினர்களுக்கும் பொருந்தும். இந்த சலுகைகளை நீக்கிவிட்டு மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள அரசியல்வாதிகளின் சுமையை குறைக்குமாறு கூறியே மக்கள் எங்களுக்கு வாக்களித்தார்கள். தான் ஜனாதிபதி அல்லது ஜனாதிபதியொருவரின் உறவினர் என்பதால் அரசாங்கத்தால் தனக்கு வீடொன்று வழங்கப்படவேண்டும். அரசாங்கம் தன்னை பாதுகாக்க வேண்டும் என்று யாராவது கூறுவார்களாக இருந்தால் அது நீதியானதாக இருக்காது என்றார்.

# தினசரி பலாபலன்கள்

**குரோதி வருடம் தை மாதம் 09ஆம் நாள் புதன்கிழமை**

**மேஷம்** கூட்டு வியாபாரத்தில் இலாபம் உண்டு. தடைப்பட்ட திருமணம் உறுதிப்படுத்தப்படும் நாள். மனைவி அல்லது காதலியால் மகிழ்ச்சி.

**ரிஷபம்** நினைத்த காரியத்தில் வெற்றி கிட்டும். நீண்ட நாள் கடனை இன்று அடைப்பீர்கள். எதிரிகளை அடக்கியாள்வீர்கள்.

**மிதுனம்** புத்திரர்களால் வீண் தொல்லையும் கவலையும் உண்டு. மனதைப் போட்டு குழப்பிக்கொள்வீர்கள். உடல் நலம் கவனம்.

**கடகம்** எதிர்பாராத விபத்துகள் ஏற்படலாம். வீடு, வாகனம் விற்பது வாங்குவது கவனம். தாய்வழிச் செலவுகள் தோன்றும்.

**சிம்மம்** வேற்றுமொழி நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். மனத்துணிவுடன் அனைத்தையும் சாதித்து வெற்றிபெறுவீர்கள்.

**கன்னி** குதர்க்கமான பேச்சால் தொழில் ரீதியில் அவமானம், அபகீர்த்தி ஏற்படும்.குடும்பத்தில் தேவையற்ற குழப்பநிலைகள் உருவாகும்.

**துலாம்** குடும்பத்தில் மங்கள காரியங்கள் நடைபெற்று மகிழ்ச்சி பிறக்கும். நோயிலிருந்து விடுதலையடைவீர்கள்.

**விருச்சிகம்** தேவையற்றவர்களின் நட்பால் தொல்லைகள் உருவாகும். உணவு, உறக்கம் தேடிப் போனாலும் கிடைக்காது.

**தனுசு** தொழில் வியாபாரத்தில் அதிக இலாபங்களைப் பெறுவீர்கள். எதிர்பாராத தன வரவால் மகிழ்ச்சியடைவீர்கள்.

**மகரம்** தொழில் மூலமாக பதவி உயர்வுகள், சம்பள உயர்வுகள் அமையும். புதிய பதவிகள் வந்துசேரும்.

**கும்பம்** பூர்வீக சொத்துகளால் வில்லங்கம் ஏற்படும். தந்தைக்கும் உங்களுக்கு மிடையிலான உறவு பாதிக்கப்படும்.

**மீனம்** திட்டமிட்ட காரியங்கள் அனைத்தும் மந்த நிலையை அடையும். வாய்ப்பேச்சால் வீண் பிரச்சினைகள்.

**திதி:** அட்டமி பி.ப.3.18 வரை பின் நவமி
**நட்சத்திரம்:** சுவாதி பி.இ.2.34 வரை பின் விசாகம்
**பிறை:** தேய்பிறை
**யோகம்:** மரண யோகம் பி.இ.2.34 வரை பின் சித்த யோகம்
**வார சூலை:** வடக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது
**நல்ல நேரம்:** காலை 6.28 – 7.28 மணி வரை காலை 9.28 – 10.28 மணி வரை
**ராகு காலம்:** 12.28 – 1.58 மணி வரை
**எமகண்டம் :** 7.58 – 9.28 மணி வரை
**குளிகை :** 10.28 – 12.28 மணி வரை
**சந்திராஷ்டமம்:** மீன ராசியினர் எச்சரிக்கையாகச் செயல்படவும்

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று பின்னிரவு 2.34 மணி வரை**
அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், மகம், உத்திரம், சித்திரை, விசாகம், அனுஷம், மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, உத்திரட்டாதி

**இன்று பின்னிரவு 2.34 மணிக்கு மேல்**
பரணி, ரோஹிணி, திருவாதிரை, பூசம், ஆயிலியம், பூரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், கேட்டை, பூராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்குத் தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும்.**



**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி :
077-0525325
078-6759739

# மாபியாக்களை இல்லாதொழிப்பதற்கு கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தை அமுல்படுத்துக

## நளின் பண்டார எம்.பி. வலியுறுத்து



அரிசி, மின் மாபியாக்களை இல்லாதொழிப்பதாக அரசாங்கம் கூறியது. ஆனால், இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. ஆகவே, மாபியாக்களை இல்லாதொழிப்பதற்கு கிளீன் ஸ்ரீலங்கா செயற்றிட்டத்தை அமுல்படுத்துமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பியான நளின் பண்டார நேற்று (21) பாராளுமன்றில் தெரிவித்தார்.

கிளீன் ஸ்ரீ லங்கா செயற்றிட்டம் தொடர்பான முதல் நாள் சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர், தொடர்ந்தும் பேசுகையில்,

அரசு கிளீன் ஸ்ரீலங்கா செயற்றிட்டத்தை அமுல்படுத்தியுள்ளது. ஆனால், இந்தத் திட்டத்தின் உள்ளடக்கம் என்னவென்பதில் அரச நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களுக்கு மத்தியில் தெளிவின்மை, பிரச்சினை உள்ளது. நாட்டைத் தூய்மைப்படுத்துவதாகக் குறிப்பிட்டுக்கொண்டு பஸ்கள் மற்றும் ஆட்டோக்களின் உதிரிப்பாகங்கள் அகற்றப்படுகின்றன. இதுவே பாரதூரமான பிரச்சினை. உதிரிப்பாகங்களை அகற்ற வேண்டுமானால் முதலில் கால அவகாசம் வழங்க வேண்டும். அதேபோன்று அவற்றை இறக்குமதி செய்வதையும் தடுக்கவேண்டியது அவசியம்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய மதுபானசாலை அனுமதிப்பத்திரங்களின் பெயர் விபரங்களை வெளியிடுவதாக அரசாங்கம் உறுதியளித்தது. ஒருசில நபர்களின் பெயர்கள் மறைமுகமான வகையில் வெளியிடப்பட்டன. ஆனால், இதுவரை உண்மையான பெயர் விபரங்கள் வெளியிடப்படவில்லை. விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் இரத்துச் செய்யப்படவில்லை. மதுபானசாலை உரிமையாளர்கள் அரசாங்கத்தை ஆக்கிரமித்து விட்டார்களா என்று எண்ணத் தோன்றுகிறது.

அரிசி மாபியா, மின் மாபியா ஆகியவற்றை இல்லாதொழிப்பதாக அரசாங்கம் கூறியது. ஆனால், இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. ஆகவே, மாபியாக்களை இல்லாதொழிப்பதற்கு கிளீன் ஸ்ரீ லங்கா செயற்றிட்டத்தை அமுல்படுத்துங்கள்.

மின்கட்டணத்தை 3 ஆண்டுகளுக்குக் குறைக்க முடியாது என்று மின்சாரத் துறை அமைச்சர் கூறினார். ஆனால், இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு 20 சதவீதத்தால் மின்கட்டணத்தைக் குறைத்துள்ளது. ஆணைக்குழுவுக்கு நன்றி கூறுகின்றோம்.

பெருந்தோட்டப் பகுதியில் இன்றும் லயன் அறைகளில்தான் மக்கள் வாழ்கிறார்கள். எனவே, அரசு முதலில் கிளீன் ஸ்ரீ லங்கா திட்டத்தைப் பெருந்தோட்டப் பகுதிகளிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். சமர்ப்பிக்கப்படவுள்ள 2025ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தில் பெருந்தோட்ட மக்களின் நலன் சார்ந்த விடயங்கள் உள்ளடக்கப்படும் என்று எதிர்பார்க்கிறோம். அதனை அரசு செய்யவேண்டும் - என்றார்.

## கண்டி மாணவி கடத்தல் விவகாரம்:

# கடமை தவறிய பொலிஸாருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

### ஒருவர் பணி இடைநீக்கம் – இருவருக்கு இடமாற்றம்

**(எம்.ஏ.அமீனுல்லா)**

கண்டி மாணவி கடத்தல் விவகாரத்தில் கடமைகளை சரியாக நிறைவேற்றவில்லையென பொலிஸ் அதிகாரி ஒருவரை பணி இடைநீக்கம் செய்யவும் மற்றுமிருவரை இடமாற்றம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கண்டி, தவுலகல, ஹபுகஹயடதென பிரதேசத்தில் வர்த்தகர் ஒருவரிடமிருந்து கப்பமாக 50 இலட்சம் ரூபாவைப் பெறுவதற்காக அவரது மகளை கடத்திச் சென்ற சம்பவத்தில் கடமைகளை சரியாகச் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டில் பொலிஸ் தலைமைப் பரிசோதகர் ஆர்.ஏ.எஸ்.எஸ்.ரணசிங்க என்ற அதிகாரியை பணி இடைநீக்கம் செய்யவும் மற்றும் இருவரை இடமாற்றம் செய்யவும் மத்திய மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் பதிநாயக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

சம்பவத்தின்போது தவுலகல பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரியாக பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.எஸ்.எஸ் ரணசிங்க கடமையாற்றியிருந்தார் எனவும் மாணவி கடத்தப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டபோது உடனடி நடவடிக்கை எடுக்கப்படாதது உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலேயே இந்த இடைநிறுத்தம் மற்றும் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில், பிரதான பெண் பொலிஸ் பரிசோதகர் ஜி.ஜி.குசும் கமகே, தவுலகல பொலிஸிலிருந்து கடுகன்னாவ பொலிஸ் நிலையத்துக்கும், குற்றப்பிரிவு நிலையப் பொறுப்பதிகாரியாகவிருந்த உப பொலிஸ் பரிசோதகர் ஜி.ஏ.எஸ்.நிமல்சிறி வெலம்படை பொலிஸ் நிலையத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பின்னர் உதவிப் பொலிஸ் அதிகாரி சம்பத் விக்ரமரத்னவின் மேற்பார்வையில் கண்டிப் பிரிவு குற்றப் பிரிவின் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் திலக் சமரநாயக்க உள்ளிட்ட குழுவினர் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டனர்.

# அரசாங்க அதிபருக்கு அனுப்பிய கடிதத்தை திருப்பியனுப்பிய மன்னார் மாவட்ட செயலகம்

### நடவடிக்கை எடுக்கவேண்டுமென நிஸாம் காரியப்பர் கோரிக்கை



மன்னார் மாவட்ட அரச அதிபருக்கு எனது உத்தியோகபூர்வ முத்திரை பதித்து அனுப்பிய கடிதத்தை மாவட்ட செயலகம் நிராகரித்து திருப்பி அனுப்பியுள்ளது. எனவே, இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியப்பட்டியல் எம்.பியான நிஸாம் காரியப்பர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (21) சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைத்தே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

மன்னார் மாவட்ட அரச அதிபருக்கு எனது உத்தியோகபூர்வ முத்திரை, பாராளுமன்ற முத்திரையுடன் பதிவுத் தபாலில் அனுப்பப்பட்ட கடிதத்தை ஏற்றுக்கொள்ள முடியாதென நிராகரித்து அக்கடிதம் மாவட்ட செயலகத்தால் திருப்பியனுப்பப்பட்டிருக்கிறது. இது பாராளுமன்ற சிறப்புரிமை மீறும் செயல்.

எனவே எனது உத்தியோகபூர்வ முத்திரை பதித்து அனுப்பிய பதிவுத் தபாலை மன்னார் மாவட்ட செயலகம் ஏற்றுக்கொள்ள முடியாதெனக் குறிப்பிட்டு, எனக்கு திருப்பியனுப்பியது ஏன் என்பது தொடர்பில் தேடிப்பார்த்து, நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

இதனையடுத்து எழுந்த விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் சந்தன அபேரத்ன பதிலளிக்கையில், பாராளுமன்ற உறுப்பினருக்கு ஏற்பட்ட சம்பவத்துக்கு கவலையை தெரிவித்துக் கொள்கிறோம். அது தொடர்பில் விசாரணை நடத்தி பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.






தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2025 ஜனவரி, 22ஆம் திகதி, புதன்கிழமை

# மக்களினதும் மண்ணினதும் உணர்வுகள் மதிக்கப்படுமா?

யாழில் அமைக்கப்பட்டுள்ள கலாசார மையத்தின் பெயர் மாற்றப்பட்ட விவகாரம் தமிழ் மக்கள் மத்தியிலும் தமிழ் அரசியல்வாதிகளாலும் கடுமையான விமர்சனத்துக்குள்ளாகி வருகிறது.

இந்திய உதவியின் கீழ் யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்கப்பட்ட தனிச்சிறப்பு மிக்க சின்னமாக திகழும் கலாசார நிலையத்துக்கு திருவள்ளுவர் கலாசார மையம் எனப் பெயர் சூட்டப்பட்டதை வரவேற்பதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

திருவள்ளுவருக்கு மரியாதை செலுத்தப்படுவதோடு இந்திய - இலங்கை மக்களிடையிலான கலாசார, மொழி, வரலாற்று மற்றும் நாகரிக பிணைப்புகளுக்கான சான்றாகவும் இது திகழ்வதாக இந்திய பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் உள்ள கலாசார நிலையத்துக்கு தெய்வப் புலவரான திருவள்ளுவரின் பெயர் சூட்டப்பட்டமை தொடர்பில் பெருமகிழ்வடைதாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

இந்திய - இலங்கை உறவுக்கு சான்றாக அமைந்துள்ள கலாசார மையமானது இந்திய உதவியின் கீழ் முன்னெடுக்கப்பட்ட முக்கியமான ஒரு அபிவிருத்தித் திட்டமாகும் என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

யாழ்.கலாசார மையம், திருவள்ளுவர் கலாசார மையமாக பெயர் மாற்றப்பட்டமை தமிழின் பெருமையை பரப்புவதற்கான பிரதமர் மோடியின் மற்றுமொரு மைல்கல் என தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி தெரிவித்துள்ளார்.

இது இந்தியா - இலங்கை இடையிலான பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் தொன்மையான கலாசாரம் மற்றும் நாகரிக தொடர்பையும் அடிக்கோடிட்டுக் காட்டுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் கலாசார நிலையம் திடீரென - திடுதிப்பென - யாருக்கும் தெரியாமல் - சத்தம் சந்தடியின்றி - திருவள்ளுவர் கலாசார மையம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டமை பல தரப்புகளிலும் அதிர்வுகளை ஏற்படுத்தியிருக்கின்றது.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான திறந்தவெளி அரங்க நிலத்தில் இந்திய அன்பளிப்பில் கட்டப்பட்ட இந்தக் கலாசார நிலையத்தை யாழ். மாநகர சபையிடம் கையளிக்க விடாமல் மத்திய அரசின் கீழ் கொண்டு வருவதற்கு பகீரதப் பிரயத்தனங்கள் நடந்து வருகின்ற பின்னணியிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

இந்தக் கலாசார மண்டபத் திறப்பு விழாவாகட்டும் அல்லது அதன் பின்னரான மண்டப நிர்வாகமாகட்டும் அல்லது இப்போதைய பெயர் மாற்றமாகட்டும் யாவற்றிலுமே யாழ் மாநகர சபையின் பங்களிப்பு இல்லாத ஒரு சூழல் நீடிப்பதை அவதானிக்க முடிகிறது. அதுவும் யாழ். மாநகர சபைக்கான மக்கள் பிரதிநிதிகள் இல்லாத சமயத்தை வசமாகப் பயன்படுத்திக் கொண்டு இந்த விடயங்கள் நடக்கின்றன.

அதிகாரப் பகிர்வுக்கான திட்டமாக மாகாண சபை முறையை கொழும்போடு சேர்ந்து புதுடில்லி தமிழர் தலையில் கட்டி அடித்த போதே, மாகாண சபை முறைமையைக் கொழும்பு நினைத்தால் சீரிழக்க வைக்க முடியும். அத்தகைய உறுதிப்பாடற்ற நோஞ்சான் திட்டம் இது என்ற யதார்த்த நிலைமையை அப்போதே தமிழர் தரப்பு புதுடில்லிக்கு வெளிப்படையாகச் சுட்டிக்காட்டி இருந்தது. இந்தத் திட்டத்தை விடுதலைப் புலிகள் அடியோடு எதிர்த்தமைக்கான பிரதான காரணம் அதுதான். அது இப்போது நடைமுறையில் பல்லாண்டுகளாக நிரூபணமாகி, விடுதலைப் புலிகளின் தீர்க்க தரிசனத்தை நிரூபித்து நிற்கின்றது.

அப்படி இந்தியாவும் சேர்ந்து கொண்டு வந்து தமிழர் தலையில் திணித்த மாகாண சபை முறைமையை வெற்றிடமாக வைத்துக் கொண்டு, மாகாண சபை மூலமான மக்கள் பிரதிநிதித்துவமும் மாநகர சபை மூலமான மக்கள் பிரதிநிதித்துவமும் இல்லாத வேளையில், இப்படி மாநகர சபைக்குரிய பிரதான கட்டமைப்பு கொழும்பினால் சீரழிக்கப்படுகின்றது. அதற்கு வேறு வழியின்றி இந்தியாவும் இழுபட்டுத் துணை போகும் அவல நிலைமை.

இந்த விடயத்தை ஒட்டி தமிழர் தரப்பில் கடும் கண்டனம் எழுந்திருக்கிறது. அரசியல்வாதிகள் பலர் இதற்கு கண்டனங்களை, அதிருப்தியை வெளியிட்டுள்ளனர். திருவள்ளுவர் கலாசார மையம் என்று பெயர் வைத்திருப்பதால் அல்லது அதற்கு கூட முக்கியத்துவமளிக்கப்படாமல் பெயர்ப்பலகை நிறுவப்பட்டதல்ல பிரச்சினை. அதற்குள் இருக்கும் நுண்ணரசியலை நாங்கள் கவனிக்க வேண்டியுள்ளது. திருவள்ளுவரின் பெயரை இட்டால் பிரச்சினை எழாது என்ற எண்ணத்தில் தான் அந்த மண்ணுக்குரிய மாண்பியத்தை வேண்டுமென்ற மறைக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

மணலாறை வெலிஓயாவாகவும் யாழ்ப்பாணத்தை யாப்பா பட்டுன என்று சொல்லும் மகாவமிச மனநிலையில் உள்ளவர்களுக்கு மேற்படி மாற்றம் பெரிதும் மகிழ்ச்சியைத் தரலாம். ஆனால் காலாகாலமாக தாயக மாண்புகளை கொண்ட ஒரு இடத்தில் இப்படியான விடயங்களை செய்வது மக்களுக்கு மகிழ்வை தந்துவிடாது.

தமிழர்களின் இந்த ஆதங்கத்தை , அதிருப்தியை சம்பந்தப்பட்ட தரப்புகள் கவனத்திற்கொள்ள வேண்டும். குறிப்பாக இந்த நிலையத்தை அமைத்துக்கொடுத்த இந்தியா இதுவிடயத்தில் சீரிய கவனமெடுத்து தமிழர்களின் உணர்வுகளை மேற்படி நிலையத்தின் பெயரில் யாழ்ப்பாண மண்ணின் வாசம் இடம்பெறச் செய்ய வேண்டும்.

# டொனால்ட் ட்ரம்ப் 2.0



நான்கு ஆண்டு இடைவெளிக்குப் பிறகு அமெரிக்க ஜனாதிபதியாகத் தனது இரண்டாவது ஆட்டத்தைத் தொடங்கியிருக்கிறார் டொனால்ட் ட்ரம்ப். அமெரிக்க வரலாற்றிலேயே இந்த அளவுக்கு சந்தேகங்களும் கவலைகளும் எந்தவொரு அமெரிக்க ஜனாதிபதி குறித்தும் எழுப்பப்பட்ட தில்லை. தன்னைப் பற்றிய விமர்சனங்களையும் எழுப்பப்படும் அச்சங்களையும் கூட தனக்குத் தரப்படும் விளம்பரமாகவும் தன்னுடைய வாக்கு வங்கியை உறுதிப்படுத்தும் காரணிகளாகவும் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கருதுகிறார் என்றுதான் தோன்றுகிறது.

130 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு முறை ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியைத் தழுவிய ஒருவர் மீண்டும் நான்கே ஆண்டுகளில் மிகப் பாரிய வெற்றியைப் பெற்று வெள்ளை மாளிகையைக் கைப்பற்றியிருக்கும் சாதனையைப் படைத்திருக்கிறார் 47ஆவது ஜனாதிபதியாகப் பதவியேற்றுக் கொண்டிருக்கும் டொனால்ட் ட்ரம்ப். வெள்ளை மாளிகையை மட்டுமல்ல, அமெரிக்காவின் மக்களவையான காங்கிரஸும் மேலவையான செனட்டும் கூட ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் குடியரசுக் கட்சியின் கட்டுப்பாட்டில் இப்போது இருக்கின்றன.

நீதித்துறையும் ஜனாதிபதி ட்ரம்புக்கு சாதகமாக அமைந்திருக்கிறது. ஒன்பது உயர்நீதிமன்ற நீதிபதிகளில் ஆறு பேர் குடியரசுக் கட்சியின் ஆதரவாளர்கள். அமெரிக்காவின் கொள்கைகளை வகுப்பதிலும் நிர்வாக இயந்திரத்தைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதிலும் இந்தத் தடவை டொனால்ட் ட்ரம்புக்கு எந்தவித தடையோ சிக்கலோ குழப்பமோ இருக்கப்போவதில்லை. அதனால்தான் அவரது விமர்சகர்கள், ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அதிரடியாக என்ன முடிவெடுப்பார் என்று தெரியாமல் பயப்படுகிறார்கள்.

பெரும்பான்மை அமெரிக்கர்களின் உணர்வுகளைப் பிரதிபலிப்பவர் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் என்பதைப் புரிந்து கொண்டால், அவரது செயற்பாடுகளின் காரணத்தைப் புரிந்துகொள்ள முடியும். 17ஆவது நூற்றாண்டின் தொடக்கத்தில் அமெரிக்காவின் பூர்வ குடியான செவ்விந்தியர்களை (சுமார் 10 கோடி பேர்) கொன்று குவித்து பிரிட்டனிலிருந்தும் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் குடியேறிய ஆங்கிலோசாக்ஸன் இனத்தவரான வெள்ளையர்கள் தங்களது காலனியை நிறுவினார்கள். ஏறத்தாழ 90% அவர்கள் மட்டுமே இருக்கும் தேசமாக அமெரிக்கா மாறியது.

1960களில் அமெரிக்காவின் குடியுரிமைச் சட்டம் திருத்தப்பட்டு அனைத்து இனத்தவருக்குமான தேசமாக அது மாறத் தொடங்கியது.

வெள்ளை அமெரிக்கர்களின் எண்ணிக்கை 2020இல் 58% என்பதும் இதேபோன்று தொடர்ந்தால் வெள்ளையர்கள் தங்கள் மண்ணில் சிறுபான்மையினராகக் கூடும் என்பதும்தான் 'ட்ரம்ப்பிசம்' என்று அழைக்கப்படும் அதீத அச்ச உணர்வுக்குக் காரணம். அதனால்தான் குடியேற்றம் ஒரு பிரச்சினையாக மாறியிருக்கிறது. இதைப் புரிந்து கொண்டால், டொனால்ட் ட்ரம்ப்பின் அரசியல் செல்வாக்கின் பின்னணியைப் புரிந்துகொள்ளலாம்.

கடந்த தடவை 2017இல் டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதியாகியபோதும் இதுபோலப் பல ஐயப்பாடுகள் எழுப்பப்பட்டன. மிகப் பெரிய நிதி நெருக்கடியில் அவர் அமெரிக்காவைத் தள்ளப்போகிறார் என்று பலரும் எச்சரித்தனர். ரொனால்ட் ரீகனுக்குப் பிறகு மிகவும் குறைந்த வேலைவாய்ப்பின்மை ஜனாதிபதி ட்ரம்பின் முதல் பதவிக்காலத்தில்தான் சாத்தியமானது. அதேபோல வளர்ச்சியும் அவர் வாக்குறுதி அளித்ததுபோல 3.5% அளவை எட்டியது.


ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் கடந்த ஆட்சிக் காலத்தில் அமெரிக்கா எந்தவொரு போரையோ மோதலையோ முன்னெடுக்கவில்லை என்பது பலருக்கும் ஆச்சரியமாக இருக்கும். 1974இல் ஜெரால்ட் ஃபோர்ட் ஜனாதிபதியான பிறகு ஒவ்வொரு அமெரிக்க ஜனாதிபதியும் ஏதாவது சர்வதேசப் போரில் தலையிட்டு பிரச்சினையைப் பெரிதாக்கியிருக்கிறார்கள்-ஜோ பைடன் உட்பட. ஜனாதிபதி ட்ரம்ப் மிரட்டியிருக்கிறாரே தவிர, எந்தவித போரிலும் அமெரிக்கா ஈடுபடுவதை அனுமதிக்கவில்லை.

அவர் குறித்த மிகப் பெரிய அச்சம், குடியேற்றம் குறித்தது. ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எப்போதுமே குடியேற்றத்தை எதிர்ப்பவரல்ல. தொழில்நுட்பத் திறன்சாராத் தொழிலாளர்கள் சட்டவிரோதமாக அமெரிக்காவில் நுழைவதைத்தான் அவர் தொடர்ந்து விமர்சித்து வருகிறார். குறிப்பாக, அமெரிக்காவைச் சுற்றியிருக்கும் ஸ்பானிஷ் மொழி பேசும் நாடுகளிலிருந்து அத்துமீறி நுழைவதைத்தான் அவர் தடுக்க விரும்புகிறார் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும்.

முந்தைய ட்ரம்ப் நிர்வாகத்தில் சட்டவிரோதமாகக் குடியேறிய 15 இலட்சம் பேர் நாடு கடத்தப்பட்டனர் என்பதுதான் பேசப்படுகிறது. பைடன் ஆட்சியில் 15 இலட்சம் பேரும் பராக் ஒபாமா ஜனாதிபதியாக இருந்த எட்டு ஆண்டுகளில் 30 இலட்சம் பேரும் நாடு கடத்தப்பட்டனர் என்பது வெளியில் தெரியவில்லை. ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பல அதிரடி நடவடிக்கைகளில் இறங்கக் கூடும்.

நன்றி - தினமணி

# ஆலயங்களில் நியாயமான கட்டணங்களை நிர்ணயிக்குக!



சிவஸ்ரீ.பால.ரவிசங்கர சிவாச்சாரியார் (ஜே.பி.)
ஆதீனகர்த்தா பிரதமகுரு –
அருள்மிகு ஸ்ரீ ஞானபைரவர் சுவாமி தேவஸ்தானம்
இல. 42, டிவோஸ்லேன்,
கிராண்ட்பாஸ்,
கொழும்பு -14, இலங்கை.
தொடர்புகளுக்கு : 075 7329716 - 0112 423895

இலங்கையில் சகல பிரதேசங்களிலுமுள்ள இந்துசமய ஆலயங்கள், தேவஸ்தானங்கள், மதவழிபாட்டு அமைப்புகளின் தர்மகர்த்தாக்கள், அறங்காவலர்கள், ஆதீன கர்த்தாக்கள், பரிபாலன நிர்வாகிகள் சார்ந்த அனைவருக்குமான மக்கள் நலன் சார்ந்த விசேட வேண்டுகோளொன்றை தங்களின் மேலான கவனத்துக்கு கொண்டுவருவதன் நோக்கில் கீழ்க்கண்ட விடயத்தை முன்வைக்க விரும்புகிறேன்.

பொதுவாக எந்தவொரு சேவைக்காகவும் மக்களிடமிருந்து பணம் பெறப்படும்போது அவை நியாயமாகவும் மக்களுக்கு சுமையில்லாத, இலாப நோக்கமற்ற விதத்திலும் அனைத்து தரப்பட்ட மக்களுக்கும் ஏதுவாக சேவை நோக்கை முன்நிலைப்படுத்தியும் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டியது நியாயமாகும். அதிலும் குறிப்பாக, மத, சமய ரீதியாக மதவழிபாட்டுக்கு - இறைவழிபாட்டுக்கு ஆலயம் வரும் பக்தர்களிடம் எந்தவொரு சேவைக்கும் அதிக பணம் வசூலிப்பது தர்மமாகாது என்பதைக் கருத்திற்கொள்வது அவசியமானதாகும்.

குறிப்பாக, ஆலயங்களில் சாதாரண அர்ச்சனைக்காக ரூபா 50, ரூபா100 மற்றும் ஆலயங்களில் பிரார்த்தனைக்காக ஏற்றப்படும் நெய்தீபம், எள்ளெண்ணெய் தீபம், மிளகு தீபம், மோட்ச தீபம் போன்றவற்றுக்கு எந்தவித தொகைக் கட்டுப்பாடும் நியாயமுமின்றி ரூபா 100, ரூபா 200, ரூபா 300 என தீப விற்பனை செய்வது முறையன்று. உண்மையில் தீபத்துக்கான மண்சட்டியானது சில்லறையாக வாங்கினால் ரூபா 7 அதிகபட்ச விலைக்கும் மொத்தமாக வாங்கினால் ரூபா 4 க்கும் பெறக்கூடியதாக இருக்கும். திரிநூல் ஒன்றுக்கான விலை ரூபா 2, மிளகு, எள் பொட்டலமாகிலும் ரூபா 10 அதற்கான நெய், நல்லெண்ணெய் 50 கிராம் சுமார் 12 ரூபா என மொத்தமாக தீபத்துக்கான செலவு 30 ரூபா எனக் கணக்கிட்டாலும் நடைமுறையில் பெருமளவான ஆலயங்களில் 100 ரூபாக்கும் மேலான தொகைக்கே விற்கப்படுவது வேதனைக்குரியது.

பொதுவாக காளாஞ்சி அர்ச்சனை எனப்படும் தேங்காய் அர்ச்சனை விலையேற்றங்கள் காரணமாக 300ரூபா-500ரூபா எனவும் வெற்றிலை, பழ அர்ச்சனை 50ரூபா- 100ரூபா என உள்ளதால் சாதாரண அனைத்து தர மக்களும் ஒரு தீபத்தையேனும் ஏற்றி வழிபாடு செய்யும் வகையில் அதற்கான அதிகபட்ச விலை 30 ரூபாவாக நிர்ணயிப்பது அவசியமாகும். பெரும் பொருளாதாரப் பாதிப்புகளுக்கு முகம் கொடுத்து வரும் மக்கள், ஆலயத்தில் இறையருள்வேண்டி வந்தால் அங்கேயும் அனைவருக்குமான பொதுவான கட்டணங்கள் இல்லாதிருப்பது அம்மக்களுக்கு மிகுந்த சுமையாகும்.

இவை தவிர, வாகன பூஜைக்கான கட்டணங்கள் வாகனங்களுக்கேற்ப, அவற்றின் பெறுமதிக்கேற்ப பணம் வசூலிப்பது மற்றும் இதர சேவைகளுக்காகப் பெறப்படும் பணம் அதிகபட்சமாக உள்ளதால் மக்கள் அதிக விரக்தியில் உள்ளனர் என்பதை மக்களோடு மக்களாக கடந்த 40 வருடங்களுக்கும் மேலாக சமயப்பணியில் ஈடுபடும் ஒரு சமூக நலன் சிந்தனைகொண்ட சிவாச்சாரிய இந்து மதகுரு என்பதால் புரிந்துகொள்ள முடிந்தது.

அத்துடன், மக்கள் தொடர்ச்சியாக இவ்விடயம் தொடர்பாக எமக்குத் தெரிவித்த பொதுவான முறைப்பாட்டையடுத்து இவ்விடயத்தில் தாங்கள் மேலான கவனஞ்செலுத்தி நியாயமான மக்கள் நலன் சார்ந்த - மக்கள் பாதிக்கப்படாத வகையில் அடிப்படை சேவை நோக்கான பணம் பெறப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

ஆலயம் சார்ந்த நிர்வாகச் செலவுகள் அதிகரித்துள்ளதால் அனைவருக்குமான தீபம், அர்ச்சனை என்பவற்றுக்கான தொகையை அதிகரிக்காமல் ஏனைய பூஜைகளுக்கான கட்டணங்களிலாவது கணிசமான தொகையை ஆலய நிர்வாகத்துக்காகப் பெறலாம். அத்துடன், ஆலயங்களில் காணிக்கையாகச் செலுத்தப்படும் உண்டியல் பணத்தை செலவீனங்களுக்காக ஒதுக்கலாம். ஆலயம் இலாப நோக்கற்ற சேவை நோக்குடன் நடத்தப்பட வேண்டியது அவசியமாகும். நிர்வாக செலவுக்கான நிதியை நன்கொடையாகப் பெறத் திட்டமிட்ட செயற்பாடு அவசியமாகும்.

மேற்படி விடயங்களை அதிக கருத்திற்கொண்டு ஆலய நிர்வாகிகள் சாதாரண பாமர பொருளாதார ரீதியாக நலிவடைந்த பக்தர்களுக்கும் பாதிப்பில்லாத வகையில் அனைவருக்குமான நியாயமான கட்டணங்களை நிர்ணயிக்க வேண்டுமென மிகுந்த விநயத்துடன் வேண்டுகோள் ஒன்றை முன்வைக்க விரும்புகிறேன். இதனூடாக மக்களுக்கு சுமையில்லாத வகையில் இறை வழிபாட்டை ஆலயங்களில் மேற்கொள்ளக்கூடியதாய் அமையுமென்பதில் ஐயமில்லை.

இவ்விடயம் தொடர்பாக ஆலய குருமார்கள், நிர்வாகிகள், பொது மக்கள், சமயம் சார்ந்த சமூக ஆர்வலர்களிடமிருந்து எழுத்து மூலமான கருத்துகளை எதிர்பார்க்கின்றோம். அவை மேற்படி கருத்துகளை நடைமுறையில் முன்னெடுப்பதற்கு மேலும் வலுச்சேர்ப்பதாய் அமையும்.

குறிப்பு : மக்கள் நலன் சார்ந்த இந்துமத இவ்வேண்டுகோளானது நடைமுறையில் ஆலய நிர்வாகிகளால் நிராகரிக்கப்படும் நிலையில், சட்ட ரீதியாக சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்படுவேன் என்பதை மிகுந்த உறுதியுடன் தெரிவிக்க விரும்புகிறேன்.

# இன்றைய நாளில்..

- 1901 – 64 ஆண்டுகள் ஆட்சியில் இருந்த விக்டோரியா மகாராணி தனது 81ஆவது அகவையில் காலமானதை அடுத்து அவரது மூத்த மகன் ஏழாம் எட்வேர்ட் பிரித்தானியாவின் மன்னரானார்.
- 1927 – உலகின் முதல் வானொலி வர்ணனை, ஹைபரியில் நடைபெற்ற ஆர் சனல்-செப்பீல்ட் யுனைட்டெட் கால்பந்து போட்டி ஒலிபரப்பாகியது.
- 1945 – இலங்கையில் புதிய அரசியல் யாப்பை உருவாக்குவதற்கான சோல்பரி ஆணைக்குழு முதன் முதலாக கொழும்பு நகர மண்டபத்தில் கூடியது.
- 1968 – அப்பலோ 5 விண்கலம் முதலாவது நிலாக்கலத்தைத் தாங்கி விண்வெளிக்குச் சென்றது.
- 1999 – இந்தியாவின் ஒரிசா மாநிலத்தில் அவுஸ்திரேலிய கிறிஸ்தவப் போதகர் கிரகாம் ஸ்டைன்ஸ் என்பவரும் அவரது இரு மகன்களும் இந்துத் தீவிரவாதிகளால் உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டனர்.
- 2003 – பயனியர் 10 விண்கலத்துடன் கடைசித் தொடர்பு மேற்கொள்ளப்பட்டது.

# நக்கல் நமசிவாயம்



# அரசாங்கத்தின் முக்கிய திட்டங்களுக்கு உலக வங்கி நிதி உதவிகளை வழங்கும்

## உலக வங்கியின் தெற்காசியப் பிராந்தியத்துக்கான உப தலைவர் மார்டின் ரேசர்

அரசாங்கத்தின் முக்கியமான திட்டங்களுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவி வழங்க நடவடிக்கை எடுப்பதாக உலக வங்கியின் தெற்காசியப் பிராந்தியத்துக்கான உப தலைவர் மார்ட்டின் ரேசர் (Martin Raiser) தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும் உலக வங்கி பிரதிநிதிகளுக்கும் இடையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று (21) நடைபெற்ற சந்திப்பின்போது உலக வங்கியின் தெற்காசிய பிராந்தியத்துக்கான உப தலைவர் மார்ட்டின் ரேசர் இதனைத் தெரிவித்தார்.



இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம், கிளீன் ஸ்ரீ லங்கா, கிராமிய வறுமை ஒழிப்பு மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் திட்டங்களுக்கு உலக வங்கியிடமிருந்து நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்க இதன்போது உடன்பாடு தெரிவிக்கப்பட்டது.

கல்வி, எரிசக்தி, டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் வடக்கு அபிவிருத்தி ஆகியவற்றில் புதிய திட்டங்களுக்கு உதவி வழங்குவது குறித்து கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

உலக வங்கி இலங்கைக்கு வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள கடன் உதவியை உரிய சமயத்தில் வழங்க நடவடிக்கை எடுப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க,

கல்வித்துறை முன்னேற்றத்தின் மூலம் கிராமிய வறுமையை ஒழிக்க முடியும். அதற்காக புதிய அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள கல்வி சீர்திருத்த முயற்சிகளுக்கும் பொதுப் போக்குவரத்துத் துறையின் முன்னேற்றத்துக்கும் தேவையான உதவிகளை வழங்குமாறு உலக வங்கி பிரதிநிதிகளிடம் கோரிக்கை விடுத்தார்.

இலங்கையின் விவசாயத்துறையில் 28% தொழில்படை ஈடுபட்டிருந்தாலும் இலங்கைப் பொருளாதாரத்துக்கு விவசாயத்துறையிலிருந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 6% பங்களிப்பு கிடைப்பது போதுமானதாக இல்லை. மக்கள் தொகை அடர்த்திக்கேற்ப இலங்கை மக்களுக்குத் தேவையான வசதிகளை வழங்க புதிய அரசாங்கத்தால் செயற்படுத்தப்படும் திட்டம் குறித்து உலக வங்கி பிரதிநிதிகளுக்கு விளக்கமளித்ததுடன், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கான அரசாங்கத்தின் திட்டங்கள் குறித்தும் இதன்போது ஆராயப்பட்டது. 2025ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்கான புதிய திட்டங்களை செயற்படுத்துவது குறித்தும் இந்த கலந்துரையாடலின்போது ஆராயப்பட்டது.

விமான நிலையம் மற்றும் துறைமுக அபிவிருத்திக்கான புதிய திட்டங்கள் செயற்படுத்தப்படும். துறைமுக அபிவிருத்தியை துரிதமாக மேற்கொள்ள உள்ளோம். குறிப்பாக வடக்கின் அபிவிருத்திக்கு அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. வடக்கில் மூன்று முதலீட்டு வலயங்களை நிறுவ நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

வடக்கில் சுற்றுலாத் துறையை மேம்படுத்தவும் நீர் வசதிகளை வழங்கவும் வடக்கு மக்களின் சமூகப் பிரச்சினைகளுக்கு கலாசார அடையாளத்தைப் பாதுகாக்கும் வகையில் தீர்வு வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, உலக வங்கியின் பிராந்திய உள்நாட்டுப் பணிப்பாளர் (நேபாளம், மாலைதீவு, இலங்கை) டேவிட் சிஸ்லன், உலக வங்கி மற்றும் சர்வதேச நிதிக் கூட்டுத்தாபன (இலங்கை மற்றும் மாலைதீவு) உள்நாட்டுப் பணிப்பாளர் கெவோர்க் சார்க்சியன், உப தலைவரின் விசேட உதவியாளர் கிஷான் அபேகுணவர்தன ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு; இம்மாதத்தில் இதுவரை 3,350 பேர் அடையாளம்

ஜனவரி மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் 3,349 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதத்தில் இதுவரையான காலப்பகுதியில் மேல் மாகாணத்தில் மாத்திரம் மொத்தமாக 1,520 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தில் கம்பஹா மாவட்டத்திலேயே அதிகமான நோயாளர்கள் (508பேர்) அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 15.2 வீத அதிகரிப்பும் பதிவாகியுள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் 460 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 13.7 வீத அதிகரிப்பும் பதிவாகியுள்ளது. களுத்துறை மாவட்டத்தில் 83 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் கடந்த வருடத்தின் இறுதியில் மொத்தமாக 49,877 டெங்கு நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளதுடன் 24 டெங்கு மரணங்களும் நிகழ்ந்துள்ளன.

2024ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாதத்தில் 2,965 நோயாளர்களும் நவம்பர் மாதத்தில் 3,498 நோயாளர்களும் டிசம்பர் மாதத்தில் 3,604 நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக டெங்கு ஒழிப்புப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த வருடத்தில் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டிருந்த 24 நோயாளர்கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கண்டி - மஹியங்கனை வீதியில் கற்பாறை சரியும் அபாயம்

## இரவு வேளைகளில் குறித்த வீதிக்கு பூட்டு

*(எம்.ஏ.அமீனுல்லா)*

கண்டி, மஹியங்கனை பிரதான வீதியில் கற்பாறை சரிவு ஏற்படும் அபாயம் நிலவுவதால் இரவு வேளையில் குறித்த பாதை மூடப்பட்டுள்ளதாக கண்டி மாவட்ட செயலாளர் இந்திக்க உடவத்த தெரிவித்தார்.

அதிக மழை காரணமாக இவ்வீதியில் பயணிப்பது ஆபத்தானது என சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடன் நேற்று (21) இடம்பெற்ற கலந்துரையாடலின்போது தீர்மானிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையம், உடுதும்பரை பிரதேச செயலகம், தெல்தெனிய மற்றும் உடுதும்பரை பொலிஸ், வீதி அபிவிருத்தி அதிகாரசபை உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களின் தலைவர்களின் பங்குபற்றுதலுடன் கண்டி மாவட்ட செயலகத்தில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

அதன்படி, இன்று மாலை 06.00 மணி தொடக்கம் நாளை காலை 06.00 மணிவரை குறித்த வீதி மூடப்படும் எனவும் ஆபத்தான நிலைமை குறையும் வரை இரவு வேளைகளில் வாகனப் போக்குவரத்தை இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் மாவட்ட செயலாளர் தெரிவித்தார்.

# அக்குறணை நகரை அண்மித்து 218 அனுமதியற்ற கட்டடங்கள்

(எம்.ஏ.அமீனுல்லா)

அக்குறணை நகரை அண்மித்த பகுதியில் உள்ள பிங்கா ஓயாவில் நீர் செல்வதற்கு இடையூறாக 218 அனுமதியற்ற கட்டுமானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் கண்காணிப்பின் மூலம் தெரியவந்துள்ளதாக தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கண்டி மாவட்ட உதவிப் பணிப்பாளர் இந்திக ரணவீர தெரிவித்துள்ளார்.

கண்டி மாத்தளை ஏ-09 வீதியுடன் கூடிய நகரமான அக்குறணை நகரம், பலத்த மழை வெள்ளத்தில் மூழ்குவதற்கு இதுவே பிரதான காரணமாகும். பிங்கா ஓயா பெருக்கெடுத்து அக்குறணை நகரம் வெள்ளத்தில் மூழ்குவதால் வருடாந்தம் 500 மில்லியன் ரூபா நட்டத்தை வர்த்தக சமூகம் அனுபவிக்க நேரிடுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.அங்கு தொடர்ந்துரையாற்றிய அவர்,

அக்குறணை மக்கள் 12 வருடங்களாக இந்தப் பிரச்சினையை எதிர்நோக்கி வருகின்றனர். பிங்கா ஓயாவின் கால்வாய்களின் குறுக்கே பாலங்கள் நிர்மாணித்தல், கால்வாய் விரிவுபடுத்தப்படாமல், சேறும் சகதியுமாக அமைந்திருத்தல், வண்டல் மண் படிந்திருப்பது, கட்டடக் கழிவுகளை கால்வாயில் கொட்டுவது போன்ற காரணிகள் இந்த பிங்கா ஓடைக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன என்றார்.

மாவட்ட செயலகம், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு, பிரதேச செயலகம், அக்குறணை பிரதேச சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மகாவலி அதிகார சபை என்பன இணைந்து மேற்கொண்ட கள விசாரணையில், சட்ட விரோத நிர்மாணங்கள் மிக அதிகமாக இருப்பதாக தெரியவந்துள்து. பேராதனை பல்கலைக் கழகம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் இணைந்து இது தொடர்பில் கடந்த 2011ஆம் ஆண்டு ஒரு கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாகவும், பிரச்சினைக்கான தீர்வுகள் கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.




# 2025.01.20 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

**01. மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தை நிறுவுதல்**

2019ஆம் ஆண்டில் க.பொ.த. உயர்தர பெறுபேறுகளின் அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள பல்கலைக்கழக மருத்துவப் பீடத்தின் முதலாவது மருத்துவக் கற்கை மாணவர் அணியினருக்கான வைத்தியசாலை உள்ளக சிகிச்சைப் பயிற்சிகள் 2025 ஜுலை மாதத்தில் ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. தெற்காசிய தொழில்நுட்பம் மற்றும் மருத்துவ நிறுவகத்தில் (SAITM) காணப்படுகின்ற வசதிகளைப் பயன்படுத்தி மொரட்டுவ பல்கலைக் கழக மருத்துவ பீடத்தை நிறுவுவதற்கு மற்றும் மருத்துவக்கற்கை மாணவர்களின் மருத்துவமனை உள்ளக சிகிச்சைப் பயிற்சிக்காக மருத்துவர் நெவில் பர்னாந்து மருத்துவமனையின் வசதிகளைப் பயன்படுத்துவதற்கும் இதற்கு முன்னர் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனாலும், குறித்த மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கை மற்றும் நோய்களின் பல்வகைத் தன்மை போதுமானதாக இன்மை மற்றும் மருத்துவமனைப் பணியாளர் குழாம் மற்றும் விசேட மருத்துவ நிபுணர்களின் பற்றாக்குறை காரணமாக மொரட்டுவ பல்கலைக்கழக மருத்துவக் கற்கை மாணவர்களின் சிகிச்சை பேராசிரியர் பிரிவின் பயிற்சிகளுக்காக மருத்துவர் நெவில் பர்னாந்து மருத்துவமனையைப் பயன்படுத்துவதில் பிரச்சினைகள் காணப்படுகின்றமையும் கண்டறியப்பட்டுள்ளது. அதனால், குறித்த மருத்துவக்கற்கை மாணவர்களுக்கு தரப்பண்பான மருத்துவமனை உள்ளக சிகிச்சைப் பயிற்சி வழங்கப்படுவதை உறுதிப் படுத்துவதற்காக களுத்துறை போதனா மருத்துவமனை மற்றும் கல்லஸ்ஸ மகப்பேற்று மற்றும் சிறுவர் மருத்துவமனையைப் பயன்படுத்துவதற்கும் மொரட்டுவ பல்கலைக் கழகத்தில் மருத்துவப் பீடத்தை நிறுவுவதற்காக களுத்துறை பிரதேச செயலகப் பிரிவில், நாகொட மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான காணித் துண்டுகள் 02 இனை குறித்த பல்கலைக்கழகத்துக்கு சுவீகரித்துக் கொள்வதற்கும் கல்வி, உயர்க்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக பிரதமரும், போக்குவரத்து அமைச்சரும் இணைந்து சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. இலங்கை அரசு மற்றும் இத்தாலி அரசுக்கும் இடையிலான இருதரப்பு விமான சேவைகள் ஒப்பந்தம்**

இருநாடுகளுக்கிடையிலான இருதரப்பு விமான சேவை நடவடிக்கைகளுக்குரிய படிமுறைகள் தொடர்பாக இலங்கை அரசும் இத்தாலி அரசும் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளதுடன், அதற்கமைய இருநாடுகளுக்கிடையிலான விமான சேவைகள் ஒப்பந்தமொன்றைக் கையொப்பமிடுவதற்காக 2018.07.24 அன்று அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. ஆனாலும், குறித்த ஒப்பந்தத்தில் இதுவரை கையொப்பமிடப் படாததுடன், துரிதமாக இவ் ஒப்பந்தத்தை மேற்கொள்வது பொருத்தமானதென இரு தரப்பினரும் அடையாளங் கண்டுள்ளனர். உத்தேச ஒப்பந்தத்தின் கீழ் எந்தவொரு வகையான விமானமொன்றைப் பயன்படுத்தி உடன்பாடு எட்டப்பட்டுள்ள விமான வழியூடாக வாரமொன்றில் திட்டவட்டமான நேரசூசிக்கமைய 14 விமானப் பயண சேவைகளும் அத்துடன் விமான வழியாக பொருட்கள் போக்குவரத்துக்காக வாரமொன்றில் திட்டவட்டமான நேரசூசிக்கமைய 07 விமானப் பயண சேவைகளையும் மேற்கொள்வதற்கான இயலுமை உண்டு. அதற்கமைய, இலங்கை அரசுக்கும் இத்தாலி அரசுக்கும் இடையிலான விமான சேவைகள் ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு போக்குவரத்து அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. களனிவெளி புகையிரத வழி ஒதுக்கப்பட்ட இடங்களிலுள்ள குடியிருப்பாளர்களை மீள்குடியமர்த்தல்**

கொழும்பு நகர்ப்புற புகையிரத வீதிப் புனரமைப்புக் கருத்திட்டத்தின் கீழ் மாளிகாவத்த லொக்கோ சந்தியிலிருந்து பாதுக்க புகையிரத நிலையம் வரைக்குமான புகையிரதப் பாதை ஒதுக்கிடங்களில் சட்டவிரோதக் குடியிருப்பாளர்களுக்கான வீடுகளை வழங்கி அல்லது நட்டஈடு வழங்கி மீள்குடியமர்த்துவதற்காக 2024.08.05 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான வீடமைப்புத் தொகுதிகளில் கொள்வனவு செய்யப்பட்ட 694 வீட்டு அலகுகளில் தற்போது குடியமர்த்தப்பட்டுள்ளதுடன், மேலும் 144 வீட்டு அலகுகள் நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து கிடைக்க இருக்கின்றன. நகர அபிவிருத்தி அதிகார சபையின் வீட்டுத் திட்டங்கள் இல்லாத மஹரகம, ஹோமாகம மற்றும் பாதுக்க போன்ற பிரதேசங்களில் சட்டவிரோத குடியிருப்பாளர்களை மீள்குடியமர்த்துவதற்காக கொட்டாவ மாலபல்ல பகுதியில் புகையிரதத் திணைக்களத்துக்குச் சொந்தமான காணியில் 120 வீட்டு அலகுகளுடன் கூடிய வீடமைப்புத் தொகுதியொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றதுடன், அவற்றின் நிர்மாணப் பணிகள் தற்போது பூர்த்தியடைந்து வருகின்றன. அதற்கமைய, குறித்த வீடமைப்புத் தொகுதியில் குடியமர்த்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள குடியிருப்பாளர்களுக்கு உறுதிகளை வழங்கக்கூடிய வகையில், இலங்கை புகையிரத திணைக்களத்துக்குச் சொந்தமான கொட்டாவ மாலபல்ல பகுதியில் அமைந்துள்ள காணி மற்றும் அதில் அமைந்துள்ள வீடமைப்புத் தொகுதியை அரச காணிக் கட்டளைச் சட்டத்தின் 6(1) பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய விடுவிப்புப் பத்திரமாக தேசிய வீடமைப்பு அதிகாரசபைக்கு ஒப்படைப்பதற்கும் தெரிவுசெய்யப்படுகின்ற பயனாளிகளுக்கு பணச்செலவின்றி வீட்டு உறுதிகளை வழங்கும் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கும் போக்குவரத்து அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. மாணவர்களுக்கான பாடசாலை பாதணி வழங்கும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் - 2025**

2015ஆம் ஆண்டு தொடக்கம் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு பாடசாலைப் பாதணி வழங்கும் வேலைத்திட்டம் கல்வி அமைச்சின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன், 2020ஆம் ஆண்டு தொடக்கம் 2023ஆம் ஆண்டு வரைக்கும் தெரிவுசெய்யப்பட்டுள்ள பிரிவெனாக்களிலுள்ள பௌத்த துறவி மாணவர்கள் மற்றும் ஏனைய மாணவர்களும் குறித்த வேலைத்திட்டத்தில் உட்சேர்க்கப்பட்டுள்ளனர். 2025ஆம் ஆண்டுக்கான குறித்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் குழுவின் விதந்துரைக்கமைய கீழ்வரும் பாடசாலை மாணவர்கள், பௌத்த துறவு மாணவர்கள் மற்றும் ஏனைய மாணவர்களுக்குப் பாதணிகளைக் கொள்வனவு செய்வதற்கான 3,000 ரூபா வவுச்சர் ஒன்றை வழங்குவதற்காக கல்வி, உயர்க்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்குவதற்காக அரச போசாக்கு வேலைத்திட்டத்தை 2025இல் நடைமுறைப்படுத்தல்**

தற்போது 1 - 5 வரையான வகுப்புகளில் மாணவர்கள் தொகை 100இற்கும் குறைவான அனைத்து அரச பாடசாலைகளிலுள்ள அனைத்து மாணவர்களுக்கும் விசேட கல்விப் பிரிவு அல்லது விசேட கல்விப் பாடசாலைகளிலுள்ள மாணவர்கள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட பிரிவெனாக்களிலுள்ள மாணவர்கள் உள்ளடங்கலாக 1.4 மில்லியன் மாணவர்களுக்கு நாடளாவிய ரீதியிலுள்ள 100 கல்வி வலயங்களில் 8,956 பாடசாலைகளில் “பாடசாலை உணவு வேலைத்திட்டம்” நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. குறித்த வேலைத்திட்டத்தை மேலும் திட்டமிட்ட வகையில் 2025ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தவும் ஆண்டுக்கான உயர்ந்தபட்சம் 1.5 மில்லியன் மாணவர்கள் பயனடையக்கூடிய வகையில் வரவு - செலவுத்திட்டத்தில் நிதியொதுக்குவதற்கும் கல்வி, உயர்க்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. கொழும்பு துறைமுக விரிவாக்கத் திட்டத்தின் IIஆம் கட்டத்தில் மேற்கு கொள்கலன் முனையம் II இற்கான அலைதாங்கியை நீடிப்பதற்கான விபரங்களுடன் கூடிய திட்டத்தை இயக்குவதற்கான ஆலோசனை சேவை**

கொழும்பு துறைமுக விரிவாக்கத் திட்டத்தின் IIஆம் கட்டத்தில் மேற்கு கொள்கலன் முனையம் II இற்கான அலைதாங்கியை நீடிப்பதற்கான விபரங்களுடன் கூடிய திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 2023.06.26 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்குரிய ஆலோசனை சேவைகளுக்கான நிதி மற்றும் தொழில்நுட்ப ரீதியான ஒத்துழைப்புகளை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி விருப்பம் தெரிவித்துள்ளதுடன், ஆசிய அபிவிருத்தி வங்கியின் குறிகாட்டிகளுக்கமைய விருப்பக்கூற்றுப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன. அதற்காக 20 விண்ணப்பதாரிகள் விருப்பக்கூற்றுப் பத்திரங்களைச் சமர்ப்பித்துள்ளதுடன், 07 விண்ணப்பதாரிகள் முன் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளனர். அவற்றில் 05 நிறுவனங்கள் விபரங்களுடன் கூடிய முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ளனர். தொழில்நுட்ப விபரக்கூற்றுக்களைப் பூர்த்தி செய்துள்ள 03 நிறுவனங்களின் நிதி முன்மொழிவுகளை மதிப்பீடு செய்த பின்னர், குறித்த ஆலோசனை சேவைக்கான ஒப்பந்தம் M/s Dohwa Engineering Co.Ltd இற்கு வழங்குவதற்கு அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள ஆலோசனைப் பெறுகைக்குழுவின் விதந்துரைக்கமைய வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, ஒப்பந்தத்தை வழங்குவதற்காக போக்குவரத்து அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. குற்றத்தின் மூலம் பெறப்பட்ட சொத்து தொடர்பான சட்டமூலம் (Proceeds of Crime Bill)**

குற்றத்தின் மூலம் பெறப்பட்ட சொத்து தொடர்பான சட்டமூலத்தைத் தயாரிப்பதற்கு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக 2024.12.09 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்துக்கு சட்ட மா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது. குறித்த சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்காகவும் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு நியமித்தல்**

சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பதவி 2025.01.01 தொடக்கம் வெற்றிடமாகவுள்ளது. இலங்கை இராணுவத்தின் ஓய்வுநிலை மேஜர் ஜெனரல் கே.எச்.பீ. பாலித பெர்னாண்டோவை சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக நியமிப்பது பொருத்தமெனக் கண்டறியப்பட்டுள்ளது. அதற்கிணங்க, அவரை சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருடத்துக்கு நியமிப்பதற்காக பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. காணி ஆணையாளர் நாயகம் பதவிக்கு நியமித்தல்**

விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் மேலதிக செயலாளர் (காணி) பதவியில் கடமையாற்றிய, இலங்கை நிர்வாக சேவை விசேட தர அதிகாரியான, டீ.டீ.கே.விக்கிரமராச்சி, அவருடைய நிரந்தரப் பதவிக்கு மேலதிகமாக 2024.12.12 தொடக்கம் காணி ஆணையாளராக பதில் கடமைக்கு நியமிக்கப்பட்டுள்ளார். அத்திணைக்களத்தில் சேவைகளின் நிமித்தம், பிரதேச நிர்வாக அனுபவங்களைக் கொண்டுள்ள அதிகாரியொருவரை நிரந்தரமாக நியமிக்க வேண்டிய தேவை உள்ளது. அதற்கமைய, தற்போது பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் உள்நாட்டலுவல்கள் பிரிவின் மேலதிக செயலாளராக (நிர்வாகம்) கடமையாற்றிய இலங்கை நிர்வாக சேவை விசேட தர அதிகாரியான ஆர்.ஏ.சந்தன சமன் ரணவீர ஆராச்சியை காணி ஆணையாளராக நியமிப்பது பொருத்தமெனக் கண்டறியப் பட்டுள்ளது. அவரை காணி ஆணையாளராக நியமிப்பதற்கு விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. விவசாய பணிப்பாளர் நாயகம் பதவிக்கு நியமித்தல்**

விவசாய பணிப்பாளர் நாயகம் பதவியில் தற்போது கடமையாற்றுகின்ற திருமதி கே.என்.எஸ்.ரணதுங்க 2025.01.21 தொடக்கம் அரச சேவையிலிருந்து ஓய்வு பெறவுள்ளார். அன்று தொடக்கம் வெற்றிடமாகவுள்ள பணிப்பாளர் நாயகம் பதவிக்கு புதிய அதிகாரியொருவரை நியமிக்க வேண்டியுள்ளது. குறித்த பதவிக்கு தற்போது விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் மேலதிக செயலாளர் (விவசாய தொழில்நுட்பம்) பதவியில் கடமையாற்றுகின்ற இலங்கை விவசாய சேவையின் விசேடதர அதிகாரியான திருமதி கலாநிதி ஈ.ஆர்.எஸ். பீ.எதிரிமான்னவை நியமிப்பதற்காக விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# 2024 ஜனாதிபதித் தேர்தல் குறித்த ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்புக் குழுவின் இறுதி அறிக்கை கையளிப்பு




ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழுவால் தயாரிக்கப்பட்ட ஜனாதிபதித் தேர்தல் குறித்த இறுதி அறிக்கை சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழுவின் தலைமைக் கண்காணிப்பாளர் ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் ஜோஸ் இக்னாசியோ சன்சேஸ் அமோர் உள்ளிட்ட தூதுக் குழுவினர் கடந்த 17ஆம் திகதி சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்னவைச் சந்தித்தனர். இந்தச் சந்திப்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவும் கலந்துகொண்டார்.

இச்சந்திப்பின்போது ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழுவின் தலைமைக் கண்காணிப்பாளர் சபாநாயகருக்கும் புதிய அரசாங்கத்துக்கும் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டார். இதனைத் தொடர்ந்து ஐரோப்பிய தேர்தல் கண்காணிப்புக் குழுவினால் தயாரிக்கப்பட்ட 2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் குறித்த இறுதி அறிக்கை சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டது.

ஜனநாயக முறையில் தேர்தல் நடத்தப்பட்டமை குறித்து ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழுவின் தலைமைக் கண்காணிப்பாளர் தனது பாராட்டைத் தெரிவித்தார். இதன்போது தேர்தல்கள் ஆணைக் குழுவின் வகிபாகத்தைப் பாராட்டிய அவர், இந்த ஆணைக்குழுவை மேலும் பலப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். தற்போதைய பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகமாக இருப்பதற்கும் அவர் தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழு தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டதற்குத் தனது நன்றியைத் தெரிவிப்பதாக சபாநாயகர் சுட்டிக் காட்டினார். உண்மையான ஜனநாயகப் பண்புகளுடன் கூடிய, மிகவும் வெளிப்படையான, ஊழல் இல்லாத நிர்வாகத்தை நோக்கி அரசாங்கம் தற்போது செயற்பட்டு வருவதாகவும் சபாநாயகர் வலியுறுத்தினார். அத்துடன், இந்த நாட்டில் முதல் தடவையாக இயலாமையுடைய பாராளுமன்ற உறுப்பினர்களின் மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் சபாநாயகர் மேலும் தெரிவித்தார்.

# அஸ்வெசும இரண்டாம் கட்ட கொடுப்பனவுக்கான விண்ணப்பதாரர்களின் தகவல் சேகரிக்கும் பணி ஆரம்பம்

அஸ்வெசும உதவித் தொகையைப் பெறுவதற்காக விண்ணப்பங்களை சமர்ப்பித்தவர்களின் வீடுகளுக்குச் சென்று தகவல்களைச் சேகரிக்கும் பணி நேற்று (21) முதல் ஆரம்பமாகியது.இப்பணி ஜனவரி 31ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் இரண்டாம் கட்டக் கணக்கெடுப்பின் வெற்றியை உறுதிசெய்வதற்காக முற்கூட்டியே திட்டமிடப்பட்ட தயாரிப்பாக நலன்புரி நன்மைகள் சபை திட்டமிட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக நிதித் திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

முதலில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்துடன் இணைந்து குடிசன மதீப்பீட்டு அதிகாரிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. அதன்படி, இந்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பை 3 கட்டங்களாக நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஜனவரி 06ஆம் திகதி முதல் ஜனவரி 14ஆம் திகதிவரை பிரதேச செயலகங்களில் மக்கள் தொகைக் கணக்கெடுப்புக்கு முந்தைய நடவடிக்கைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன. மேலும், ஜனவரி 15ஆம் திகதி முதல் 17ஆம் திகதிவரை மறுபரிசீலனை செயல்முறை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இறுதிக் கட்டமாக விண்ணப்பங்களை சமர்ப்பித்தவர்களின் தகவல்களைச் சேகரிக்கும் பணி ஜனவரி 31ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

# சபாநாயகரை சந்தித்தார் சவூதி அரேபிய தூதுவர்




இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் ஹமத் நஸார் அல்-கஹ்தானி அண்மையில் (17) சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்னவை பாராளுமன்றத்தில் சந்தித்தார். இச்சந்திப்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவும் கலந்துகொண்டார்.

சபாநாயகருக்கு தனது வாழ்த்தைத் தெரிவித்த தூதுவர் அல்- கஹ்தானி, இந்த ஆண்டு இலங்கைக்கும் சவூதி அரேபியாவுக்குமிடையிலான இருதரப்பு உறவுகளின் 50ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது எனச் சுட்டிக்காட்டினார். அத்துடன், இலங்கையின் பல்வேறு துறைகளில் அபிவிருத்திக்கான சவூதி அரேபியாவின் உறுதிப்பாட்டை அவர் இதன்போது வலியுறுத்தினார்.

கடந்த ஐந்து தசாப்தங்களாக இலங்கைக்கு சவூதி அரேபியா அளித்துவரும் நீண்டகால ஆதரவுக்கு சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார். இரு நாடுகளுக்குமிடையிலான வலுவான நட்புறவை சபாநாயகர் பாராட்டியதுடன், இலங்கையின் விவசாயம், தொழிற்றுறை மற்றும் சுற்றுலாத் துறைகளை மேம்படுத்துவதில் சவூதி அரேபியாவின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

பாராளுமன்றங்களுக்கிடையிலான உறவுகளை வலுப்படுத்தும் வகையில், பத்தாவது பாராளுமன்றத்தில் இலங்கை - சவூதி அரேபிய பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தை மீண்டும் ஸ்தாபிப்பது தொடர்பிலும் சபாநாயகர் தெரிவித்தார்.

இலங்கைக்கும் சவூதி அரேபியாவுக்குமிடையிலான ஒத்துழைப்பை அதிகரிக்கும் வகையில் வெளிநாட்டு முதலீடு மற்றும் வலுசக்தித் துறைகளிலுள்ள வாய்ப்புகள் குறித்தும் இதன்போது கவனஞ்செலுத்தப்பட்டது.

# மக்களால் நிராகரிக்கப்பட்ட தலைவர்களால் சுதந்திரக் கட்சியை வழிநடத்த முடியாது

## தயாசிறி ஜயசேகர எம்.பி. தெரிவிப்பு



(எம்.ஏ.அமீனுல்லா)

மக்களால் நிராகரிக்கப்பட்ட தலைவர்களால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வழிநடத்த முடியாதென பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

சட்டவிரோதமான முறையில் பதவிகளைப் பெற்று கட்சியை மேலும் அழித்து வருவதாகவும் வீழ்ச்சியடைந்துள்ள கட்சிக்கு புத்துயிரளிக்க புதிய தலைமை அவசியமென்றும் அதற்குத் தயாராக இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கண்டியில் நேற்று முன்தினம் (20) ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தற்போதைய தலைவர் மற்றும் செயலாளர் சட்டரீதியாகத் தெரிவுசெய்யப்படவில்லை. எந்த அதிகாரமும் அவர்களுக்கு இல்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இன்னும் தேர்தல் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படவில்லை. எனவே, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ற வகையில் எடுக்கப்பட்ட அனைத்து முடிவுகளும் சட்டவிரோதமானவை.

அவர்கள் இப்போது கதிரைச் சின்னத்தைப் பயன்படுத்தி அதிலிருந்து சில செயல்களைச் செய்ய முயற்சிக்கின்றனர். அதுவும் சட்டவிரோதமானது. அங்கேயும் பெரிய பிரச்சினைகள் உள்ளன.

பொதுஜன ஐக்கிய பெரமுனவை கதிரைச் சின்னத்துடன் அமைப்பதில் பல நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்போம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளராக இருமுறை நீதிமன்றத்தினால் எனக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதையும் மீறி ஒரு கும்பல் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து என்னை உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை.

நிமல் சிறிபால டி சில்வா மற்றும் துமிந்த திஸாநாயக்க ஆகிய இருவரும் தவறாக நியமிக்கப்பட்டுள்ளதாகக் கூறி கொழும்பு மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளோம்.

கட்சியின் செயலாளராக என்னை சட்டரீதியாகப் பொறுப்பேற்க அனுமதிக்குமாறும் நீதிமன்றம் கோரியுள்ளது. அந்த முடிவின் பின்னர் இலங்கை முழுவதும் சென்று சரியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி கட்சியை முன்னோக்கிக் கொண்டுசெல்லத் தயாராக உள்ளோம்.

எதிர்வரும் பெப்ரவரி 7ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்படவுள்ளது. முடிவு வேறு வடிவில் வந்தால் அதை எதிர்கொள்ளத் தயார். அதன் பின்னரே அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து முடிவுசெய்யப்படும்'' - என்றார்.

# புத்தளத்தில் ஆரோக்கியமான உணவு தயாரிப்பு பயிற்சியுடன் கூடிய கண்காட்சி





விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் அதன் இளந்தளிர் செயற்றிட்டத்தினூடாக செயற்படுத்தி வரும் சஞ்சீவி உணவுப் பயிற்சி தொடர்பான விளக்கவுரை மூன்று நாட்கள் புத்தளம் கிராமிய அபிவிருத்தி நிலையத்திலும் உணவுப் பொருள் கண்காட்சி வண்ணாத்திவில்லு பிரதேச சபையின் கூட்ட மண்டபத்திலும் அண்மையில் இடம்பெற்றன.

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் அதன் இளந்தளிர் வேலைத்திட்டத்தை புத்தளம் மாவட்டத்தில் புத்தளம் மற்றும் வண்ணாத்திவில்லு பிரதேச செயலகப் பிரிவுகளில் கே.என்.எச் நிறுவனத்தின் அனுசரணையுடன் செயற்படுத்தி வருகின்றது.

பாடசாலை மட்டங்களில் சமுதாய ரீதியிலும் நலிவுற்ற குடும்பத் தலைவிகள், பாதிக்கப்பட்ட பெண் குடும்பத் தலைவிகள், மாற்றுத்திறனாளிகளின் குடும்ப பிள்ளைகளினது தேவை அடிப்படையில் அமைந்த சிறுவர் உரிமைகள் மட்டுமன்றி, அவர்கள் அதனை அனுபவிப்பதற்கான உரிமைகளை மேம்படுத்தும் பணிகளையும் முன்னெடுத்தல் என்பவற்றை நோக்காகக் கொண்டு மேற்படி இளந்தளிர் செயற்றிட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

இதன் ஓர் அங்கமாக செயற்கைக் கலவைகள் இரசாயனப் பதார்த்தங்கள் பயன்படுத்தப்படாத சுகாதார முறையிலான ஆரோக்கியமான உணவுத் தயாரிப்பு தொடர்பான பயிற்சிகள் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் இளந்தளிர் செயற்றிட்டத்தின் அங்கத்தவர்களுக்கு டாக்டர் ஜானகியால் வழங்கப்பட்டது. அதன் மூலம் அங்கத்தவர்கள் போஷணை சத்துகள் அடங்கிய புதுவிதமான இயற்கை உற்பத்திகளைக் கொண்டு உணவு வகைகளைத் தயாரித்து காட்சிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# அநுராதபுரத்தில் வாகன விபத்து; 19 வயது இளைஞர் ஒருவர் பலி

(அநுராதபுரம் நிருபர்)

அநுராதபுரம்-கவறக்குளம் வீதியின் விமானப்படை முகாமுக்கு முன்னால் நேற்றுமுன்தினம் (20) இடம்பெற்ற விபத்தில் 19 வயது இளைஞரொருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக அநுராதபுரம் தலைமையக பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் பகுதியிலிருந்து கவறக் குளம் பகுதி நோக்கிச் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிளொன்று கார் ஒன்றை முந்திச் செல்வதற்கு முற்பட்டபோது எதிர்த்திசையில் வந்துகொண்டிருந்த ட்ரக் ரக வாகனமொன்றுடன் நேருக்கு நேர் மோதியது.

அநுராதபுரம் கல்குளம் பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட 19 வயது இளைஞனொருவரே இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளதாகத் தெரியவருகிறது. விபத்தில் உயிரிழந்த இளைஞனின் சடலம் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் தலைமையகப் பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் ஏற்பாட்டில் தைப்பொங்கல் விழா இரத்மலானையிலுள்ள சபையின் பிரதான காரியாலய முன்றிலில் நடைபெற்றது. இதன்போது சபைத்தலைவர் /பொறியியலாளர் தீப்தி யு. சுமணசேகர, பொது முகாமையாளர் ரீ. பாரதிதாசன் உட்பட உயரதிகாரிகள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர்.(படங்கள்: பேருவளை பீ.எம். முக்தார்)

# சட்டவிரோத சிகரெட்டுகளுடன் களுத்துறையில் இருவர் கைது



(எம்.எஸ்.எம்.முன்தஸிர்)

சட்டவிரோத சிகரெட்டுகளுடன் களுத்துறை வடக்கு பொலிஸ் பகுதியைச் சேர்ந்த இருவரை களுத்துறைப் பிரிவு குற்றத் தடுப்புப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் இந்தப் பிரதேச சிற்றுண்டிச்சாலையொன்றில் 80 சட்டவிரோத சிகரெட் பெட்டிகளுடன் காசாளரைக் கைதுசெய்து மேற்கொண்ட விசாரணைகளில் கைதுசெய்யப்பட்ட மற்றொரு சந்தேக நபர் தொடர்பான விபரங்கள் தெரியவந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் களுத்துறை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (21.01.2025)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 180.9735 | 190.4135 |
| கனேடியன் டொலர் | 201.6534 | 210.4127 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 39.4112 | 41.9840 |
| யூரோ | 302.3125 | 314.8373 |
| ஜப்பான் யென் | 1.8793 | 1.9544 |
| சிங்கப்பூர் டொலர் | 214.0266 | 223.6081 |
| ஸ்ரேலிங் பவுன் | 358.4075 | 372.2241 |
| சுவிஸ் பிரான்ங் | 319.7402 | 335.1054 |
| ஐ.அ. டொலர் | 292.8301 | 301.3321 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 787.4856 |
| குவைட் | குவைட் தினார் | 963.3754 |
| ஓமான் | ஓமான் ரியால் | 771.1909 |
| கட்டார் | கட்டார் ரியால் | 81.4192 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய ரியால் | 79.1169 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 80.8207 |

# சீரற்ற காலநிலையால் மூடப்பட்ட பாடசாலைகள் மீண்டும் ஆரம்பம்

## மாணவர்களின் வருகையும் அதிகரிப்பு




(மட்டக்களப்பு செய்தியாளர்)

கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக ஏற்படும் வெள்ள அனர்த்தத்தினால் மாணவர்களின் கல்வி நடவடிக்கை பாதிக்கப்பட்டு வருவதையடுத்து - மாணவர்களின் பாதுகாப்பைக் கவனத்தில் கொண்டு கிழக்கு மாகாண ஆளுநரினால் திங்கட்கிழமை சகல பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டிருந்தது.

இருப்பினும், கல்வி அமைச்சினால் மாகாணத்திலுள்ள சகல பாடசாலைகளும் கற்றல் செயற்பாடுகளுக்காக நேற்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 05 கல்வி வலயங்களிலும் கற்றல் செயற்பாடுகளுக்காக பாடசாலைகள் மீண்டும் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

செவ்வாய்க்கிழமை காலையிலிருந்து மழை சற்று ஓய்ந்திருக்கின்றது. இந்நிலையில், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், உற்சாகத்துடன் பாடசாலைகளுக்கு சமுகமளித்ததைக் காணக்கூடியதாக இருந்தது. தூர இடங்களுக்கான பாடசாலை பஸ் சேவைகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தன. மட்டக்களப்பு மாவட்டதின் படுவான்கரை பகுதியில் சில பாடசாலைகளை அண்டிய தாழ்நிலப் பிரதேசங்களில் வெள்ள நீர் ஊடறுத்துச் செல்வதனால் மாணவர்களின் வரவு குறைவாக இருந்தது. திங்கட்கழமை இரவு மாவட்டத்தில் மழை பெய்த போதிலும் செவ்வாய்க்கிழமை காலையிலிருந்து மழை சற்று தணிந்திருந்த காரணத்தால் மாணவர்கள் பாடசாலைகளுக்கு உற்சாகத்துடன் வருகை தந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. 90 வீதமான மாணவர்களின் வரவு பதிவானதாகப் பாடசாலைகளின் அதிபர்கள் தெரிவித்தனர்.

# களுதாவளை பொருளாதார மத்திய நிலையத்தை மக்கள் பயன்பாட்டுக்கு திறத்தல் தொடர்பில் கலந்துரையாடல்



(குருக்கள்மடம் செய்தியாளர்)

மண்முனை தென் எருவில்பற்று களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் பிரிவில் கடந்த 2018ஆம் ஆண்டு கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்ட களுதாவளை பொருளாதார மத்திய நிலையத்தை மக்கள் பயன்பாட்டுக்காகத் திறந்துவைப்பது தொடர்பான விசேட கலந்துரையாடல் அரசாங்க அதிபரும் முகாமைத்துவ சபைத் தலைவருமான திருமதி ஜே.ஜே.முரளிதரன் தலைமையில் பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னத்தின் ஒழுங்கமைப்பில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் திங்கட்கிழமை(20) இடம்பெற்றது.

இதன்போது பொருளாதார மத்திய நிலையத்துக்கான முகாமைத்துவ பொறுப்புச் சபைக் கலந்துரையாடல் இடம்பெற்றதுடன் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள உள்ளூர் உற்பத்தியாளர்களது மரக்கறி வகைகள், பழவகைகள் மற்றும் உள்ளூர் உணவு உற்பத்திப் பொருட்கள் போன்றவற்றை நியாய விலையில் பெற்று, அவற்றைப் பொதுமக்கள் பெற்றுக்கொள்ளும் வகையிலான நடவடிக்கைகளை எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி ஆரம்பித்துவைப்பது தொடர்பாகவும் களுதாவளை பொருளாதார மத்திய நிலையத்தின் அவசியம் பற்றியும் ஆராயப்பட்டது.

கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சின் முப்பது மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் ஐம்பது கடைத் தொகுதிகளைக் கொண்டதாக இப்பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் கலந்துரையாடலில் கடைத்தொகுதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஆர்வம் காட்டியிருந்த உற்பத்தியாளர்களும் கலந்து கொண்டதுடன், பொருளாதார நிலையத்தின் நடவடிக்கைகள் தொடர்பாகவும் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தல் மற்றும் கொள்வனவு செய்தல் மற்றும் சவால்கள் பற்றியும் கருத்துகளைத் தெரிவித்திருந்தனர்.

இந் நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன், மாவட்ட செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் நவநீதன், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ரீ.நிர்மல்ராஜ், பிரதேச சபைச் செயலாளர் எஸ்.அறிவழகன், விவசாய அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் கே.ஜெகநாத், மாவட்ட செயலக விவசாயப் பணிப்பாளர் எம்.எவ்.ஏ.சனீர், களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரி. அபேவிக்கிரம, களுவாஞ்சிக்குடி வர்த்தக சங்கத் தலைவர், கமநல அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.





**கிண்ணியா ,குறிஞ்சாக்கேணி கமநல சேவை நிலையப் பிரிவுக்குட்பட்ட நடுஊற்றில் பெரும்போக நெல் அறுவடை செய்வதைக் காணலாம்.(தம்பலகாமம் செய்தியாளர்)**



**இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவரும் பட்டிருப்புத் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சீ.மு.இராசமாணிக்கத்தின் பிறந்த தினத்தை முன்னிட்டு (ஜனவரி 20, 1913) களுவாஞ்சிக்குடி வட்டாரக்கிளையின் ஏற்பாட்டில் அவரது உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து கௌரவித்தனர்.**

# மட்டக்களப்பில் வெள்ளத்தினால் 11,971 பேர் பாதிப்பு

## 09 முகாம்களில் 921 பேர் தஞ்சம்

## 17 வீடுகள் சேதம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் 11,971 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 09 முகாம்களில் 921 பேர் தஞ்சமடைந்துள்ளனர். அதேவேளை, 17 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவம் தெரிவித்துள்ளது.

அத்துடன், பல ஆயிரக்கணக்கான ஏக்கர் வேளாண்மை நீரில் மூழ்கி பாதிக்கப்பட்டுள்ளதுடன் மாவட்டதிலுள்ள சில பிரதேசங்களுக்கும் வெளிமாவட்டங்களுக்குமான பஸ் மற்றும் ரயில் சேவைகளும் துண்டிக்கப்பட்டுள்ளன.

கடந்த 18ஆம் திகதி ஆரம்பித்த கன மழையால் உன்னிச்சைக்குளம் உட்பட ஏனைய குளங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டதையடுத்து வயல் நிலங்கள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன. இந்த நிலையில், மாவட்டத்திலுள்ள தாழ்நிலப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியதையடுத்து 3,737 குடும்பங்களைச் சேர்ந்த 11,971 பேர் பாதிக்கப்பட்டதுடன் 17 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. 3,037 குடும்பங்களைச் சேர்ந்த 10,031 பேர் வீடுகளை விட்டு வெளியேறி உறவினர் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளதுடன் 09 முகாம்களில் 334 குடும்பங்களைச் சேர்ந்த 921 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மாவட்டத்திலுள்ள பல பிரதேசங்களிலுள்ள தாம்போதிகளின் மேலால் 4 அடி உயரத்துக்கு வெள்ள நீர் பாய்ந்து ஓடுவதால் வெல்லாவெளிக்கும் மண்டூருக்குமிடையிலான போக்குவரத்தும் கிரானுக்கும் புலிபாய்ந்தகல் பிரதேசத்துக்கான போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டு அதற்கான படகுச் சேவைகளும் இடம்பெற்று வருகின்றன.

இந்த வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சமைத்த உணவு வழங்கப்பட்டு வருவதுடன் தொடர்ந்து மழை பெய்தால் வெள்ளத்தினால் இன்னும் பல குடும்பங்கள் குடியிருப்புகளை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்படும். தொடர்ந்து மழைபெய்துவருவதால் மக்களின் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துவருவதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.



**திருகோணமலை, சம்பூர் பொலிஸ் பிரிவிலுள்ள சூடக்குடா கடல் பகுதியில் போயா வடிவிலான(மிதவை கட்டை) மர்மப் பொருளொன்று நேற்று (21) காலை கரையொதுங்கியது. இந்தப் பொருள் 12 அடி சுற்றளவும் 07 அடி நீளம் கொண்டதாகவும் காணப்படுகிறது. இது என்ன பொருளென சரியாகக் கண்டறியப்படவில்லை. பிரதேச மக்கள் கடற்கரையில் ஒதுங்கிய இதனை அவதானித்து சம்பூர் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்பூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (சீனக்குடா செய்தியாளர்)**

# சேனைக்குடியிருப்பு ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலைய குறைபாடுகளை நிவர்த்திக்கக் கோரிக்கை

(நற்பிட்டிமுனை செய்தியாளர்)

கல்முனை மேற்கு, சேனைக்குடியிருப்பு ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையத்தில் நிலவும் குறைபாடுகள் தீர்க்கப்பட வேண்டுமென பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

சிகிச்சைக்கு வரும் நோயாளர்களுக்கு அல்லது கடமை செய்யும் ஊழியர்களுக்குத் தேவையான முறையான மலசலகூட வசதிகள் இல்லாமை பெருங்குறைபாடாகக் காணப்படுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

மர்ஹூம் மன்சூர் அமைச்சராக இருந்தபோது கட்டப்பட்ட இக்கட்டிடம் பல்லாண்டு காலம் கடந்தும் இதுவரை திருத்தப்படவோ அல்லது அதனை இடித்து புதிய கட்டிடம் அமைக்கப்படவோ இல்லை. அதேவேளை, கடமையாற்றும் ஊழியர்கள் கொண்டுவரும் உணவை சாப்பிடக்கூட முறையான இடமுமில்லை. இந்நிலையில், பாதுகாப்பு ஊழியர்கள் எவரும் இங்கில்லையெனவும் அதிகமானோர் நின்றுகொண்டே வைத்தியம் பெறக் காத்திருக்கின்றனர் எனவும் இடவசதி போதுமானதாக இல்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கல்முனை மாநகரசபையின் முன்னாள் உறுப்பினரும் ஓய்வு நிலை ஆசிரியருமான ஏ.அப்துல்கபூர் மற்றும் ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகரும் ஊடகவியலாளருமான எஸ்.சிராஜுதீன் ஆகியோர் வைத்தியசாலை வைத்தியர் சில்மியுடன் இது குறித்து நேற்று கலந்துரையாடினர்.

சம்பந்தப்பட்ட குறைபாடுகள் குறித்து பொதுமக்களுடன் இணைந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துரையாடுவதெனவும் மாவட்ட அபிவிருத்திச் சபைக் கூட்டத்தில் இக்குறைபாடுகளை தெரிவிக்க வைத்தியசாலை அபிருத்திச் சங்கமொன்றை உருவாக்குவதெனவும் இதன்போது முடிவெடுக்கப்பட்டது.

இதேவேளை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் சகீலா இஸ்ஸதீன் அண்மையில் அங்கு சென்று பார்வையிட்டு அத்தியாவசிய தேவையான கதிரைகளை வழங்கியமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

# அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளராக அஸீம் கடமையேற்பு



(மீனோடைக்கட்டு செய்தியாளர்)

அம்பாறை மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளராக நியமிக்கப்பட்ட மருதமுனையைச் சேர்ந்த எஸ்.எல்.ஏ.எஸ்.அஸீம் நேற்று (21) தனது கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அம்பாறை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளராகக் கடமையாற்றி வந்த கமல் நெத்மினி ஜனாதிபதி செயலகத்துக்கு இடமாற்றம் பெற்றுச்சென்றதால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கே கல்முனை மாநகர சபையின் பிரதி ஆணையாளராகக் கடமையாற்றி வந்த இவர் நியமிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் கல்முனை மாநகர சபை ஆணையாளர் ஏ.டி.எம்.ராபி, அக்கரைப்பற்று மாநகர சபை ஆணையாளர் என்.எம்.நௌபீஸ் மற்றும் காரியாலய உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்ததுடன் தமது வாழ்த்தையும் தெரிவித்துக்கொண்டனர்.



**இலங்கை சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் உதவி மாவட்ட சாரண ஆணையாளர்களுக்கான (ஊடகம்) ஒரு நாள் செயலமர்வு கொழும்பு சாரணர் தலைமைக் காரியாலயத்தில் சனிக்கிழமை(18) இடம்பெற்றது. பிரதம சாரண ஆணையாளர் சட்டத்தரணி ஜனப்ரித் பெர்னாண்டோவின் வழிகாட்டலின் கீழ் தலைமைக் காரியாலய பிரதி, உதவி ஆணையாளர்களினால் பல்வேறுபட்ட தலைப்புகளில் நடத்தப்பட்ட இச்செயலமர்வில் சகல மாவட்டங்களிலிருந்தும் ஊடகத்துக்குப் பொறுப்பான உதவி மாவட்ட ஆண், பெண் சாரண ஆணையாளர்கள் கலந்துகொண்டு பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டனர். (கோணாவத்தை செய்தியாளர்)**







**நீதிச்சேவையில் 34 ஆண்டுகள் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் மருதமுனையின் முதலாவது நீதிபதி ரி.எல்.அப்துல் மனாப்பின் சேவையைப் பாராட்டி மருதமுனை சட்டத்தரணிகள் சங்கம் ஏற்பாடு செய்த கௌரவிப்பு நிகழ்வு சிரேஷ்ட சட்டத்தரணியும் கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவருமான எம்.ஐ.றைசுல் ஹாதி தலைமையில் ஞாயிற்றுக்கிழமை(19) மருதமுனையில் நடைபெற்றது. நீதவான்கள், சிரேஷ்ட - கனிஷ்ட சட்டத்தரணிகள், ஊடகவியலாளர்கள், அப்துல் மனாப்பின் குடும்பத்தினர் எனப் பலரும் கலந்துகொண்ட இந்நிகழ்வில் சட்டத்தரணிகள் சங்கத்தினரால், நீதிபதி பென்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். (பெரியநீலாவணை செய்தியாளர்)**

# தனியார் மருந்தகங்கள் ஊடாக பொதுமக்களுக்கு சிறந்த சேவையை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை





(மாளிகைக்காடு செய்தியாளர்)

கல்முனை பிராந்தியத்திலுள்ள தனியார் மருந்தகங்களின் (Community Pharmacy) தரங்களை மேம்படுத்தி பொதுமக்களுக்கு சிறந்த சேவையைப் பெற்றுக்கொடுக்கும் பொருட்டு தனியார் மருந்தகங்களின் உரிமையாளர்களுக்கும் அதன் பணியாளர்களுக்கும் 'சிறந்த மருந்தகங்களின் செயன்முறை' தொடர்பான செயலமர்வொன்று மாளிகைக்காடு பாவா றோயலி மண்டபத்தில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய சுற்றுச்சூழல் தொழில், சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்புப் பிரிவு அம்பாறை மாவட்ட கரையோர மருந்தக உரிமையாளர்கள் சங்கத்துடன் இணைந்து குறித்த செயலமர்வை ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிகழ்வில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன், சுற்றுச்சூழல் தொழில் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி ஏ.எஸ்.எம்.பௌசாத், பிராந்திய மருந்தாளர் திருமதி எஸ்.இந்திரகுமார், உணவு, மருந்துகள் பரிசோதகர் எஸ்.ஜீவராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது பிராந்திய பணிப்பாளர் சகீலா இஸ்ஸதீன், சுற்றுச்சூழல் தொழில் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எஸ்.எம்.பௌசாத் ஆகியோர் தனியார் மருந்தகங்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள், அது தொடர்பான சட்டதிட்டங்கள் பற்றியும் விரிவுரையாற்றினர்.

குறித்த செயலமர்வில் தனியார் மருந்தகங்களின் உரிமையாளர்கள், பணியாளர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## ஆளுநர் – திணைக்களத் தலைவர்களுக்கிடையே

# கிளீன் ஸ்ரீலங்கா திட்ட செயலமர்வுகளை நடத்துவது தொடர்பில் கலந்துரையாடல்



(கிண்ணியா செய்தியாளர்)

கிழக்கு மாகாண சபை அமைச்சின் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் ஆகியோர்களுக்கான கலந்துரையாடல் திருகோணமலையிலுள்ள ஆளுநர் செயலகத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர தலைமையில் திங்கட்கிழமை(20) நடைபெற்றது.

இந்நிகழ்வில், கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்க மற்றும் கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் ஜே.எஸ்.அருள்ராஜ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அரச நிறுவன மட்டத்தில் கிளீன் ஸ்ரீலங்கா குறித்த விழிப்புணர்வு செயலமர்வுகளை நடத்துவது குறித்து அமைச்சுகள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்குத் தெளிவூட்டப்பட்டது. குறித்த நிகழ்வின்போது கருத்துரைத்த ஆளுநர்,

கிளீன் ஸ்ரீலங்கா என்பது குப்பைகளை அகற்றி சுற்றுச்சூழலை சுத்தம் செய்வது மட்டுமல்ல, சுற்றுச்சூழல், சமூக மற்றும் மனப்பான்மை மேம்பாட்டோடு செயற்படும் நீண்டகால திட்டமாகும். கூடுதலாக, மாகாண சபையால் செலவினங்களைக் கட்டுப்படுத்துவதில் கவனஞ்செலுத்துமாறு நிறுவனத் தலைவர்களையும் கேட்டுக்கொண்டார். குறிப்பாக, தொடர்ச்சியான செலவுகளைக் கட்டுப்படுத்த நிறுவன மட்டத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் அவர் கூறினார்.

ஆளுநர் செயலகம் இந்தப் பணிகளை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளது. ஒக்டோபர் 2024க்கு முன்னர் செயலகத்தின் வாகனங் களுக்கான மாதாந்த எரிபொருள் செலவு 1.62 மில்லியன் ரூபாவாக இருந்தது. ஒக்டோபர் முதல் மாதாந்த எரிபொருள் விநியோக செலவு எரிபொருள் வாகனங்களுக்கான கட்டணம் ரூ.2-3 இலட்சங்களாகக் குறைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

பயன்படுத்தப்படாமல் இருக்கும் சேதமடைந்த வாகனங்களைப் பழுதுபார்த்து பயன்பாட்டுக்கு கொண்டுவரவும் பயன்படுத்த முடியாத வாகனங்களை சட்டபூர்வமாக ஏலம் விடவும் மாகாண சபைக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ இல்லங்களின் பாழடைந்த நிலை குறித்து கவனம் செலுத்தி பராமரிப்பை மேற்கொள்ளவும் மாகாண சபையிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில், மாகாண அமைச்சுகள் மற்றும் துறைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து நிறுவனத் தலைவர்களுடன் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பொத்துவில் பிரதேச செயலகத்துக்கு நிரந்தர செயலாளரை உடனடியாக நியமிக்குக

## உதுமாலெப்பை எம்.பி.



(திராய்க்கேணி செய்தியாளர்)

பொத்துவில் பிரதேச செயலாளர் வெற்றிடம் கடந்த 07 மாத காலமாக நிரப்பப்படாமல் உள்ளதால் அப்பிரதேச மக்கள் பல கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர். எனவே அப்பிரதேச செயலகத்துக்கு நிரந்தர பிரதேச செயலாளர் ஒருவரை உடனடியாக நியமிக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை, பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆலோக பண்டாரவை நேரடியாக அமைச்சில் சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் அப்பிரதேச மக்கள் பல பிரச்சினைகளுக்கும் முகங்கொடுத்து வந்துள்ளனர். இன்னும் பல்வேறு பிரச்சினைகளையும் எதிர்நோக்கி வருகின்றனர். இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதென்றால் நிரந்தரமான பிரதேச செயலாளர் ஒருவரை நியமிக்க வேண்டுமென்று பாராளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டிய அதேவேளை, பொத்துவில் பிரதேச செயலாளர் வெற்றிடத்தை நிரப்புவதற்காக அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டு அம்பாறை மாவட்ட செயலாளரால் சிபாரிசு செய்தும் இதுவரையும் பொத்துவில் பிரதேச செயலகத்துக்கான செயலாளர் நியமனம் மேற்கொள்ளப்படவில்லை என்ற விடயத்தையும் எடுத்துரைத்தார்.

இதன் பின்னர் பொத்துவில் பிரதேச செயலகத்துக்கான நிரந்தர பிரதேச செயலாளர் ஒருவரை மிக விரைவில் நியமிப்போம் என்ற உத்தரவாதத்தை பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆலோக பண்டார தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பில் பொது நிர்வாக அமைச்சின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் எஸ்.வீரசிங்க, மேலதிக செயலாளர் திருமதி ஆர்.எம்.என்.ஈ.கே.ரணசிங்க, பொது நிர்வாக அமைச்சின் பொதுப்பணிப்பாளர் பொறியியலாளர் யூ.எல்.ஏ.நசார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சீனா அலையால் இந்தியாவின் பாதுகாப்பு கேள்விக்குறியாகும்

## முன்னாள் எம்.பி. அரியநேத்திரன்



(துறைநீலாவணை செய்தியாளர்)

தேசிய மக்கள் சக்தி அரசு சீன, இந்திய நாடுகளைப் பகைத்துக்கொள்ளாமல் கையாளும் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களால் எதிர்காலத்தில் சீனாவில் மிதமிஞ்சிய அலை என்பது இந்தியாவின் பாதுகாப்புக்குக் கேள்விக்குறியானாலும் ஆச்சரியம் இல்லை - என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சி மத்தியகுழு உறுப்பினருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரவின் சீனா மற்றும் இந்திய விஜயங்கள் தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற அநுர நான்கு மாதங்களுக்குள் இரண்டு நாடுகளுக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு இந்தியாவிலிருந்தும் சீனாவிலிருந்தும் பல முதலீடுகளை இலங்கையில் மேற்கொள்ள அனுமதி வழங்கியுள்ளார். இதில் ஏட்டிக்குப் போட்டியாக இந்தியாவின் உதவிகளை விட பல மடங்கு உதவிகளாக ஏறக்குறைய 27 திட்டங்களுக்கு சீனா மூதலீடுசெய்ய முன்வந்துள்ளது.

பொருளாதார உதவித் திட்டங்கள், அபிவிருத்திகள் என்பன ஒருநாட்டு வளர்ச்சிக்கு கட்டாயம் தேவை. அதில் மாற்றுக்கருத்துகள் இல்லை. இந்தியாவும் சீனாவும் எப்போதுமே கீரியும் பாம்பும் போன்ற நிலையில்தான் உள்ளன.

இந்நிலையில் இரண்டு நாடுகளுக்கும் இலங்கை ஒரு கேந்திர நாடாக உள்ளது. இரண்டு நாடுகளுக்கும் உளவுத்துறை விடயங்களைக் கையாள இலகுவான தளமாக இலங்கையைப் பயன்படுத்தக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. இந்தியாவைப் பொறுத்தவரை திருகோணமலை துறைமுகம் இந்தியாவின் பாதுகாப்புக்கு மிக அவசியமானதாகக் கருதப்படுகிறது. சீனாவின் முதலீடுகள் என்ற போர்வையில் கிழக்கு மாகாணத்தில் சீனாவின் ஆதிக்கம் கூடுதலாக இருக்குமானால் அது திருகோணமலை துறைமுகத்திலும் சீனா காலூன்றக்கூடிய வாய்ப்புகள் இல்லாமல் இல்லை.

இவ்வாறான நிலையில், இந்தியாவின் பாதுகாப்பு எதிர்காலத்தில் கேள்விக்குறியாக கூட மாறலாம். இலங்கையின் பூகோள அரசியலிலும் ஈழமக்களின் அரசியல் தீர்வு விடயங்களிலும் இந்தியாவைப் புறந்தள்ளி எந்தத் தீர்வும் பெறமுடியாதென்பது உண்மை. இந்த விடயங்களைக் கருத்திற்கொண்டு இந்தியாவும் ஈழத்தமிழர்களின் இனப்பிரச்சினை தீர்வுக்காக மட்டுமன்றி, இந்தியாவின் எதிர்கால பாதுகாப்பு நலன்களைக் கருத்திற்கொண்டு இணைந்த வடக்கு, கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வுக்காக இலங்கை அரசை வலியுறுத்த வேண்டிய கட்டாயம் இந்தியாவுக்கு உண்டு எனவும் கூறினார்.

# யானையின் பிடியிலிருந்து தப்பிக்க முயன்ற குடும்பஸ்தர் மின்சாரவேலியில் சிக்கிப் பலி

(மண்டூர் செய்தியாளர்)

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கச்சக்கொடிசுவாமிமலை கொக்கட்டிச்சோலை பிரதேசத்தில் யானையின் பிடியிலிருந்து தப்பிக்க முயன்ற குடும்பஸ்தர் மின்சாரவேலியில் சிக்கிப் பலியான சம்பவம் திங்கட்கிழமை (20) இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கச்சக்கொடிசுவாமிமலை, கொக்கட்டிச்சோலை பிரதேசத்தைச் சேர்ந்த 05 பிள்ளைகளின் தந்தையான 49 வயதுடைய கணபதிப்பிள்ளை மயிலிப்போடி என்பவரே இவ்விபத்தில் சிக்கிப் பலியானவராவார்.

சம்பவதினத்துக்கு முதல் இரவு யானைகளின் அட்டகாசங்களைக் கட்டுப்படுத்தும் நிமித்தம் யானைகளை விரட்டுவதற்காக சென்றபோது யானை தாக்க முற்பட்டது. அதிலிருந்து தப்பிக்க முயன்றபோது குறித்த பிரதேசத்திலுள்ள தனது தோட்டப்பயிர்களை யானைகளிடமிருந்து பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டு தோட்ட வளாகத்தைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த மின்சாரவேலியில் சிக்கி சம்பவ இடத்தில் பலியானதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் வேண்டுதலுக் கமைவாக பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி கே.டினேஸ்வரன் சடலத்தைப் பார்வையிட்டு விசாரணைகளின் பின்னர் சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு சட்ட வைத்திய அதிகாரிக்குப் பணித்தார். சம்பவம் பற்றிய விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சுகிர்தராஜனின் 19ஆவது ஆண்டு ஞாபகார்த்த நிகழ்வு 24ஆம் திகதி




(தம்பலகாமம் செய்தியாளர்)

திருகோணமலையில் 2006.01.24ஆம் திகதி படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜனின் 19ஆவது ஆண்டு ஞாபகார்த்த நிகழ்வு எதிர்வரும் 24ஆம் திகதி பி.ப.02 மணியளவில் திருகோணமலை உவர்மலை, லோவெர் வீதியில் அமைந்துள்ள உவர்மலை பூங்காவில் நடைபெறவுள்ளது.

இந்நினைவேந்தல் நிகழ்வானது வடக்கு, கிழக்கு ஊடக அமைப்புகள், சிவில் அமைப்புகள் மற்றும் சிவில் செயற்பாட்டாளர்கள் ஆகியோரின் பங்குபற்றலுடன் நடைபெறவுள்ளது.

இந்நினைவேந்தல் நிகழ்வில் அனைவரையும் பங்கேற்குமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுக்கின்றனர்.

# கிளீன் ஸ்ரீ லங்கா நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக தெளிவூட்டும் நிகழ்வு



(நாவிதன்வெளி செய்தியாளர்)

கிளீன் ஸ்ரீ லங்கா வேலைத்திட்டம் தொடர்பாக சம்மாந்துறை பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு தெளிவூட்டும் பயிற்சி நெறி நேற்று(21) சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பிரதான மூன்று விடயங்களான சமூக அடிப்படை, சுற்றாடல் அடிப்படை மற்றும் நெறிமுறை அடிப்படையிலான விடயங்கள் தொடர்பான தெளிவூட்டல்கள் இதன் போது வழங்கப்பட்டன.

அழகான தீவு சிரிக்கும் மக்கள் எனும் கருப்பொருளை அடைவதற்கு நடைமுறைப்படுத்தப்படவுள்ள செயற்றிட்டங்கள் தொடர்பான தெளிவூட்டலை பிரதேச செயலாளரினால் விளக்கங்கள் வழங்கப்பட்டன.

நீடித்த சமூக கலாசாரத்தை மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு நாம் தனிநபர் மாற்றத்தினுடாக அதனை ஏற்படுத்த வேண்டும் என இதன்போது கருத்து பிரதேச செயலாளரினால் கருத்து தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் யூ.எம்.அஸ்லம், கணக்காளர் எஸ்.எல்.சர்தார் மிர்ஸா, நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம்.ஜெமீல், மேலதிக மாவட்ட பதிவாளர் ஏ.கே.ரினோஸா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அபிவிருத்தி தொடர்பான கூட்டம்



(மாளிகைக்காடு செய்தியாளர்)

அக்கரைப்பற்று பிரதேச வைத்தியசாலையின் அபிவிருத்தி தொடர்பான கூட்டம் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன் தலைமையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர், அக்கரைப்பற்று பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி எம்.ஐ.ஏ.நசீர் உள்ளிட்ட வைத்தியர்கள், வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

வைத்தியசாலையின் தற்போதைய தேவைகள் மற்றும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பாக கேட்டறிந்து கொண்ட பணிப்பாளர் வைத்தியசாலையின் அத்தியாவசிய தேவைகளை நிவர்த்தி செய்து தருவதாகவும் இதன்போது உறுதியளித்தார்.



**கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலாளர் ஏ.தாஹிரின் வழிகாட்டலில், பிரதேச சபையின் செயலாளர் எஸ்.எம்.சஹாப்தீனின் உதவியுடன் சமூக செயற்பாட்டாளரும் கல்குடா டைவர்ஸின் ஆலோசகருமான முபாறக் தலைமையில் வெள்ளத்தில் சிக்கியிருந்த 16 விவசாயிகள் கல்குடா டைவர்ஸின் அனர்த்த அவசர சேவை மீட்பு அணியால் மீட்கப்பட்டு கரைசேர்க்கப்பட்டுள்ளனர். குறித்த விவசாயிகள் கிடைச்சிமடு, ஆத்துச்சேனை பிரதேச வயல்களில் சிக்கியிருந்ததுடன், வயற்பிரதேசங்களுக்கான பாதைகளும் முற்றுமுழுதாக வெள்ளநீரால் சூழப்பட்டிருந்தன.**

**(காத்தான்குடி மேலதிக செய்தியாளர்)**

**கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் தும்பங்கேணி நெற்சந்தைப்படுத்தும் நிலையம் படையினரால் துப்புரவு செய்யப்பட்டது. இந்நிலையில், மட்டக்களப்பு, கல்லடி 243ஆவது இலங்கை இராணுவ படைப்பிரிவின் பொறுப்பதிகாரியின் ஆலோசனையின்பேரில் குருக்கள்மடம் இராணுவ முகாம் படையினரால் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் மற்றுமொரு செயற்பாடாக போரதீவுப்பற்று பிரதேசத்துக்குப்பட்ட தும்பங்கேணி நெல் சந்தைப்படுத்தும் நிலையமும் நேற்று (21) துப்புரவு செய்யப்பட்டது. இதுவரைகாலமும் துப்புரவுப் பணிகள் செய்யாமல் காணப்பட்டிருந்த குறித்த நெற்சந்தைப்படுத்தும் நிலையம் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின்கீழ் துப்புரவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.**

**(குருக்கள்மடம் செய்தியாளர்)**



# இலங்கையின் முதலாவது Beauty Snack இனை அறிமுகப்படுத்தும் Motha








இலங்கையின் இனிப்பு சாப்பாடுகளுக்கான சந்தையின் ஒரு முன்னோடி நிறுவனமான Motha ஜெலி வகைகளில் ஒரு முக்கிய தயாரிப்பான Jellegen இனை பிரமாண்டமாக சந்தைக்கு அறிமுகப்படுத்தியதன் மூலம் தனது திறமையை மீண்டும் ஒரு முறை நிரூபித்துள்ளது. கடந்த ஜனவரி 15ஆம் திகதி Cinnamon Grand ஹோட்டலின் ஐவரி அறையில் அறிமுகப்படுத்தப்பட்ட Jellegen இலங்கைப் பெண்கள் அழகு மற்றும் சுய பராமரிப்பை அணுகும் முறையில் புரட்சியை ஏற்படுத்துவதாக உறுதியளித்துள்ளது. இந்நிகழ்வில் அழகுத் துறையில் முக்கிய கருத்துத் தலைவர்கள் உட்பட உயர்மட்ட பார்வையாளர்கள் கலந்துகொண்டதுடன், அவர்களுக்கு இந்தத் தனித்துவமான, தரம் வாய்ந்த தயாரிப்பு அறிமுகப்படுத்தப்பட்டது.

### புதுமையின் அழகு

Jellegen என்பது ஒரு சாதாரண ஜெலி அல்ல. இது இளமையான சருமத்தைப் பாதுகாப்பதிலும் ஒட்டுமொத்த அழகை மேம்படுத்துவதிலும் ஒரு முக்கிய அங்கம் வகிக்கும் கொலாஜன் உள்ளடங்கிய இலங்கையின் முதலாவது அழகு சிற்றுண்டியாகும். பெரும்பாலும் சருமத்தைக் கட்டியெழுப்பும் நிகழ்வின் அடித்தளமெனக் குறிப்பிடப்படும் கொலாஜன் நெகிழ்ச்சித்தன்மையைப் பராமரிக்கவும் சுருக்கங்களின் தோற்றத்தைக் குறைக்கவும் பொலிவான நிறத்தை மேம்படுத்தவும் உதவுகிறது. Jellegen மூலம் Motha மகிழ்ச்சியையும் செயற்பாட்டையும் அற்புதமாக இணைத்து, பசியைப் பூர்த்திசெய்வது மட்டுமல்லாமல் அழகு இலக்குகளை அடைய வழிகாட்டக்கூடிய ஒரு சிற்றுண்டியாகவும் செயற்படுகின்றது.

இதுவரைகாலமும் அழகு பற்றிய கரிசனையுள்ள நுகர்வோருக்கு இலங்கையில் சிற்றுண்டிகள் எதுவும் சந்தையில் இருக்கவில்லை. Jellegenஇன் அறிமுக வசதி மற்றும் சுய பராமரிப்பு ஆகிய இரண்டையும் பூர்த்திசெய்யும் ஒரு புதிய தயாரிப்பு வகையின் தொடக்கத்தைக் குறிக்கிறது.

### ஞாபகம் வைத்துக்கொள்ளவேண்டிய ஒரு பிரமாண்டமான அறிமுகம்

Jellegen இன் பிரமாண்டத்தையே பிரதிபலிக்கும் வகையிலாக பிரமாண்டமான அறிமுக நிகழ்வு நடைபெற்றது. Cinnamon Grand ஹோட்டலின் ஆடம்பரமான ஐவரி அறையில் நடைபெற்ற இந்த நிகழ்வு அழகு, ஆரோக்கியம் மற்றும் புதுமையின் கொண்டாட்டமாக அமைந்தது. அழகுத் துறையில் முக்கிய கருத்துத் தலைவர்கள் உட்பட பங்குபற்றியவர்களுக்கு கொலாஜனுக்கு பின் உள்ள அறிவியல் மற்றும் Jellegen அதை எவ்வாறு ஒரு சுவையான சிற்றுண்டியாக ஒருங்கிணைக்கின்றது என்பது பற்றிய ஒரு விரிவான விளக்கம் வழங்கப்பட்டது.

பெண்கள் தனது அழகை ஏற்றுக் கொண்டு செயற்படுவதற்காக அழகு பற்றிய கரிசனையுள்ள பெண்களுக்கு உகந்த சிற்றுண்டியொன்றை சந்தைக்கு Motha அறிமுகப்படுத்தியமை முன்னிட்டு நிகழ்வு நடைபெற்ற சூழல் உற்சாகத்தால் நிறைந்திருந்தது.

விருந்தினர்களுக்கு Jellegenஇனை சுவைப்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டதன் பின் இலங்கையின் அழகு நடைமுறைகளை இந்தத் தயாரிப்பு எவ்வாறு மாற்றியமைக்க முடியும் என்பது பற்றிய உரையாடல்களைத் தூண்டிவிட்டது.

### சுய பராமரிப்பு மூலம் பெண்களுக்கு அதிகாரம் அளித்தல்

அழகையும் ஆரோக்கியத்தையும் பராமரிப்பதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்பவர்களுக்காக Jellegen வடிவமைக்கப்பட்டுள்ளது. சுய பராமரிப்பை ஒரு மகிழ்ச்சியான, அணுகக்கூடிய விடயமாக ஆக்கும் நோக்கில் கொலாஜனை பெண்களின் தினசரி வாழ்வில் ஓர் அங்கமாக்கிக் கொள்வதற்கு இது ஒரு மகிழ்ச்சிகரமான, நடைமுறையான வழியைக் காட்டுகின்றது. Jellegen ஒரு சிற்றுண்டி என்பதைத் தாண்டியும் முக்கியமானது; பெரும்பாலும் பெண்களின் பங்கேற்பை வேறு துறைகளில் எதிர்பார்க்கும் இவ்வுலகில் பெண்கள் சுயவிருப்பில் இயங்குவதற்கான தளத்தை உருவாக்கும் ஒரு சின்னமாக இது செயற்படுகின்றது.

### அழகு மற்றும் ஆரோக்கியத்துக்கான பிரகாசமான எதிர்காலம்

மக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமான Motha வீட்டிலிருந்து ஜெலி சந்தைக்கான புதிய தரத்தை நிர்ணயிப்பது மட்டுமன்றி, அழகு சம்பந்தமான சிற்றுண்டிகளுக்கான தயாரிப்புகள் எதிர்காலத்தில் இலங்கையில் வெளிவருவதற்கான களத்தையும் அமைத்துள்ளது. அழகு சம்பந்தமான சிற்றுண்டிகளில் முதல் தயாரிப்பாக சந்தைப்படுத்தப்படும் Jellegen Motha வின் புத்தாக்க திறனுக்கும், நுகர்வோரின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கான அர்ப்பணிப்புக்கும் சான்றாக நிற்கிறது.



கடந்த ஒன்பது தசாப்தங்களாக தங்க நகை உலகின் மன்னனாகத் திகழும் ராஜா ஜுவலர்ஸ், அதன் சமீபத்திய நகை வரிசையின் மர்மத்தை வெளிப்படுத்தும் வகையில் பின்தன்ன ஊத் ஒயில் நிறுவனத்துடன் (Pintanna Oud Oil (Private) Limited) கூட்டுச் சேர்ந்துள்ளது. இந்த அற்புதமான கூட்டாண்மையில் கையெழுத்திடும் நிகழ்வு கடந்த 2025 ஜனவரி 10ஆம் திகதி இடம்பெற்றது.

# சிறந்த வங்கிக்கான யூரோமனி விருதை வென்றுள்ள NDB




நெஷனல் டெவலப்மென்ட் வங்கி பிஎல்சியானது [NDB] யூரோமனி விருதுகள்-2024 நிகழ்வில் பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கத்துக்கான கௌரவமிக்க சிறந்த வங்கி விருதைப் பெற்றுள்ளது. இந்த அங்கீகாரமானது பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் பாலின சமத்துவத்தை வென்றெடுப்பதன் மூலம் இலங்கையின் நிதியியல் துறையில் உள்ளடங்கிய வங்கி நடைமுறைகளில் NDB வங்கியானது முன்னணியில் உள்ளதை வெளிப்படுத்துகிறது.

பலதரப்பட்ட கண்ணோட்டங்கள் மதிக்கப்படுவதுடன், மற்றும் ஒவ்வொரு தனிநபரும் தங்கள் முழுத் திறனையும் வெளிப்படுத்துவதற்கான வலுவடைந்த பணிச் சூழலை மேம்படுத்துவதற்கான NDBயின் பன்முக அணுகுமுறையை இந்த விருதானது அங்கீகரிக்கிறது. பாலின சமத்துவத்தை ஆதரிப்பதற்கும் சார்புகளை அகற்றுவதற்கும் மற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் சமமான வாய்ப்புகளை வழங்குவதற்கும் வடிவமைக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் இதில் அடங்கும். அதன் இந்த உறுதிப்பாட்டுக்கிணங்க 2023ஆம் ஆண்டில், NDB இலங்கையின் மிகச் சிறந்த பெண்கள் நட்பு பணியிடங்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது பாலின உள்ளடக்கத்தைத் தீவிரமாக ஆதரிக்கும் முற்போக்கான தொழில் வழங்குநராக அதன் பங்கை வலுப்படுத்துகிறது.

NDBஇன் முதன்மையான முயற்சிகளில் ஒன்றான அச்சமின்றிய பெண்களுக்கான திட்டம், நிறுவனத்துக்குள்ளும் மற்றும் சமூகங்கள் மத்தியிலும் பெண்களுக்கு அதிகாரமளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது பெண்களை ஊக்குவிக்கவும் ஆதரிக்கவும் வழிகாட்டவும் முயல்கிறது. பெண்களிலுள்ள திறமைகள் வெளிக்கொண்டுவரப்பட்டு கொண்டாடப்படும் சூழலை வளர்க்கிறது. தொழில் புரியும் பெண்கள், இல்லத்தரசிகள், பெண்கள் தலைமையிலான நிறுவனங்கள் மற்றும் பெண் தொழில்முனைவோர் உட்பட பல்வேறு தரப்பு பெண்களுக்கான நிதியியல் தீர்வுகளை வழங்குவதை இலக்காகக்கொண்ட பெண்களுக்கான தளத்தை வழங்கும் வங்கியியல் தீர்வான அரலிய வர்த்தக நாமத்துடன் இணைந்ததாக இந்த முன்முயற்சி திகழ்கிறது.

# VIMAN Street Cricket Cup போட்டியை வழிநடத்துவதற்காக சமரி அத்தபத்துவுடன் கைகோர்த்துள்ள John Keells Properties நிறுவனம்



சினமன் கிராண்ட் ஹோட்டலில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டு நிகழ்வில் VIMAN Street Cricket Cup (VIMAN வீதி கிரிக்கெட் கிண்ணம்) உத்தியோகபூர்வமாக அறிமுகம் செய்துவைக்கப்பட்டுள்ளது. புறநகர்ப் பகுதியில் மிகச்சிறந்த வாழ்விடமாக அமையவுள்ள தனது VIMAN நிர்மாணத் திட்டத்தின்கீழ் John Keells Properties நிறுவனத்தால் முன்னெடுக்கப்படும், மாற்றத்துக்கு வித்திடும் இம்முயற்சி, இலங்கையில் அடிமட்டத்தில் மகளிர் கிரிக்கெட்டை வளர்க்கும் நோக்குடன் முன்னெடுக்கப்படுகின்றது. இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் தலைவியும் விளையாட்டில் அனைவருக்கும் முன்னுதாரணமாகவும் திகழும் சமரி அத்தப்பத்து இந்த உந்துசக்தியளிக்கும் முயற்சியில் தனது தலைமைத்துவத்தையும் பேரார்வத்தையும் சேர்ப்பிக்கும் வகையில், VIMAN மற்றும் John Keells Properties ஆகியவற்றுடன் கைகோர்த்துள்ளார்.

இந்தச் சுற்றுப்போட்டியானது 2025, பெப்ரவரி 2 அன்று ஜா-எலயில் இடம்பெறவுள்ளது. இலங்கையிலுள்ள 8 பாடசாலைகளைச் சேர்ந்த பாடசாலை கிரிக்கெட் வீராங்கனைகள், 16 மற்றும் 19 வயதுக்குட்பட்ட பிரிவுகளின் கீழ் போட்டியிடவுள்ளனர். திறமைசாலிகளை இனங்கண்டு அவர்களை வளர்ப்பதன் மீதான அர்ப்பணிப்பை இம்முயற்சி வெளிக்காண்பிக்கும் அதேசமயம், விளையாட்டுகளில் பெண்களுக்குள்ள வாய்ப்புகளையும் அது குறித்த விழிப்புணர்வையும் தோற்றுவிக்கின்றது.

கடந்த ஆண்டில் மகளிர் ஆசியக் கிண்ணத்தை வென்று வரலாற்றுச் சாதனை படைத்திருந்த இலங்கை அணியின் தலைவி சமரி அத்தபத்துவின் தனித்துவமான துடுப்பாட்டப் பாணிகளைக் காண்பிக்கும் வகையில் அவற்றைக்கொண்டதாக இப்போட்டியின் உத்தியோகபூர்வ இலச்சினை இந்த அறிமுக நிகழ்வில் வெளியிடப்பட்டது. இச்சுற்றுப்போட்டியின் குறிக்கோளான, உள்ளடக்கம், திறமைசாலிகள் மேம்பாடு மற்றும் சமூக ஈடுபாடு ஆகியவற்றை இந்த இலச்சினை குறித்து நிற்கின்றது.

விளையாட்டுகள் மற்றும் சமூக ஈடுபாடு ஆகியவற்றினூடாக இலங்கையில் இளையோரை, குறிப்பாக, இளம் பெண்களுக்கு வலுவூட்டுவதில் பகிரப்பட்ட அர்ப்பணிப்பை VIMAN Street Cricket Cup (VIMAN வீதி கிரிக்கெட் கிண்ணம்) பிரதிபலிக்கின்றது.

VIMAN Street Cricket Cup (VIMAN வீதி கிரிக்கெட் கிண்ணம்) தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 0706 068 068 மூலமாக John Keells Properties ஐத் தொடர்புகொள்ளவும்.

# DIMO விநியோகிக்கும் Mahindra Yuvo Tech+ 585 உழவு இயந்திரத்துக்கும் மஹட்ட வஹின வாசி வெஸ்ஸ திட்டத்துக்கும் விவசாயிகளிடம் அமோக வரவேற்பு



இலங்கையின் முன்னணியிலுள்ள பல்வகைத்துறை கூட்டு நிறுவனமான DIMO நிறுவனம், தமது விவசாயப் பிரிவான DIMO Agribusinesses ஊடாக 2023ஆம் ஆண்டு பெரும் போகத்தில் அறிமுகப்படுத்தியிருந்த Mahindra Yuvo Tech+ 585 4WD உழவு இயந்திரம், 2024 பெரும் போகத்தில் மிகவும் பிரபலமாகியுள்ளதோடு, அதற்கான சிறந்த கேள்வியும் உருவாகியுள்ளது. இலங்கை விவசாயிகள், விவசாய இயந்திரமயமாக்கலுக்கு மாறுவதை விரைவுபடுத்தவும் அதன்மூலம் அவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தவும் கடந்த ஓகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்ட மஹட்ட வஹின வாசி வெஸ்ஸ (பெரும் போகத்துக்குப் பெய்யும் பரிசு மழை) திட்டமும் வெற்றிகரமான வரவேற்பைப் பெற்றுள்ளது.

DIMO நிறுவனத்தின் நீண்டகால கூட்டாளரான Mahindra Tractors நிறுவனத்தின் உயர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, Mahindra Yuvo Tech+ 585 4WD உழவு இயந்திரம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

Mahindra Yuvo Tech+ 585 4WD உழவு இயந்திரத்தின் தனித்துவமான புதிய அம்சங்கள் காரணமாக அது குறுகிய காலத்தில் பிரபலமடைந்துள்ளதோடு, விவசாய நடவடிக்கைகளுக்கான செயற்றிறனை அதிகரிக்க சந்தேகத்துக்கிடமின்றி ஒரு சரியான தெரிவாகும். இந்த உழவு இயந்திரத்தின் சிறந்த எரிபொருள் திறனானது, எமது விவசாயிகளுக்கு அதிக பொருளாதார நன்மைகளை வழங்கும் அதேநேரம், சின்க்ரோஷட்டல் தொழில்நுட்பத்துடன் கூடிய முன்னோக்கிய 12 கியர்கள் மற்றும் பின்னோக்கிய 12 கியர்களைக்கொண்ட Fully Constant Mesh கியர் தொகுதி காரணமாக எரிபொருள் சேமிப்பை மேலும் அதிகரிக்கிறது. இந்த உழவு இயந்திரம் 50HP (குதிரை வலு) வகையைச் சேர்ந்தது என்பதால், மிகக் குறுகிய காலத்தில் அதிகளவான வேலையை எளிதாகச் செய்து முடிக்க உதவுகின்றது. எஞ்சினின் முறுக்குவிசையானது, (Engine Torque) 179Nm எனும் மிக அதிக பெறுமானத்தைக் கொண்டுள்ளதால், இது அதிக சுமைகளையும் (load) பரந்தளவிலான இணைப்பு உபகரணங்களையும் சாதாரண நிலம் மற்றும் சேற்று நிலம் ஆகிய இரு வகையான நிலப்பரப்புகளிலும் எளிதாகவும் அதிக எரிபொருள் செயற்றிறனுடனும் பயன்படுத்த அனுமதிக்கிறது.

அது மாத்திரமன்றி, இது சுமார் 1,700kg எடையைத் தூக்கும் திறனைக்கொண்டுள்ளதால், அதிக எடையைத் தூக்க முடிதல் மற்றும் பல்வேறு தேவைகளுக்கேற்ற பல்வேறு வகையான இணைப்பு உபகரணங்களை எளிதாக இணைத்துப் பயன்படுத்த அனுமதிக்கிறது. இந்த உழவு இயந்திரத்தின் மற்றுமொரு தனித்துவமான நன்மை யாதெனில், 45.5HP குதிரை வலு எனும் அதிக சக்திகொண்ட PTO தொகுதியானது CRPTO தொழில்நுட்பத்துடன் இணைக்கப்பட்டிருப்பதால், அதிக சக்தி கொண்ட இணைப்பு உபகரணங்களை அதிக செயற்றிறனுடன் கையாள முடிகின்றமை மற்றுமொரு சிறந்த நன்மையாகும். முன்புறமாக 9.5X20 மற்றும் பின்புறமாக 14.9X28 எனும் அளவுள்ள தவாளிப்பு இடுக்குகளைக்கொண்ட பாரியளவிலான டயர் தொகுதியானது, சேற்று நிலங்களில் கூட செலுத்துவதை எளிதாக்குவதால், இலங்கையின் எந்தவொரு பிரதேசத்துக்கும் ஏற்ற சிறந்த உழவு இயந்திரமாக தற்போது விவசாயிகள் மத்தியில் பிரபலமடைந்துள்ளது.

# 25 வருடம் சேவையாற்றிய ஊழியர்களை கௌரவித்த கொமர்ஷல் வங்கி



கொமர்ஷல் வங்கியானது அண்மையில் வங்கியின் வருடாந்த சிரேஷ்ட ஊழியர்களுக்கான விருது வழங்கும் விழாவின் 2024 பதிப்பில், 37 ஊழியர்களின் கடமையுணர்வு மற்றும் 25 வருட சேவையை அங்கீகரித்து அவர்களுக்கு மதிப்புமிக்க பரிசுகள் மற்றும் பாராட்டுப் பத்திரங்களை வழங்கியது.

கொழும்பு கிங்ஸ்பரி ஹோட்டலில் நடைபெற்ற இந்நிகழ்வில் கொமர்ஷல் வங்கியின் தலைவர் ஷர்ஹான் முஹ்சீன், வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சனத் மனதுங்க, பிரதம செயற்பாட்டு அதிகாரி எஸ். பிரபாகர், பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், கூட்டாண்மை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

விழாவைத் தொடர்ந்து நடைபெற்ற கொண்டாட்ட நிகழ்வில் கௌரவிக்கப்பட்ட ஊழியர்களின் குடும்ப உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இந்த விருதுகளைப்பெற்றவர்களில் பலர் பாடசாலைக் கல்வியைப் பூர்த்திசெய்த நிலையில் 1999ஆம் ஆண்டு வங்கியியல் பணியில் இணைந்துகொண்டவர்கள் என்றும் தற்போது வங்கி மற்றும் வங்கிக் கிளைகளில் பல்வேறு துறைகளில் முக்கிய பதவிகளை வகிப்பதாகவும் வங்கி தெரிவித்துள்ளது.

கொமர்ஷல் வங்கியின் பணிப்பாளர் சபை, கூட்டாண்மை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தின் பிரதிநிதிகளுடன் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்ட சிரேஷ்ட ஊழியர்களையும் படத்தில் காண்கிறீர்கள்.

www.thamilan.lk
புதன்கிழமை, ஜனவரி 22, 2025
தமிழன்

# ட்ரம்பின் 2.0 ஆட்சி ஆரம்பம்

## உலக சுகாதார ஸ்தாபனம் – பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்திலிருந்து வெளியேறுகிறது அமெரிக்கா



அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் நேற்றுமுன்தினம் பதவியேற்றார். 2ஆவது தடவையாகவும் ஜனாதிபதியாக பதவியேற்றுக்கொண்ட அவர், முதல் நாளிலேயே பல்வேறு நிர்வாக உத்தரவுகளில் கையெழுத்திட்டு முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டார்.

இந்நிலையில், உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா வெளியேறுவது உள்ளிட்ட அதிரடி உத்தரவுகளை அந்நாட்டு ஜனாதிபதியாகப் பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப் பிறப்பித்துள்ளார். முதல் நாளில் அவர் கையெழுத்திட்ட உத்தரவுகளும் வெளியிட்ட அறிவிப்புகளும் கவனம் ஈர்த்துள்ளன.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் கடந்த 2024ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்றது. இதில் குடியரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட ட்ரம்ப் (வயது 78), ஜனநாயக கட்சி வேட்பாளரும் துணை ஜனாதிபதியுமான கமலா ஹரிஸை வென்றார். இதன்மூலம், 2017ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு வரை ஜனாதிபதியாக இருந்த ட்ரம்ப் மீண்டும் 2ஆவது தடவையாக ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்நிலையில், புதிய ஜனாதிபதியின் பதவியேற்பு விழா அமெரிக்கத் தலைநகர் வொஷிங்டனில் நேற்றுமுன்தினம் (20) இடம்பெற்றது. ட்ரம்ப் மீண்டும்



ஜனாதிபதியாக பதவியேற்பதால் அவரது ஆதரவாளர்கள் மிகுந்த உற்சாகத்தில் காணப்பட்டனர். கட்சியினரும் ஆதரவாளர்களும் பதவியேற்பு நிகழ்ச்சியை நேரில் காண கெபிடல் ஏரினா அரங்கில் பிரமாண்ட திரைகள் அமைக்கப்பட்டு சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அங்கு காலையில் கடும் குளிரிலும் ஏராளமானோர் குவிந்தனர்.

### தேநீர் விருந்தளித்த பைடன்

பாரம்பரிய வழக்கப்படி பதவியேற்புக்கு முன்னர் ட்ரம்ப், செயின்ட் ஜோன்ஸ் தேவாலயத்தில் பிரார்த்தனையுடன் தனது முக்கிய தினத்தைத் தொடங்கினார். இதில், ட்ரம்புடன் அவரது மனைவி மெலானியா ட்ரம்ப் மற்றும் குடும்பத்தினரும் பங்கேற்றனர். பிரார்த்தனையைத் தொடர்ந்து, ஜனாதிபதி மாளிகையான வெள்ளை மாளிகைக்கு ட்ரம்ப் தனது மனைவியுடன் சென்றார். அவர்களுடன் துணை ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட ஜேடி வன்ஸ் (JD Vance), அவரது மனைவி உஷா வன்ஸ் ஆகியோரும் உடன் சென்றனர். அங்கு அவர்களை முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடன்,அவரது மனைவி ஜில் பைடன், துணை ஜனாதிபதி கமலா ஹரிஸ், அவரது கணவர் டக் எம்ஹா ஆகியோர் கட்டித்தழுவி வரவேற்று தேநீர் விருந்தளித்தனர்.

முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடனின் பதவிக்காலம் நேற்றுமுன்தினத்துடன் முடிவடைந்ததால், வெள்ளை மாளிகையில் அவரது கடைசி நிகழ்வாக இந்தத் தேநீர் உரையாடல் அமைந்தது. சிறிதுநேரம் உரையாடிய பின்னர் பாராளுமன்றத்துக்கு ட்ரம்பை பைடன் அழைத்துச் சென்றார். கெபிடல் ஒன் (Capitol on) எனப்படும் அமெரிக்க பாராளுமன்றத்தில் பதவியேற்பு விழா விமரிசையாக நடைபெற்றது.

பொதுவாக, பாராளுமன்றக் கட்டடத்தின் வெளி வளாகத்தில் ஜனாதிபதி பதவியேற்பு விழா நடத்தப்படும். ஆனால், கடும் குளிர் நிலவுவதால் இம்முறை பாராளுமன்ற உள்ளரங்கில் விழா ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதனால் முக்கிய தலைவர்கள் மட்டுமே விழா அறைக்குள் அனுமதிக்கப்பட்டனர். இதில், முன்னாள் ஜனாதிபதிகளான பாரக் ஒபாமா, ஜோர்ஜ் டபிள்யு புஷ், பில் கிளிண்டன் மற்றும் ஹிலாரி கிளிண்டன் உள்ளிட்டோரும் உலகின் முன்னணி தொழிலதிபர்களான டெஸ்லா நிறுவுனர் எலான் மஸ்க், அமேசான் சிஇஓ ஜெப் பெசோஸ், மெட்டா நிறுவுனர் மார்க் ஜூக்கர்பெர்க், அப்பிள் தலைவர் டிம் குக் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இந்தியா சார்பில் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், தொழிலதிபர் முகேஷ் அம்பானி, அவரது மனைவி நீடா அம்பானி மற்றும் பல்வேறு உலகத் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு விழாவில் பங்கேற்றனர்.

முதலில் ஜேடி வன்ஸ் துணை ஜனாதிபதியாகப் பதவியேற்றுக்கொண்டார். அதைத் தொடர்ந்து, நேற்றுமுன்தினம் (20) இரவு 10.30 மணிக்கு ட்ரம்ப் அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாகப் பதவியேற்றுக்கொண்டார்.

அமெரிக்க உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி ஜோன் ரொபர்ட் அவருக்கு பதவிப்பிரமாணம் செய்துவைத்தார். உடனடியாக மெரைன் பேண்ட் குழுவினர் தேசிய கீதத்தை இசைக்க, 21 துப்பாக்கி குண்டுகள் முழங்க புதிய ஜனாதிபதி ட்ரம்புக்கு உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து புதிய ஜனாதிபதியாக ட்ரம்ப் நாட்டு மக்களுக்குத் தனது முதல் உரையாற்றினார்.

அதன் பின்னர், பதவி விலகிய ஜனாதிபதி பைடன் மற்றும் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸை பாராளுமன்றத்திலிருந்து ஹெலிகொப்டரில் அனுப்பிவைக்கும் வழியனுப்பு விழாவுடன் பதவியேற்பு நிகழ்ச்சிகள் நிறைவடைந்தன. புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்ற சில மணி நேரத்திலேயே ட்ரம்ப், தனது அலுவலகத்துக்குச் சென்று 100 நிர்வாக உத்தரவுகளில் கையெழுத்திட்டார். உச்ச அதிகாரம் படைத்த நாடான அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்றமை உலக நாடுகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அவரது அடுத்த 4 ஆண்டுகால ஆட்சி பெரும் எதிர்பார்ப்புகளையும் ஏற்படுத்தியுள்ளது.



### உலக சுகாதார ஸ்தாபனத்திலிருந்து விலகுகிறது அமெரிக்கா

உலக சுகாதார ஸ்தாபனத்திலிருந்து அமெரிக்கா விலகுவதற்கான உத்தரவில் அந்நாட்டின் புதிய ஜனாதிபதி ட்ரம்ப் கையொப்பமிட்டுள்ளார்.

கொவிட்-19 பெருந்தொற்று உட்பட சர்வதேச அளவில் எழுந்த பல சுகாதாரச் சிக்கல்கள் உலக சுகாதார ஸ்தாபனத்தால் சரியாகக் கையாளப்படவில்லை என்ற முக்கிய குற்றச்சாட்டை முன்வைத்துள்ள அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், உலக சுகாதார ஸ்தாபனம் சுதந்திரமாகச் செயற்படத் தவறிவிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனத்துக்கு 2024-25ஆம் நிதியாண்டின் பட்ஜெட்டில் அமெரிக்காவின் நிதிப் பங்களிப்பாக 662 மில்லியன் டொலர் ஒதுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இது ஸ்தாபனம் பெறும் மொத்த வருவாயில் 19 சதவிகிதமாகும்.

இந்நிலையில், உலக சுகாதார ஸ்தாபனத்திலிருந்து அமெரிக்கா விலகவிருக்கும் உத்தரவில் ட்ரம்ப் கையெழுத்திட்டிருப்பதால், சர்வதேச அளவில் பல்வேறு நோய்த் தடுப்பு, சிகிச்சை மற்றும் சுகாதாரத் திட்டங்களை செயற்படுத்துவதில் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

***மேலும், பதவியேற்ற பின்னர் ஜனாதிபதி ட்ரம்ப் முதல் நாள் பிறப்பித்த உத்தரவின் முக்கிய அம்சங்கள்:***

***★ பிறப்புரிமை அடிப்படையிலான அமெரிக்க குடியுரிமையை இரத்துசெய்யும் உத்தரவில் ட்ரம்ப் கையெழுத்திட்டார். மேலும், அமெரிக்காவில் பிறக்கும் குழந்தையின் பெற்றோரில் யாரேனும் ஒருவர் நிரந்தர அமெரிக்க குடியுரிமை பெற்றிருந்தால் மட்டும் அந்தக் குழந்தைக்கு அமெரிக்க குடியுரிமை வழங்கப்படுமென அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.***

***★ அமெரிக்கா பாராளுமன்ற கலவர வழக்கில் தொடர்புடைய 1,600 பேருக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படுகிறது. இவர்கள் அனைவரும் ட்ரம்ப் ஆதரவாளர்கள்.***

***★ கோடிக்கணக்கான அமெரிக்கர்கள் பயன்படுத்தும் தகவல் தொடர்புத் தளத்தை திடீரென நிறுத்துவதைத் தவிர்க்க நடவடிக்கை எடுப்பேன். டிக்டொக் செயலி மீதான தடையை 75 நாட்களுக்குத் தாமதப்படுத்தும் நிர்வாக நடவடிக்கை எடுப்பேன்.***

***★ அமெரிக்க - மெக்சிகோ எல்லையில் அவசரநிலை பிரகடனம்.***

***★ சட்ட விரோத அகதிகளின் ஊடுருவல் தடுத்து நிறுத்தப்படும்.***

***★ மெக்சிகோ வளைகுடா இனி அமெரிக்கா வளைகுடா என அழைக்கப்படும்.***

***★ பனாமா கால்வாயில் அமெரிக்க கப்பல்களுக்கு அதிக வரி விதிக்கப்படுகிறது. இதனால், அந்தக் கால்வாய் அமெரிக்காவோடு மீண்டும் இணைக்கப்படும்; அதை சீனா நிர்வகிக்கத் தேவையில்லை.***

***★ அமெரிக்காவில் இனி ஆண் – பெண் ஆகிய இரு பாலினங்கள் மட்டுமே அங்கீகரிக்கப்படும்.***

***★ இராணுவத்தில் மாற்று பாலினத்தவர்களுக்குத் தடை. சிறார் பாலின மாற்று அறுவை சிகிச்சைக்குத் தடை விதிக்கப்படும்.***

***★ மின் வாகனம் கட்டாயம் என்ற உத்தரவு வாபஸ்; விரும்பிய வாகனங்களைப் பயன்படுத்தலாம். இஸ்ரேல் - ஹமாஸ் போர் நிறுத்தம் உறுதிசெய்யப்படும்.***

***★ துப்பாக்கி கலாசாரத்துக்கு முடிவு கட்டப்படும்.***

***★ கொரோனா தடுப்பூசி போட மறுத்ததற்காக இராணுவத்திலிருந்து வெளியேற்றப்பட்ட வீரர்களை ஊதியத்துடன் மீண்டும் பணியில் அமர்த்துவேன்.***

***இவ்வாறு டிரம்ப் அறிவித்துள்ளார்.***





### பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்திலிருந்தும் வெளியேற்றம்

இந்நிலையில், பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்திலிருந்தும் அமெரிக்கா வெளியேறுவதாக ட்ரம்ப் கையெழுத்திட்டார்.

சர்வதேச அளவில் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள புவிவெப்பமயமாதலை கட்டுப்படுத்த உலக நாடுகள் முயற்சியெடுத்து வருகின்றன. புவிவெப்பமயமாதலை 2 டிகிரி செல்சியஸுக்கு மிகையாகாமல் கட்டுப்படுத்துவதற்கான பருவநிலை மாற்றம் தொடர்பான ஒப்பந்தம் கடந்த 2015ஆம் ஆண்டு பாரிஸில் நடந்த கூட்டத்தின்போது எட்டப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தில் முதலில் இணைந்த அமெரிக்கா, ட்ரம்ப் ஆட்சிக்காலத்தின்போது விலகுவதாக அறிவித்தது. வளரும் நாடுகளுக்கு ஆதரவாக இந்த ஒப்பந்தம் இருப்பதாக விமர்சித்து வந்த ட்ரம்ப், பருவநிலை ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக அறிவித்தார். இந்தச் சூழலில் அடுத்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற ஜோ பைடன் பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்தில் அமெரிக்கா மீண்டும் இணையும் என்று அதிகாரபூர்வமாக அறிவித்திருந்தார்.

இந்நிலையில், பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்காவை இரண்டாவது தடவையாக விலக்கிக் கொள்வதற்கான உத்தரவில் ஜனாதிபதி ட்ரம்ப் கையெழுத்திட்டார்.

இதைத் தொடர்ந்து, காலநிலை மாற்றத்துக்குக் காரணமான பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தைக் குறைக்கும் 2015ஆம் ஆண்டு ஒப்பந்தத்திலிருந்து விலகுவதற்கான தனது நோக்கத்தை ஐக்கிய நாடுகள் சபைக்கு அறிவித்து, ட்ரம்ப் ஒரு முறையான கடிதத்தில் கையெழுத்திட்டார்.

### ''என் உயிர் ஒரு காரணத்துக்காக காப்பாற்றப்பட்டுள்ளது''



பதவியேற்ற பின் ட்ரம்ப் ஆற்றிய தன் முதல் உரையில், ''அமெரிக்காவின் சரிவு காலம் முடிந்து பொற்காலம் தொடங்குகிறது. இன்று முதல் உலகம் முழுவதும் மதிக்கப்படும் நாடாக அமெரிக்கா மாறும். ஜனவரி 20ஆம் திகதி அமெரிக்காவின் விடுதலை தினமாக கடைப்பிடிக்கப்படும். அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு மீட்கப்படும். அமெரிக்காவை இதுவரை இல்லாதளவுக்கு வலுவானதாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும். அமெரிக்காவில் நீடிக்கும் துப்பாக்கிக் கலாசாரத்துக்கு முடிவு கட்டப்படும். உலகின் உற்பத்தி மையமாக மீண்டும் உருவெடுக்கும். சட்டவிரோத குடியேற்றங்களைத் தடுக்க தென் எல்லையில் அவசரநிலை பிரகடனப்படுத்தப்படுகிறது. சட்டவிரோதமாகக் குடியேறிவர்களை அவர்கள் நாடுகளுக்கே திருப்பியனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும். பனாமாவை இனி அமெரிக்காவின் கட்டுப்பாட்டுக்குக் கீழ் கொண்டுவருவோம்.

எங்கள் போராட்டத்தைத் தடுக்க விரும்புபவர்கள் என் சுதந்திரத்தைப் பறிக்க முயன்றிருக்கிறார்கள். உண்மையில், என் உயிரையும் பறிக்க முயன்றிருக்கிறார்கள். சில மாதங்களுக்கு முன்னர் பென்சில்வேனியாவில், ஒரு கொலையாளியின் தோட்டா என் காதில் பாய்ந்தது. ஆனால், அப்போது நான் உணர்ந்தேன், இப்போது இன்னும் அதிகமாக நம்புகிறேன், என் உயிர் ஒரு காரணத்துக்காக காப்பாற்றப்பட்டுள்ளது. அமெரிக்காவை மீண்டும் சிறந்ததாக மாற்ற கடவுளால் நான் காப்பாற்றப்பட்டேன்" - இவ்வாறு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

### 3ஆம் உலகப் போரைத் தடுப்பேன்

மேலும், ''உக்ரைனிலும், மத்திய கிழக்கிலும் போரை முடிவுக்குக் கொண்டுவந்து, 3ஆம் உலகப் போர் நடைபெறுவதைத் தடுப்பேன்'' எனவும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

### பழிவாங்கலிலிருந்து பாதுகாத்த பைடன்

கடந்த 2020ஆம் ஆண்டு கொரோனா பாதிப்புக்கு மத்தியில் ஜனாதிபதித் தேர்தலில் தனது தோல்வியை ஏற்க மறுத்த ட்ரம்ப், தனது ஆதரவாளர்கள் மூலம் வன்முறையைத் தூண்டினார். இதனால், 2021 ஜனவரி 6ஆம் திகதி பைடனின் வெற்றியை அங்கீகரிக்கும் நிகழ்வின்போது பாராளுமன்றத்தில் பயங்கரத் தாக்குதலை நடத்தினார். இதுதொடர்பாக ட்ரம்புக்கு எதிராக விசாரணைக் குழு அமைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது. இக்குழுவில் இடம்பெற்றுள்ள விஞ்ஞானி அந்தோனி பவுசி, ஓய்வுபெற்ற ஜெனரல் மார்க் மில்லி மற்றும் பிற உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி பைடன் தனது இறுதி மணிநேரத்தில் அசாதாரண அதிகாரங்களைப் பயன்படுத்தி மன்னிப்பு வழங்கியுள்ளார். ட்ரம்ப் ஜனாதிபதியானதும் இவர்கள் மீது எந்தப் பழிவாங்கல் நடவடிக்கையும் எடுத்துவிடக் கூடாது என்பதற்காக பைடன் இத்தகைய மன்னிப்பை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. நாட்டுக்கான அயராத அர்ப்பணிக்காக நாடு செலுத்தும் நன்றிக் கடன் இது என பைடன் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### முதல் பெண்மணியான மெலானியா

அமெரிக்காவில் ஜனாதிபதியின் மனைவியை நாட்டின் முதல் பெண்மணி என்றும், துணை ஜனாதிபதியின் மனைவியை இரண்டாவது பெண்மணி என்றும் அழைப்பது வழக்கம். இந்நிலையில், தற்போது அமெரிக்க ஜனாதிபதியாக இரண்டாவது தடவையாகவும் ட்ரம்ப் பதவியேற்றுள்ள நிலையில், அவரது மனைவி மெலானியா ட்ரம்ப் நாட்டின் முதல் பெண்மணி என்ற அந்தஸ்தைப் பெற்றுள்ளார்.

இதேபோன்று துணை ஜனாதிபதியாக ஜேடி வன்ஸ் (வயது 40), பதவியேற்றதைத் தொடர்ந்து அவரது மனைவி உஷா வன்ஸ் (வயது 38) அமெரிக்காவின் இரண்டாவது பெண்மணியாகியுள்ளார். இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஒருவர் இத்தகைய பெருமையைப் பெறுவது இதுவே முதல் முறை.

### ஹிட்லர் பாணியில் எலான் மஸ்க்

ஜேர்மன் சர்வாதிகாரியான அடோல்ப் ஹிட்லர் பாணியில் அமெரிக்கத் தொழிலதிபர் எலான் மஸ்க் பொது மேடையில் வணக்கம் வைத்திருப்பது சர்ச்சையாகியுள்ளது.

ட்ரம்ப் பதவியேற்றதைக் கொண்டாடும் விதமாக திங்களன்று (20) நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றிய உலகப் பெரும் கோடீஸ்வரரும் ட்ரம்புக்கு மிக நெருக்கமானவருமான எலான் மஸ்க், "இது சாதாரண வெற்றியல்ல" என்று பேசினார். வாக்காளர்களுக்கு நன்றியும் தெரிவித்துக்கொண்டார்.

அப்போது, தனது வலக் கையை மார்பில் வேகமாக தட்டிக்கொண்டு அங்கிருந்த மக்களை நோக்கி கை விரல்களை ஒன்றிணைத்து விரித்துக்கொண்டு மேலே கையை நீட்டி தோள்பட்டை அளவுக்கு உயர்த்தியபடி ஹிட்லர் பாணியில் வணக்கம் தெரிவித்தார்.

இந்நிலையில், எலான் மஸ்கின் செய்கை விமர்சனத்துக்குள்ளாகியிருக்கிறது. ஹிட்லரை பின்பற்றும் நாஸிக்கள் கடைப்பிடிக்கும் பழக்கத்தை எலான் மஸ்க் பின்பற்றியிருப்பதாக சமூக வலைத்தளங்களில் குறிப்பிட்டு விமர்சிக்கின்றனர்.

மேலும், நாஸிக்கள் ஆதிக்கம் நிறைந்த பகுதியாக அறியப்பட்ட ஆஸ்ச்விட்ஸ் பகுதிக்கு எலான் மஸ்க் கடந்தாண்டு சென்று அங்குள்ள மக்களைச் சந்தித்ததையும் குறிப்பிட்டு விமர்சனங்களை முன்வைத்துள்ளனர்.

இன்னொருபுறம், ட்ரம்பை எதிர்த்து கடந்த 2016ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமாவும் மேற்கண்ட இதேபாணியில் சைகை செய்திருப்பதையும் சிலர் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்நிலையில், "ஒவ்வொருத்தரும் ஹிட்லரே" என்கிற விமர்சனத்தால், நீங்கள் (ஜனநாயக கட்சித் தரப்பு) என் மீது விமர்சனங்களை சுமத்துவதைக் கேட்டுக்கேட்டு புளித்துப்போய்விட்டதாகப் பொருள்பட பேசி விமர்சனங்களுக்குப் பதிலளித்திருக்கிறார் எலான் மஸ்க்.

# கண்டி வாகன விபத்தில் யுவதி பலி

## மூவர் பலத்த காயம்; பஸ் சாரதி கைது





எஸ்.கணேசன்

தலாத்துஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் யுவதியொருவர் உயிரிழந்ததோடு, மேலும் மூவர் படுகாயமடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கண்டி - மஹியங்கனை பிரதான வீதி மயிலப்பிட்டி கீழ்பிரிவு பகுதியில் இவ்விபத்து நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

கட்டுகஸ்தோட்டை பகுதியிலிருந்து மாரக்ஷன உடுதெனிய பகுதியை நோக்கிச் சென்ற முச்சக்கரவண்டியொன்றும் மயிலப்பிட்டி பகுதியிலிருந்து கண்டியை நோக்கிச் சென்ற பாடசாலைச் சேவை பஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதி இவ்விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தில் முச்சக்கரவண்டிச் சாரதி மற்றும் அதில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரில் 18 வயது மதிக்கத்தக்க மகள் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார். தந்தையும் மற்றுமொருவரும் பலத்த காயங்களுக்குள்ளாகி ரிகில்லகஸ்கட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதோடு, உயிரிழந்த யுவதியின் சடலம் மாரஸ்ஸன வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த முச்சக்கரவண்டி முன்னே சென்ற வாகனத்தை முந்திச்செல்ல முற்பட்ட வேளையிலேயே எதிரே வந்த பஸ்ஸுடன் மோதி இவ்விபத்து நேர்ந்துள்ளதாகப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இவ்விபத்தினால் சில மணி நேரம் அவ்வீதியினூடான போக்குவரத்து தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும், இவ்விபத்துக்கு காரணமான பஸ் சாரதியை தலாத்துஓயா பொலிஸார் கைது செய்ததுடன் இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை தலாத்துஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நானுஓயாவில் லொறி குடைசாய்ந்து விபத்து



டி.சந்ரு செ.திவாகரன்,எஸ்.கணேசன்

நுவரெலியாவிலிருந்து நாவலப்பிட்டி நோக்கிப் பயணித்த லொறியொன்று நுவரெலியா - ஹட்டன் பிரதான வீதி நானுஓயா ரதல்ல குறுக்கு வீதியில் நேற்று முன்தினம் (20) இரவு நடுவீதியில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த லொறியில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக விபத்து ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

விபத்துக்குள்ளான லொறிச் சாரதி சிறு காயங்களுடன் தப்பியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நானுஓயா ரதல்ல குறுக்கு வீதியில் கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக அதிக விபத்துகள் இடம்பெற்று வருகின்றன. எனவே, இவ்வீதி அதிக செங்குத்தான சரிவுகளையும் பாரிய வளைவுகளையும் கொண்டுள்ளதால், தகுந்த தடையாளிகளைப் பாவித்து வாகனங்களைச் செலுத்தவேண்டுமென அறிவிப்பு பலகைகளும் இவ்வீதியில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விபத்து தொடர்பில் நானுஓயா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான கொடுப்பனவு விவகாரம்;

# விண்ணப்பங்களை ஏற்க மறுக்கும் அதிபர்கள்-கிராம உத்தியோகத்தர்கள்

மஸ்கெலியா, பொகவந்தலாவ நிருபர்கள்

அரசாங்கம் அறிவித்த வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கிடைக்கவிருக்கும் ரூபா 6,000 பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பங்களை ஒரு சில பாடசாலை அதிபர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் ஏற்க மறுத்துள்ளனர்.

குறித்த பாடசாலை அதிபர், கிராம உத்தியோகத்தர்கள் தமக்கு சுற்று நிருபம் வரவில்லையெனவும் தெரிவித்துள்ளனர்.

விண்ணப்பிக்கச் சென்றிருந்த பொதுமக்களிடம் 'பிரதேச செயலகம் அறிவிக்கவில்லை', 'ஹட்டன் வலயம் அறிவிக்க வில்லை' என்று தெரிவித்துள்ளனர்.



இன்று 22ஆம் திகதி முடிவுத் திகதி என்பதால் சம்பந்தபட்ட அதிகாரிகளை உடனே நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். விண்ணப்பம், சுற்றுநிருபம் ஏட்டள வில் இல்லாமல் செயற்படுத்துமாறும் இதனால் அதிகமாக நுவரெலியா மாவட்ட மக்கள் பாதிக்கப்படுவார்கள் எனவும் மஸ்கெலியா முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ராஜ் அசோக் சுட்டிக்காட்டியுள்ளார்.

# நானுஓயாவில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் உயிரிழப்பு

## 6 பேருக்கு விளக்கமறியல்

நானுஓயா நிருபர்

நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நானுஓயா எடின்பரோ தோட்டத்தில் கடந்த (14) ஆம் திகதி பொங்கல் தினத்தில் இடம்பெற்ற ராமர் பஜனை ஊர்வலத்தின் போது இரு குடும்பங்களுக்கிடையே ஏற்பட்ட தகராறு காரணமாக கூரிய ஆயுதமொன்றினால் தாக்கப்பட்டு நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட அதே பகுதியைச் சேர்ந்த 45 வயதான மாணிக்கம் யோகேஸ்வரன் என்பவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் (20) திங்கட்கிழமை உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்து தோட்டத்தில் இரு குடும்பங்களுக்கிடையில் பழைய பகை ஒன்றின் காரணமாக பொங்கல் தினத்தில் ராமர் பஜனை ஊர்வலத்தின் போது ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றியதில் தனியாக அழைத்துச் சென்று கூரிய ஆயுதங்களால் தாக்கியுள்ளனர்.

குடும்பத் தகராறே கொலையில் முடிவடைந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளதாகவும் இச்சம்பவத்தில் படுகாயமடைந்த நால்வர் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அதிலொருவர் உயிரிழந்துள்ளதாகவும் சம்பவத்துடன் தொடர்புடைய 6 பேரைக் கைதுசெய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட 6 பேரும் நுவரெலியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போது இவர்கள் அனைவரையும் எதிர்வரும் (29)ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டதாகவும் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வரும் நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

# மாத்தளையில் யாசகர்களினால் பொதுமக்களுக்கு அசௌகரியம்

எம்.எஸ்.எம். மஸாஹிம்

மாத்தளை நகரில் அதிகரித்து வரும் யாசகர்களின் தொல்லை காரணமாக மாத்தளைச் சூழல் மாசடைந்து சுகாதாரக் கேடுகள் ஏற்படுவதாக பொதுமக்களும் வர்த்தகர்களும் தெரிவிக்கின்றனர்.

யாசகர்கள் தமது அன்றாட அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு மாத்தளைப் பகுதியில் பல இடங்களைப் பாவித்து வருவதாகவும் இதனால் மாத்தளை மாநகரில் சுகதாரக் கேடுகள் ஏற்பட்டுள்ள பொதுமக்களும் வர்த்தகர்களும் தெரிவிக்கின்றனர்.

மாத்தளை மாநகர வர்த்தக நிலையங்கள் இரவு வேளைகளில் மூடப்பட்டவுடன் வர்த்தக நிலையங்களுக்கு எதிரே உறங்குவதை வழக்கமாகக் கொண்டுள்ள இவர்கள் சில சந்தர்ப்பங்களில் மேற்படி வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் மலசலம் கழித்து வருவதாகவும் இதனால் தாங்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருவதாகவும் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். யாசகர்கள் இரவு வேளைகளில் மது அருந்திவிட்டு மதுப் போத்தல்களை வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் சாக்கடைகளில் போட்டு வருவதாகவும் தெரிவிக்கும் பொது மக்களும் வர்த்தகர்களும் இது சம்பந்தமாக மாத்தளை மாநகர சபையினரும் பாதுகாப்புப் பிரிவினரும் அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

மேலும் சில யாசகர்கள் மாத்தளை மாநகர முக்கிய மத ஸ்தாபனங்களுக்கு முன்னால் மேற்படி மத ஸ்தாபனங்களை கண்டுகழிக்க வரும் தேசிய மற்றும் சர்வதேச சுற்றுலாப் பயணிகளுக்கு இடையூறாக இருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது. எனவே, இது சம்பந்தமாக அவசர நடவடிக்கைகளை எடுத்து மாத்தளை மாநகர சூழல் மற்றும் சுகாதார நிலைமைகளைப் பாதுகாக்குமாறு பொதுமக்கள், வர்த்தகர்கள் வேண்டிக்கொள்கின்றனர்.

# தேங்காய் எண்ணெய் என்ற போர்வையில் மதுபான விற்பனை

## சுற்றிவளைப்பில் ஒருவர் கைது

வெல்லவாய பிரதேசத்தில் இயங்கி வந்த கள்ளச் சாராய விற்பனை நிலையத்தை சுற்றி வளைத்த பொலிஸார் அங்கிருந்த ஒருவரைக் கைதுசெய்துள்ளனர்.

கடையில் தேங்காய் எண்ணெய் விற்பனை செய்யும் போர்வையில் சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்யப்பட்டதாகவும் கடையிலிருந்து 57 சட்டவிரோத மதுபானப் போத்தல்கள், கோடா, பீப்பாய் சுருள்கள் போன்ற உபகரணங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லவாய பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். சந்தேக நபர் விசாரணையின் பின்னர் வெல்லவாய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# யாழ். கலாசார நிலையப் பெயர் மாற்றம் மக்களின் நாடித்துடிப்பை அறியாத செயல்

## ஐங்கரநேசன் ஆதங்கம்

பு.கஜிந்தன்

''இந்திய அரசாங்கத்தின் நன்கொடையின் கீழ் கலாசாரப் பாரம்பரியங்களின் மேம்பாட்டுக்காக நிர்மாணிக்கப்பட்டதும் தனித்துவமிக்கதுமான யாழ்ப்பாண கலாசார நிலையம் 2023 பெப்ரவரி முதலாம் திகதி மக்களுக்கு உரித்தாக்கப்பட்டது. திறப்புவிழாக் கல்வெட்டில் அழியாத எழுத்துகளால் அழகாகப் பொறிக்கப்பட்டிருக்கும் வாசகம் இது. ஆனால், மக்களுக்கு உரித்தாக்கப்பட்டு இரண்டு வருடங்கள்கூட கடக்காத நிலையில், அம்மக்களின் அபிப்பிராயங்கள் எதுவும் பெறப்படாது யாழ்ப்பாண கலாசார நிலையம், திருவள்ளுவர் கலாசார நிலையமெனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது. இது மக்களின் நாடித்துடிப்பை அறியாத செயல்'' - என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.



யாழ். கலாசார நிலையத்தின் பெயர் மாற்றம் குறித்து பொ.ஐங்கரநேசன் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண கலாசார நிலையம் யாழ். மாநகரசபைக்கு உரித்தான காணியில் இந்திய அரசின் நன்கொடையில் உருவானது. இதற்கான உடன்படிக்கையில் யாழ். கலாசார நிலையத்தை முகாமைத்துவம் செய்கின்ற குழுவில் யாழ். மாநகர சபையினதும் வடமாகாண சபையினதும் சார்பில் ஒவ்வொருவர் இடம்பெறுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், இரண்டு சபைகளினதும் கலந்தாலோசிப்புகளின்றி இப்பெயர் மாற்றம் இடம்பெற்றுள்ளது.

கோட்டாபய அரசாங்கம் யாழ். கலாசார நிலையத்தின் பெயரை மாற்றுமாறு முன்னர் அழுத்தங்களைப் பிரயோகித்தபோது மாநகர சபையின் எதிர்ப்பால் கைவிடப்பட்டது. இப்போது இரு சபைகளுக்குமான தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில், திடுதிப்பென்று நிகழ்ந்த இப்பெயர் மாற்றம் இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கையை இந்தியா நாசூக்காக நிறைவேற்றிக் கொடுத்துள்ளது என்றே எண்ணவைத்துள்ளது.

சமயச்சாயத்தை தன்மீது ஒருபோதும் பூசிக்கொள்ளாத திருவள்ளுவரின் பெருமையை ஈழத்தமிழ் மக்கள் எப்போதும் போற்றுபவர்களாகவே உள்ளார்கள். அவர் தமிழுக்குத் தந்த பெரும் கொடையாம் திருக்குறளின் மகிமையை ஈழத்தமிழ் மக்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள். இதனாலேயே, தமிழகத்தில் வள்ளுவர் கோட்டத்தில் உள்ளதைப்போன்று அத்தனை குறள்களையும் காலத்தால் அழியாதவாறு கருங்கல்லில் பொறித்து திருக்குறள் வளாகமொன்றைச் சிவபூமி தாபகர் கலாநிதி ஆறு திருமுருகன் யாழ்ப்பாணத்தில் உருவாக்கியுள்ளார். ஆனால், இத்தகைய பெரும் பற்றைத் திருவள்ளுவர் மீதும் திருக்குறள் மீதும் கொண்டிருக்கும் ஈழத்தமிழ் மக்களிடையே யாழ். கலாசார மையத்துக்கு அவர் பெயரைச் சூட்டியுள்ளமை பெரும் அதிருப்தியையே தோற்றுவித்துள்ளது.

யாழ். கலாசார மையம் தனித்துவமானதெனத் திறப்புவிழாக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதைப்போன்று அது இந்தியா எமக்கு உவந்தளித்த தனித்துவமான பெரும் கொடையே ஆகும். ஆனால், அதன் தனித்துவம் நெடிதுயர்ந்த அழகான அதன் கட்டுமானங்களால் மாத்திரம் உருவானதன்று. பண்பாட்டுச் செழுமையும் பாரம்பரியமும் மிக்க யாழ்ப்பாணம் என்ற பெயரைச் சூடியிருப்பதும் அதன் தனித்துவத்தை வெளிப்படுத்தும் அளப்பரியதொரு சிறப்பாகும். இப்போது, பெயர் மாற்றப்பட்டிருப்பதன் மூலம் அதன் தனித்துவம் ஒரு படி கீழிறங்கியுள்ளது என்பதே நிதர்சனம். அது மட்டுமல்ல, இப்பெயர் மாற்றத்தின் மூலம் ஈழத்தமிழ் மக்கள் இந்தியா மீது கொண்டிருக்கும் பெரும் நம்பிக்கையிலும் ஒரு படி கீழிறங்கியுள்ளது - என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# கைதடி கிணற்றிலிருந்து சிசுவின் சடலம் மீட்பு

## குழந்தையின் தாயார் கைது!

பு.கஜிந்தன்

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கைதடி தென்கிழக்கு, J/292 கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட மூர்த்தியாவத்தை, கந்தசாமி கோவில் பகுதியிலுள்ள தோட்டக்கிணற்றிலிருந்து பிறந்து ஒரு நாளான சிசுவின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை குறித்த தோட்டத்தில் வேலை செய்வதற்காக வந்தவர்கள் கிணற்றில் நீர் எடுக்க முற்பட்ட வேளை சிசுவின் சடலத்தைப் பார்த்ததும் கிராம சேவகர் மூலம் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்கினர்.

அதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் உயிரிழந்த சிசு தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்த நிலையில், சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதிபதி சம்பவ இடத்துக்கு நேரில் சென்று சடலத்தைப் பார்வையிட்டதுடன் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை, சாவகச்சேரி பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்னவின் வழிகாட்டலில் விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார், சிசுவை பிரசவித்தவர் என சந்தேகிக்கப்படும் 43 வயதான 3பிள்ளைகளின் தாயான பெண் கிளிநொச்சி பகுதிக்கு தப்பிச்செல்ல முற்பட்டவேளை கைதுசெய்யப்பட்டார்.

கொலைக்கு உதவி செய்திருப்பார்கள் என்ற சந்தேகத்தின்பேரில் குறித்த பெண்ணின் தாய் மற்றும் சகோதரியையும் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# அனுமதிப்பத்திரமின்றி மணல் கடத்திவந்த ரிப்பர் மடக்கிப் பிடிப்பு!

பு.கஜிந்தன்

உரிய அனுமதிப்பத்திரமின்றி கிளாலி பகுதியிலிருந்து வெள்ளை மணல் கடத்திவந்த டிப்பரொன்று நேற்று (21) மடக்கிப் பிடிக்கப்பட்ட நிலையில் அதன் சாரதியும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த ரிப்பர் சட்டவிரோதமாக மணலை ஏற்றி வருவதாக சாவகச்சேரி பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது செம்பியன்பற்று பகுதியைச் சேர்ந்த சாரதியே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விசாரணைகளின் பின்னர் அவரை சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஊழலுக்குத் துணை போனவர்களே பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் மீது குற்றஞ்சுமத்துகின்றார்கள்

## பெருந்தோட்டப் பிரதி அமைச்சர் பிரதீப் தெரிவிப்பு

சாவகச்சேரி நிருபர்

''கடந்த காலங்களில் ஊழல் செய்தவர்களும் ஊழல்களுக்கு துணை போனவர்களுமே பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் சகாதேவன் மீது குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றனர்'' - என பெருந்தோட்டப் பிரதி அமைச்சர் சு.பிரதீப் தெரிவித்துள்ளார்.



கைதடியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற பனை அபிவிருத்திச் சபை பணியாளர்களுடனான சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

''பனை அபிவிருத்திச் சபைக்கு புதிய தலைவரை நியமித்ததன் பின்னர் பல முறைப்பாடுகள் எனக்குக் கிடைத்தவண்ணம் உள்ளன.

ஆனால், அவர் மீது குற்றஞ்சாட்டுபவர்கள் யார் எனப் பார்த்தால் கடந்த காலத்தில் ஊழல் செய்தவர்களும் ஊழல்களுக்குத் துணைபோனவர்களுமே இவ்வாறு குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றனர்.

கடந்த கால ஊழல்கள் மீது மக்கள் கொண்ட வெறுப்பின் காரணமாகவே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மீது மக்கள் நம்பிக்கை வைத்து வாக்களித்தனர்.

இந்த அரசாங்கத்திலும் எனது அமைச்சின் கீழும் ஊழல் இடம்பெற அனுமதிக்க மாட்டோம். ஊழல்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்போம்.

பனை அபிவிருத்திச் சபையின் தற்போதைய தலைவர் கடந்த காலத்தில் சபையில் இடம்பெற்றிருந்த ஊழல்கள் தொடர்பாக எனது கவனத்துக்குக் கொண்டுவந்திருந்தார். கிட்டத்தட்ட நூறு மில்லியன் ரூபா வரை இந்த ஊழல் காரணமாக சபை இழந்துள்ளது.

பனை அபிவிருத்திச் சபை பணியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் வியர்வை சிந்தி உழைத்த பணமே இவ்வாறு ஓரிருவருக்கு சொந்தமாகச் சென்றடைந்துள்ளது.


இவ்வாறு கடந்த காலத்தில் ஊழல் காரணமாக இழக்கப்பட்ட பணமானது பனை அபிவிருத்திச் சபைக்குக் கிடைக்கவேண்டிய பணம். அதன் மூலம் பணியாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கியிருக்க முடியும்.

தொழிலாளர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியிருக்க முடியும்.

எமக்கு குறிப்பிட்ட கால அவகாசம் தந்தால் ஊழல்களை ஒழித்து பணியாளர்களுடைய வாழ்க்கைத் தரத்தையும் உற்பத்திகளையும் அதிகரிப்போம்' – என்றார்.

# வடமராட்சி கிழக்கு கடற்றொழில் சங்கங்களுக்கு முக்கிய அறிவித்தல்!

பு.கஜிந்தன்



வடக்கு பிராந்திய இலங்கை கடற்படையினர் எதிர்வரும் 24ஆம் திகதியும் 27ஆம் திகதியும் பருத்தித்துறை கடலில் கடற்படை கலங்களான P475, P481 ஆகிய கலங்களிலிருந்து சூட்டுப் பயிற்சி மேற்கொள்ளவிருப்பதால் மீனவர்களை குறித்த பகுதிக்குள் பிரவேசிக்க வேண்டாமென அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை கரையோர காவற்படையின் வடக்கு பிராந்திய பணிப்பாளர் யாழ்ப்பாணம் நீரியல்வளத் திணைக்களமூடாக அனைத்து கடற்றொழில் சங்கங்களுக்கும் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்

எதிர்வரும் 24.01.2025 காலை 09.00 மணியிலிருந்து மாலை 04.00 மணிவரை

23.2NM north east of ppd

Coordinate (s)of the location

0955'N:08042E

0955N:08036E

0951N:08042E

0951N:08036E. ஆகிய கடற்பரப்புகளில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாமெனவும்

அதே போன்று எதிர்வரும் 27.01.2025 அன்று காலை 09.00 மணியிலிருந்து மாலை 04.00 மணிவரை

23.2NM north east of ppd

Coordinate (s)of the location

0955'N:08042E

0955N:08036E

0951N:08042E

0951N:08036E. குறித்த கடற்பரப்புகளில் உள்நுழைந்து மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாமெனவும் மீனவர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

# மாலிங்கவின் கில்லர் புத்தகம் வெளியீடு






இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான லசித் மாலிங்க எழுதிய கில்லர் என்ற தலைப்பிலான புத்தக வெளியீட்டு நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்றது.

மாலிங்க எழுதியுள்ள இந்தப் புத்தகத்தில் பந்துவீச்சு பற்றிய 21 விடயங்கள் உள்ளடங்கியுள்ளன. லசித் மாலிங்க எழுதிய புத்தகத்தை முதலாவதாக அவரது தந்தை, இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் ஷம்மி சில்வாவிடம் வழங்கியதுடன் பின்னர் அந்தப் புத்தகம் ஏனைய விருந்தினர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்தப் புத்தக வெளியீட்டு விழாவில் இலங்கை கிரிக்கெட் தலைவர் ஷம்மி சில்வா, அதன் அதிகாரிகள், கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர்களான சனத், அத்தப்பத்து, மஹேல, வாஸ், அஜந்த மெண்டிஸ் மற்றும் பல முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் கலந்து கொண்டனர்.




## கோ கோ உலகக்கிண்ணம் - 2025

# இரு பிரிவுகளிலும் இந்தியா சம்பியன் பட்டம் வென்று சாதனை

இந்தியாவின் தலைநகர் டில்லியில் அமைந்துள்ள இந்திராகாந்தி விளையாட்டரங்கில் நிறைவடைந்த கோ கோ உலகக்கிண்ணத் தொடரின் ஆடவர் மற்றும் மகளிர் ஆகிய இரு பிரிவுகளிலும் இந்தியா சம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்தது.

முதல் தடவையாக நடைபெற்ற குறித்த உலகக்கிண்ணத் தொடர் கடந்த 13ஆம் திகதி ஆரம்பமானது. குறித்த உலகக்கிண்ணத் தொடரில் ஆடவர் பிரிவில் 20 அணிகளும் மகளிர் பிரிவில் 19 அணிகளும் களமிறங்கின. தொடரின் இறுதிப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

ஆடவர் இறுதிப்போட்டியில் இந்திய அணி, நேபாளம் அணியுடன் மோதியது. இதில் ஆரம்பம் முதலே சிறப்பாக ஆடிய இந்திய அணி 54-36 என்ற புள்ளிக்கணக்கில் நேபாளத்தை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது.

மகளிர் இறுதிப்போட்டியில் நேபாளத்தை 78-40 என்ற புள்ளிக்கணக்கில் வீழ்த்தி இந்திய பெண்கள் அணி சம்பியன் பட்டம் வென்றது. கோ கோ உலகக்கிண்ணத்தில் இந்திய ஆடவர் மற்றும் மகளிர் அணிகள் விளையாடிய அனைத்து போட்டிகளிலும் வெற்றிகளைப் பதிவுசெய்தமை குறிப்பிடத்தக்கது.








# 2034 வரை மென்செஸ்டர் சிட்டியில் ஒப்பந்தமான ஹாலண்ட்

பிரபல உதைபந்து வீரரான நோர்வே நாட்டைச் சேர்ந்த எர்லிங் ஹாலண்ட் மென்செஸ்டர் சிட்டி கழகத்துக்காக 2034ஆம் ஆண்டு வரை விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

இதன் மூலம் எர்லிங் ஹாலண்டுக்கு ஒரு வாரத்துக்கு 5 இலட்சம் டொலர் கிடைக்குமெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எர்லிங் ஹாலண்ட் கழகப் போட்டிகள், மென்செஸ்டர் சிட்டி அணி வரலாற்றிலும் அதிகமாக சம்பளம் வாங்கும் நபராக சாதனை படைத்துள்ளார் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டு மென்செஸ்டர் சிட்டியில் இணைந்த எர்லிங் ஹாலண்ட் இன்னும் 9 ஆண்டுகள் வரை அதாவது, எதிர்வரும் 2034ஆம் ஆண்டு வரை அவரது ஒப்பந்தம் நீடிக்கப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் முடியும்போது எர்லிங் ஹாலண்டுக்கு 34 வயதாகியிருக்கும்.

கடந்த 2019ஆம் ஆண்டு எர்லிங் ஹாலண்ட் நோர்வேயின் தேசிய அணியில் அறிமுகமானார். இதுவரையில் 36 போட்டிகளில் 33 கோல்கள் அடித்துள்ளார். 24 வயதாகும் எர்லிங் ஹாலண்ட் 41 யு.இ.எவ்.ஏ. சம்பியன்ஸ் லீக் சம்பியன்ஷிப்பில் 42 கோல்களை அடித்து சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# லக்னோ அணியின் புதிய தலைவராக பண்ட்

2025 ஐ.பி.எல். தொடரில் பங்கெடுக்கும் லக்னோ சுப்பர் ஜயன்ட்ஸ் அணியின் தலைவராக ரிஷப் பண்ட் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த நவம்பரில் இடம்பெற்ற ஏலத்தில் பண்ட், லக்னோ அணியால் ஐ.பி.எல். வரலாற்றில் அதிக விலையாக 27 கோடி இந்திய ரூபாவுக்கு வாங்கப்பட்டார்.

லக்னோ அணியின் முதல் மூன்று பருவத்திலும் கே.எல். ராகுல் தலைவராக செயற்பட்ட நிலையில், முதல் இரு தொடர்களிலும் பிளே ஓவ் வரை முன்னேறிய அந்த அணி, கடந்த ஆண்டில் ஏழாவது இடத்தையே பிடித்தது.

இந்நிலையில், பண்ட் ஐ.பி.எல் இல் இரண்டாவது அணிக்காகவே தலைவராக செயற்படவுள்ளார். முன்னர் அவர் டில்லி அணியின் தலைவராக இருந்தார். இந்நிலையில், டில்லியில் ஒப்பந்தத்தை நீடிக்காத நிலையிலேயே அவர் லக்னோ அணியால் வாங்கப்பட்டார்.

பண்ட் 2016 தொடக்கம் டில்லி அணிக்காக ஆடியதோடு 2021 ஐ.பி.எல். தொடக்கம் அந்த அணியின் தலைவராக நியமிக்கப்பட்டார். எனினும், கார் விபத்தில் காயமடைந்ததன் காரணமாக 2023 தொடரில் அவர் விளையாடவில்லை.

# மே.இ. தீவுகள் மகளிர் அணியை அபாரமாக வீழ்த்திய இலங்கைக்கு அடுத்தடுத்து வெற்றி

*(அகீல் சிஹாப்)*

மலேசியாவில் நடைபெற்றுவரும் ஐ.சி.சி. இளையோர் மகளிர் ரி20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இலங்கை அணி தங்களது இரண்டாவது ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் இளையோர் மகளிர் அணியை 81 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபாரமாக வீழ்த்தி அடுத்தடுத்து இரு வெற்றிகளைப் பதிவு செய்துள்ளது.



16 அணிகளின் பங்கேற்புடன் இரண்டாவது தடவையாக நடைபெற்றுவரும் ஐ.சி.சி. இளையோர் (19 வயதுக்குட்பட்டோருக்கான) மகளிர் ரி20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் கடந்த சனிக்கிழமை மலேசியாவில் ஆரம்பமானது. இதில் குழு ஏ யில் இடம்பிடித்துள்ள இலங்கை அணி தங்களது முதல் ஆட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை கோலாலம்பூர், பயூமாஸ் ஓவல் மைதானத்தில் வைத்து மலேசியாவை எதிர்கொண்டது. இந்த ஆட்டத்தில் இலங்கை அணி 139 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றியீட்டியது.


இந்நிலையில், இலங்கை அணி இரண்டாவது ஆட்டத்தில் நேற்று மே.இ. தீவுகள் மகளிர் அணியை எதிர்கொண்டது. போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றியீட்டிய இலங்கை மகளிர் அணி முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட் இழப்புக்கு 166 ஓட்டங்களைக் குவித்தது.

பதிலெடுத்தாடிய மே.இ.தீவுகள் மகளிர் அணி 19.4 ஓவர்களில் வெறும் 85 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்து படுதோல்வியைச் சந்தித்தது. போட்டியின் ஆட்டநாயகியாக இலங்கையின் சமோதி பிரபோதா தெரிவானார். இலங்கை அணி தங்களது கடைசி லீக் ஆட்டத்தில் நாளை இந்திய இளையோர் மகளிர் அணியை எதிர்கொள்கிறது. இந்த ஆட்டத்தில் இலங்கை அணி வெற்றியீட்டினால் நேரடியாக சுப்பர் 6 சுற்றுக்குத் தகுதிபெறும் வாய்ப்பைப் பெறும்.

# விளையாட்டுத் துளிகள்

★ ஐ.சி.சி. இளையோர் மகளிர் ரி20 உலகக்கிண்ணத் தொடரில் நியூசிலாந்தை வீழ்த்தி நைஜீரியா வரலாற்று வெற்றி பெற்றது. குறித்த தொடருக்குத் தெரிவான முதல் மேற்கு ஆபிரிக்க நாடு என்ற பெருமையுடன் முதல் தடவையாக ஐ.சி.சி. தொடரில் விளையாடும் நைஜீரியா, ஐ.சி.சியின் முழு உறுப்பு நாடான நியூசிலாந்து அணியை வீழ்த்தியது அனைவரது புருவங்களையும் உயரச் செய்துள்ளது.





★ இந்தியாவின் புது டில்லியில் நடைபெற்ற ஐ.டி.எவ்.டபிள்யூ. 50 டென்னிஸ் தொடரின் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா - பிரிட்டனின் பெயின்ஸ் ஜோடி சம்பியன் பட்டம் வென்றது.

★ 10ஆவது பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடர் எதிர்வரும் ஏப்ரலில் ஆரம்பமாகும் நிலையில், குவெட்டா கிளாடியேட்டர்ஸ் அணியின் தலைமை பயிற்சியாளரான அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் ஷேன் வொட்சன், பதவிக்காலம் முடிய ஓராண்டு மீதமிருக்கும் நிலையில் குறித்த பதவியிலிருந்து விலகியுள்ளார்.





★ நடப்பு ஆஸி. ஓபன் தொடரை வென்றால் தனது உடலில் கங்காரு படத்தை பச்சை குத்தத் தயாராக இருப்பதாக கார்லோஸ் அல்கராஸ் கூறியுள்ளார். ஏற்கனவே 2022இல் தனது முதல் பட்டமான யு.எஸ். ஓபன், இரண்டு விம்பிள்டன் வெற்றியை குறிக்க ஸ்ட்ரோபெரியையும் கடந்தாண்டு பிரெஞ்ச் ஓபன் வெற்றியைக் கொண்டாடும் விதமாக ஈகிள் டவரையும் அல்கராஸ் பச்சை குத்தியது குறிப்பிடத்தக்கது.

# ரொக்கெட்டை உடைத்த மேத்வதேவுக்கு அபராதம்



அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியின்போது மைதானத்தில் டென்னிஸ் ரொக்கெட்டை உடைத்ததற்காக ரஷ்ய வீரர் டேனியல் மேத்வதேவுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் மேத்வதேவ், தாய்லாந்தின் காசிடிட் சாம்ராஜே வீழ்த்தினார். அப்போது வெற்றி பெற்ற மகிழ்ச்சியில் தனது டென்னிஸ் ரொக்கெட்டை மைதானத்தில் போட்டு உடைத்தார். இதைத் தொடர்ந்து 2ஆவது சுற்று ஆட்டத்தில் மேத்வதேவ், தோல்வி நிலையில் இருந்தபோது தனது டென்னிஸ் ரொக்கெட்டை மைதானத்தில் தூக்கி வீசினார். இதையடுத்து விதிகளை மீறி நடந்துகொண்ட மேத்வதேவுக்கு மொத்தம் 76 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் அபராதத்தை அவுஸ்திரேலிய ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் அமைப்பாளர்கள் விதித்துள்ளனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7